10
ஆவது



WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# தமிழ்

## WINMEEN TEST SHEETS

- சமச்சீர் புத்தகத்தின் ஒவ்வொரு வரியிலிருந்தும் எடுக்கப்பட்ட கேள்விகள்.
- முற்றிலும் TNPSC பாடத்திட்டத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வினாக்கள்.
- அலகுவாரியாக விரைவான திருப்புதலுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டது.
- 9 இயல்கள் 1150+ கேள்விகள்.

# 10ஆம் வகுப்பு தமிழ்

# Winmeen Test Sheets

சமச்சீர் புத்தகத்தின் ஒவ்வொரு வரியில் இருந்தும் எடுக்கப்பட்ட கேள்விகள்

முற்றிலும் TNPSC பாடத்திட்டத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வினாக்கள்

இயல்வாரியாக விரைவான திருப்புதலுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டது

9 இயல்கள் 1150+ கேள்விகள்

**Winmeen E Learning**

**Email: admin@winmeen.com**

**Mobile: 6385150514**

## அர்ப்பணிப்பு

**அனைத்து போட்டித்தேர்வுகளுக்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த புத்தகத்தை போட்டித்தேர்வுக்கு பயிலும் மாணவர்களுக்காக அர்ப்பணிக்கிறோம்.**

**கொடுக்கப்பட்ட வினாக்களைப் பயிற்சி செய்து, நீங்கள் இந்த புத்தகத்தின் மூலம் போட்டித்தேர்வில் மிகப் பெரிய வெற்றியடைய வாழ்த்துக்கள்.**

| வ.எண் | பொருளடக்கம் | வினாக்கள் | பக்க எண் |
|---|---|---|---|
| | 10-ஆம் வகுப்பு - தமிழ் | | |
| 1 | இயல் 1 | 150 | 1 |
| 2 | இயல் 2 | 137 | 26 |
| 3 | இயல் 3 | 130 | 50 |
| 4 | இயல் 4 | 97 | 74 |
| 5 | இயல் 5 | 135 | 93 |
| 6 | இயல் 6 | 173 | 118 |
| 7 | இயல் 7 | 168 | 150 |
| 8 | இயல் 8 | 107 | 181 |
| 9 | இயல் 9 | 72 | 200 |
| | Total Questions | 1169 | |

| | |
|---|---|
| இயல் 1 | அன்னை மொழியே |
| | தமிழ்சொல் வளம் |
| | இரட்டுற மொழிதல் |
| | உரைநடையின் அணிநலன்கள் |
| | எழுத்து, சொல் |
| இயல் 2 | கேட்கிறதா என்குரல்! |
| | காற்றே வா! |
| | முல்லைப்பாட்டு |
| | புயலிலே ஒரு தோணி |
| | தொகைநிலைத் தொடர்கள் |
| இயல் 3 | விருந்து போற்றுதும்! |
| | காசிக்காண்டம் |
| | மலைபடுகடாம் |
| | கோபல்லபுரத்து மக்கள் |
| | தொகாநிலைத் தொடர்கள் |
| | திருக்குறள் |
| இயல் 4 | செயற்கை நுண்ணறிவு |
| | பெருமாள் திருமொழி |
| | பரிபாடல் |
| | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை |
| | இலக்கணம் – பொது |
| இயல் 5 | மொழிபெயர்ப்புக் கல்வி |
| | நீதி வெண்பா |
| | திருவிளையாடற் புராணம் |
| | புதியநம்பிக்கை |
| | வினா, விடை வகைகள், பொருள்கோள் |
| இயல் 6 | நிகழ்கலை |
| | பூத்தொடுத்தல் |
| | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் |

| | |
|---|---|
| | கம்பராமாயணம் |
| | பாய்ச்சல் |
| | அகப்பொருள் இலக்கணம் |
| | திருக்குறள் |
| இயல் 7 | சிற்றகல் ஒளி (தன்வரலாறு) |
| | ஏர் புதிதா? |
| | மெய்க்கீர்த்தி |
| | சிலப்பதிகாரம் |
| | மங்கையராய்ப் பிறப்பதற்கே... |
| | புறப்பொருள் இலக்கணம் |
| இயல் 8 | சங்க இலக்கியத்தில் அறம் |
| | ஞானம் |
| | காலக்கணிதம் |
| | இராமானுசர் (நாடகம்) |
| | பா-வகை, அலகிடுதல் |
| இயல் 9 | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) |
| | சித்தாளு |
| | தேம்பாவணி |
| | ஒருவன் இருக்கிறான் |
| | அணி |
| | திருக்குறள் |

# 10th Tamil Questions - Unit 1

1. "அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!

முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!

கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்

மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!"

என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல்?

A) தமிழ் விடு தூது

**B) கனிச்சாறு**

C) நூறாசிரியம்

D) பாவியக்கொத்து

**(விளக்கம்: பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பில் இடம்பெற்றுள்ளது)**

2. "செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை

எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?

முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்

விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்"

என்ற பாடலை இயற்றியவர் யார்?

A) பாரதிதாசன்

B) நாமக்கல் கவிஞர்

C) முடியரசன்

**D) பெருஞ்சித்திரனார்**

**(விளக்கம்: பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பில் இடம்பெற்றுள்ளது)**

3. "சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் – என்றன்

சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" என்று கூறியவர் யார்?

A) இரசூல் கம்சதேவ்

B) பாரதிதாசன்

**C) சச்சிதானந்தன்**

D) ஆறுமுக நாவலர்

4. "தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"

என்ற பாடலை இயற்றியவர் யார்?

A) கனக சுப்புரத்தினம்

B) எத்திராசலு

C) துரைராசு

**D) துரை. மாணிக்கம்**

5. பெருஞ்சித்திரனார் கீழ்க்கண்ட எந்த இதழ்களின் மூலம் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்?

1. தென்மொழி 2. தமிழ்நிலம்

3. தமிழ்சிட்டு 4. தென்றல்

A) 1, 2 சரி

**B) 1, 3 சரி**

C) 1, 4 சரி

D) 2, 4 சரி

6. கீழ்க்கண்டவற்றுள் பெருஞ்சித்திரனார் எழுதிய நூல்கள் எவை?

1. உலகியல் நூறு 2. பாவியக்கொத்து

3. நூறாசிரியம் 4. மகபுகுவஞ்சி

5. பள்ளிப் பறவைகள்

**A) அனைத்தும் சரி**

B) 2, 3, 5 சரி

C) 1, 3, 4 சரி

D) 1, 4, 5 சரி

7. பெருஞ்சித்திரனாரின் எந்த நூல் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது.

A) திருக்குறள் உரை

B) திருக்குறள் ஞான உரை

**C) திருக்குறள் மெய்ப்பொருளுரை**

D) திருக்குறள் மெய்யுரை

**(விளக்கம்: பெருஞ்சித்திரனாரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.)**

8. "செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த

அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி

முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித் தமிழே!"

என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?

A) தமிழ் விடு தூது

**B) கனிச்சாறு**

C) கொய்யாக்கனி

D) பாவியக்கொத்து

9. 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்று கூறியவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) நாமக்கல் கவிஞர்

D) பேரறிஞர் அண்ணா

10. "தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும் போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாக தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டு தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள" என்று கூறியவர் யார்?

A) ஜி.யு.போப்

B) வீரமாமுனிவர்

**C) கால்டுவெல்**

D) திரு.வி.க

**(விளக்கம்: திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் கால்டுவெல் கூறியது)**

11. கீழ்க்கண்ட தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்களில் எது தவறானது?

A) தாள் – நெல், கேழ்வரகு

B) தண்டு – கீரை, வாழை

C) கோல் – நெட்டி, மிளகாய்ச் செடி

**D) தூறு – மூங்கிலின் அடி**

**(விளக்கம்: தூறு – குத்துச் செடி, புதர்)**

12. கீழ்க்கண்ட தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்களில் எது தவறானது?

1. தட்டு அல்லது தட்டை – கம்பு, சோளம்

2. கழி – மூங்கிலின் அடி

3. கழை – கரும்பின் அடி

4. அடி – புளி, வேம்பு

A) 1, 3

B) 1, 4

**C) 2, 3**

D) 2, 4

**(விளக்கம்:**

**• கழி – கரும்பின் அடி**

**• கழை – மூங்கிலின் அடி)**

13. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களில் எது தவறானது?

A) கவை – அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை

**B) கிளை – கவையின் பிரிவு**

C) சினை – கிளையின் பிரிவு

D) போத்து – சினையின் பிரிவு

**(விளக்கம்:**

**• கொம்பு அல்லது கொப்பு – கவையின் பிரிவு**

**• கிளை – கொம்பின் பிரிவு)**

14. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களில் எது தவறானது?

1. குச்சு – போத்தின் பிரிவு

2. இணுக்கு – குச்சியின் பிரிவு

3. கொப்பு – கவையின் பிரிவு

A) 1, 2

B) 1 மட்டும்

C) 2 மட்டும்

**D) எதுவுமில்லை**

15. கீழ்க்கண்ட காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களில் எது தவறானது?

A) கட்டை – காய்ந்த கொம்பும் கவையும் அடியும்

B) சுள்ளி – காய்ந்த குச்சி

**C) விறகு – காய்ந்த கிளை**

D) வெங்கழி – காய்ந்த கழி

**(விளக்கம்: விறகு – காய்ந்த சிறுகிளை)**

16. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை சரியான இணையுடன் பொருத்துக.

1. இலை – i) புளி, வேம்பு

2. தாள் – ii) நெல், புல்

3. தோகை – iii) தென்னை, பனை

4. ஓலை – iv) சோளம், கரும்பு

A) i ii iii iv

B) i iii ii iv

**C) i ii iv iii**

D) ii i iv iii

17. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. சண்டு – காய்ந்த இலை

2. சருகு – காய்ந்த தாளும் தோகையும்

**A) இரண்டும்**

B) 1 மட்டும்

C) 2 மட்டும்

D) எதுவுமில்லை

**(விளக்கம்:**

**• சண்டு – காய்ந்த தாளும் தோகையும்**

**• சருகு – காய்ந்த இலை)**

18. கீழ்க்கண்ட தாவரத்தின் நுனிப் பகுதிகளைக் குறிக்கும் சொற்களில் தவறானது எது?

A) கொழுந்தாடை – கரும்பின் நுனிப் பகுதி

B) துளிர் – நெல், புல் முதலியவற்றின் கொழுந்து

**C) முறி – மூங்கில், நாணல் முதலியவற்றின் கொழுந்து**

D) குருத்து – சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து

**(விளக்கம்: முறி அல்லது கொழுந்து – புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து)**

19. பூவின் நிலைகளை குறிக்கும் சொற்களை ஆராய்க.

1. அரும்பு – பூவின் தோற்றநிலை

2. போது – பூ விரியத் தொடங்கும் நிலை

3. அலர் – பூவின் மலர்ந்த நிலை

4. வீ – பூ வாடின நிலை

5. செம்மல் – பூ வாடின நிலை

A) 1, 2, 3 தவறு

**B) 4, 5 தவறு**

C) 3, 4 தவறு

D) 1, 5 தவறு

**(விளக்கம்:**

**• செம்மல் – பூ வாடின நிலை**

**• வீ – பூ வாடின நிலை)**

20. சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

A) வீரமாமுனிவர்

B) ஆறுமுக நாவலர்

C) பெருங்குமரனார்

**D) இளங்குமரனார்**

21. தமிழ்த்திரு இரா.இளங்குமரனார் திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவிய இடம்

A) நெல்லூர்

B) மேலூர்

**C) அல்லூர்**

D) பாலூர்

**(விளக்கம்: அல்லூர் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ளது)**

22. இரா.இளங்குமரனார் குறித்த கூற்றுகளில் எது தவறானது?

A) பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்

B) தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கி வருபவர்

C) தமிழ்வழி திருமணங்களை நடத்தி வருபவர்

**D) இசையாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்**

**(விளக்கம்: நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்)**

23. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்து விடக் கூடாது என்று எண்ணியவர் யார்?

A) திரு.வி.க

**B) இரா. இளங்குமரனார்**

C) இளங்குமணன்

D) மீனாட்சி சுந்தரனார்

24. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலை கொண்டவர் யார்?

A) மீனாட்சி சுந்தரனார்

B) ஆறுமுகநாவலர்

**C) திரு.வி.க**

D) உ.வே.சா

25. தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் யார்?

A) அண்ணா

**B) இரா.இளங்குமரனார்**

C) இளங்குமணன்

D) மீனாட்சி சுந்தரனார்

26. கீழ்காண்பனவற்றுள் இளங்குமரனார் எழுதிய நூல்கள் எவை?

1. குண்டலகேசி உரை 2. யாப்பருங்கலம் உரை

3. புறத்திரட்டு உரை 4. திருக்குறள் தமிழ் மரபுரை

5. காக்கைப் பாடினிய உரை

**A) அனைத்தும்**

B) 1, 2, 4

C) 2, 4, 5

D) 1, 3, 4

27. இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித் தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு முதலிய நூல்களை எழுதியவர் யார்?

A) திரு.வி.க

B) மீனாட்சி சுந்தரனார்

C) மு.வ

**D) இளங்குமரனார்**

28. தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்களில் எது தவறானது?

A) பூம்பிஞ்சு – பூவோடு கூடிய இளம்பிஞ்சு

B) பிஞ்சு – இளம் காய்

**C) கவ்வை – சிறுபிஞ்சு**

D) வடு – மாம்பிஞ்சு

**(விளக்கம்: கவ்வை – எள்பிஞ்சு)**

29. கீழ்க்கண்ட தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்களில் சரியானது எது / எவை?

1. மூசு – பலாப்பிஞ்சு

2. குரும்பை – முற்றாத தேங்காய்

3. முட்டுக்குரும்பை – சிறு குரும்பை

4. இளநீர் – தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு

A) அனைத்தும் சரி

**B) 1, 3 சரி**

C) 2, 4 சரி

D) 1, 2, 3 சரி

**(விளக்கம்:**

**• இளநீர் – முற்றாத தேங்காய்**

**• குரும்பை – தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு)**

30. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. நுழாய் – இளநெல்

2. கருக்கல் – இளம்பாக்கு

3. கச்சல் – வாழைப் பிஞ்சு

**A) 1, 2**

B) 2, 3

C) 1, 3

D) எதுவுமில்லை

**(விளக்கம்:**

**• நுழாய் – இளம்பாக்கு**

**• கருக்கல் – இளநெல்)**

31. தாவரங்களின் குலை வகைகளைக் குறிக்கும் சொற்களில் எது தவறானது?

A) கொத்து – அவரை, துவரை முதலியவற்றின் குலை

**B) குலை – வாழைக்குலை**

C) கதிர் – கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்

D) சீப்பு – வாழைத்தாற்றின் பகுதி

**(விளக்கம்: குலை – கொடி முந்திரி போன்றவற்றின் குலை)**

32. கீழ்க்காணும் தாவரங்களின் குலை வகைகளைக் குறிக்கும் சொற்களை ஆராய்க.

1. தாறு – வாழைக்குலை

2. அலகு குரல் – நெல், தினை முதலியவற்றின் கதிர்

3. குரல் – நெல், தினை முதலியவற்றின் கதிர்

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 1, 3 சரி

D) 2, 3 சரி

33. பொருத்துக

1. சூம்பல் – i) நுனியில் சுருங்கிய காய்

2. சிவியல் – ii) சுருங்கிய பழம்

3. சொத்தை – iii) புழு பூச்சி அரித்த காய் அல்லது கனி

4. வெம்பல் – iv) சூட்டினால் பழுத்த பிஞ்சு

A) iv iii ii i

**B) i ii iii iv**

C) ii i iv iii

D) iv ii i iii

34. கீழ்க்காணும் கெட்டுப் போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்களில் தவறானது எது?

A) அளியல் – குளு குளுத்த பழம்

B) அழுகல் – குளு குளுத்து நாளிய பழம் அல்லது காய்

**C) சொண்டு – சுருங்கிய பழம்**

D) ஒல்லிக்காய் – தென்னையில் கெட்ட காய்

(விளக்கம்: சொண்டு – பதராய்ப் போன மிளகாய்)

35. பின்வருவனவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடு

1. கூகைக்காய் – கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்

2. தேரைக்காய் – தேரை அமர்ந்ததினால் கெட்ட காய்

3. அல்லிக்காய் – தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1 மட்டும் சரி

36. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்களில் எது தவறானது?

**A) தோல் – மிக மெல்லியது**

B) தோடு – வன்மையானது

C) ஒடு – மிக வன்மையானது

D) குடுக்கை – சுரையின் ஓடு

**(விளக்கம்: தோல் – திண்ணமானது)**

37. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்களில் எது சரி?

A) மட்டை – மிக மெல்லியது

B) தொலி – தேங்காய் நெற்றின் மேற்பகுதி

**C) கொம்மை – வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி**

D) தோடு – நெல், கம்பு முதலியவற்றின் மூடி

**(விளக்கம்:**

**• மட்டை – தேங்காய் நெற்றின் மேற்பகுதி**

**• தொலி – மிக மெல்லியது**

**• உமி – நெல், கம்பு முதலியவற்றின் மூடி)**

38. தானியங்களுக்கு வழங்கும் சொற்களில் எது தவறானது?

A) கூலம் – நெல், புல் (கல்) முதலிய தானியங்கள்

B) பயறு – அவரை, உளுந்து முதலியவை

C) கடலை – வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை

**D) விதை – வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து**

**(விளக்கம்: விதை – கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து)**

39. புளி, காஞ்சிரை முதலியவற்றின் வித்துகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) முத்து

**B) காழ்**

C) கொட்டை

D) முதிரை

40. தானியங்களுக்கு வழங்கும் சொற்களில் தவறான இணையைத் தேர்ந்தெடு?

A) முத்து – வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து

B) தேங்காய் – தென்னையின் வித்து

**C) கொட்டை – புளி, காஞ்சிரை முதலியவற்றின் வித்து**

D) முதிரை – அவரை, துவரை முதலிய பயறுகள்

**(விளக்கம்: கொட்டை – மா, பனை முதலியவற்றின் வித்து)**

41. தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களில் தவறானது எது?

A) நாற்று – நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை

B) கன்று – மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை

**C) குருத்து – தென்னையின் இளநிலை**

D) பிள்ளை – தென்னையின் இளநிலை

**(விளக்கம்: குருத்து – வாழையின் இளநிலை)**

42. சரியான இணையைத் தேர்ந்தெடு

1. குட்டி – விளாவின் இளநிலை

2. மடலி – பனையின் இளநிலை

3. வடலி – பனையின் இளநிலை

4. பைங்கூழ் – நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர்

**A) அனைத்தும் சரி**

B) 1, 2, 4 சரி

C) 1, 3, 4 சரி

D) 2, 3 சரி

43. ஒரு மொழி____மக்களாலும் அதன் இலக்கியம் ______மக்களாலும் அமையப்பெறும்.

A) புல, பொது

**B) பொது, புல**

C) பொது, அரச

D) அரச, பொது

44. தாள், தோகை, ஓலை என்பன எந்த உறுப்பின் பாகுபாடுகள்

A) மலர்

**B) இலை**

C) கனி

D) தண்டு

45. கீழ்வருனவற்றுள் நெல்லின் வகைகளில் அல்லாதது எது?

1. சம்பா 2. மட்டை 3. கார்

4. கார்நெல் 5. வெண்ணெல் 6. செந்நெல்

**A) அனைத்தும் சரி**

B) 2, 3 தவறு

C) 2, 4 தவறு

D) 2, 3, 5 தவறு

46. சம்பா என்ற நெல் வகையில் எத்தனை உள்வகைகள் உள்ளன?

A) 40

**B) 60**

C) 90

D) 100

47. கீழ்வருவனவற்றுள் சம்பாவின் நெல் வகைகளில் அல்லாதது எது?

1. ஆவிரம் பூச்சம்பா 2. ஆனைக்கொம்பன் சம்பா 3. குண்டுச் சம்பா

4. குதிரைவாலிச் சம்பா 5. சிறுமணிச்சம்பா 6. சீரகச் சம்பா

**A) அனைத்தும் சரி**

B) 2, 3 தவறு

C) 1, 2, 3 தவறு

D) 1 மட்டும் தவறு

48. "உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே " என்று கூறியவர் யார்?

A) இராமலிங்கனார்

B) அய்யாத்துரையார்

**C) அப்பாத்துரையார்**

D) துரை. மாணிக்கம்

**(விளக்கம்: க. அப்பாத்துரையார் பன்மொழிப் புலவர் என அழைக்கப்படுகிறார்.)**

49. கீழ்வருவனவற்றுள் தென்றமிழ் நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் எவை?

1. வரகு 2. காடைக்கண்ணி 3. குதிரைவாலி

4. மட்டை

A) அனைத்தும் சரி

**B) 1, 2, 3 சரி**

C) 2, 3, 4 சரி

D) 2, 3 சரி

50. திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது _______. அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.

A) நூல்கள்

B) இலக்கணம்

**C) மொழி**

D) நாடகங்கள்

51. பாவாணர் _____ கட்டுரையில் வித்துவகை, வேர் வகை, அரித்தாள்வகை, காய்ந்த இலைவகை போன்ற பல்வேறு பொருட்களின் வகைகளை பற்றி கூறியுள்ளார்.

A) தமிழ்வளம்

B) தமிழ்ச்சொல்

**C) தமிழ்ச்சொல்வளம்**

D) சொல்வளம்

52. மொழிஞாயிறு என அழைக்கப்படுபவர் யார்?

A) தாராபாரதி

**B) தேவநேயப் பாவாணர்**

C) பரிதிமாற் கலைஞர்

D) முடியரசன்

53. தேவநேயப் பாவாணரின் 'தமிழ்ச் சொல்வளம்' என்னும் கட்டுரை எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) தமிழாய்வுக் கட்டுரைகள்

**B) சொல்லாய்வுக் கட்டுரைகள்**

C) தமிழாராய்ச்சிக் கட்டுரைகள்

D) சொல் ஆராய்ச்சி கட்டுரைகள்

54. பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதி தமிழ் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர் யார்?

A) பரிதிமாற் கலைஞர்

**B) தேவநேயப் பாவாணர்**

C) அறிஞர் அண்ணா

D) பெரியார்

55. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக பணியாற்றியவரும் உலகத் தமிழ் கழகத்தை நிறுவி தலைவராக இருந்தவர் யார்?

A) சாலை. இளந்திரையனார்

B) பரிதிமாற் கலைஞர்

**C) தேவநேயப் பாவாணர்**

D) உ.வே.சா

56. கார்டிலா எனும் நூல் முதன் முதலில் தமிழ் மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்ட ஆண்டு

**A) 1554**

B) 1555

C) 1556

D) 1557

57. போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில் தமிழ் மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்ட நூல் _______வரி வடிவில் அச்சிடப்பட்டுள்ளது.

A) ஆங்கிலம்

B) எகிப்தியம்

**C) ரோமன்**

D) கிரேக்கம்

**(நூலின் பெயர்: carthila de lingoa tamul e portugues)**

58. இந்திய மொழிகளிலேயே மேலை நாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி _____.

A) சமஸ்கிருதம்

B) மலையாளம்

C) தெலுங்கு

**D) தமிழ்**

59. Carthila de lingoa tamul e portugues என்னும் நூல் எத்தனை வண்ணங்களில் மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.

**A) 2**

B) 3

C) 4

D) 5

**(விளக்கம்: கறுப்பு, சிவப்பு ஆகிய வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளது.)**

60. கீழ்வருவனவற்றுள் 'சொல்லுதல்' எனும் பொருள் தரும் சொற்கள் எவை?

1. விளம்புதல் 2. செப்புதல் 3. உரைத்தல்

4. கூறல் 5. இயம்பல்

**A) அனைத்தும் சரி**

B) 3, 4, 5 சரி

C) 2, 4, 5 சரி

D) 1, 3, 4 சரி

61. "நித்தம் அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு

இணைகிடந்த தேதமிழ் ஈண்டு" என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

A) தமிழ் விடு தூது

**B) தனிப்பாடல் திரட்டு**

C) முக்கூடற் பள்ளு

D) திருவள்ளுவ மாலை

62. "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்"

– அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

1. விளம்புதல் 2. கற்பது 3. தருதல்

4. வாங்குவது

A) 1, 2

**B) 2, 3**

C) 3, 4

D) 1, 4

**(விளக்கம்: தனிப்பாடல் திரட்டு நூலில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளது)**

63. " மெத்த வணிகலமும் மேவலால் "

– அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

1. பொருந்துதல் 2. பெறுதல் 3. தருதல் 4. பிரிதல்

**A) 1, 2**

B) 2, 3

C) 3, 4

D) 1, 4

**(விளக்கம்: தனிப்பாடல் திரட்டு நூலில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளது)**

64. 'முச்சங்கம்' என தனிப்பாடல் திரட்டில் குறிப்பிடப்படும் மூன்று சங்குகள் எவை?

1. வெண்சங்கு 2. வலம்புரி சங்கு 3. சலஞ்சலம்

4. பாஞ்சசன்யம்

A) 1, 2, 3

B) 2, 3, 4

**C) 1, 3, 4**

D) 1, 2, 4

65. ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது _____அணி எனப்படும்.

A) பிறிது மொழிதல் அணி

B) உவமை அணி

C) எடுத்துக்காட்டுவமையணி

**D) சிலேடை அணி**

**(விளக்கம்: இரட்டுற மொழிதல் அணி சிலேடை அணி என்றும் அழைக்கப்படுகிறது.)**

66. சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

A) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

B) பெரியவன் கவிராயர்

**C) தமிழழகனார்**

D) அழகிய பெரியவன்

67. கீழ்க்கண்டவர்களுள் சண்முகசுந்தரம் என்ற இயற்பெயர் கொண்டவர் யார்?

A) சண்முகசிகாமணிக் கவிராயர்

B) குமரகுருபரர்

C) சுந்தரம்பிள்ளை

**D) தமிழழகனார்**

68. சந்தக் கவிமணி தமிழழகனார் எத்தனை சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்?

A) 11

**B) 12**

C) 13

D) 14

69. "காலையிலேயே மாலையும் வந்து விட்டதே" என்று கூறியவர் யார்?

**A) கி.வா.ஜகந்நாதன்**

B) இசை விமர்சகர் சுப்புடு

C) கி.ஆ.பெ.விசுவநாதன்

D) சுரதா

70. " அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்" என்று சிலேடை நயத்தில் இசை நிகழ்ச்சியை விமரிசனம் செய்தவர் யார்?

A) கி.வா.ஜகந்நாதன்

**B) சுப்புடு**

C) கி.ஆ.பெ.விசுவநாதன்

D) சுரதா

71. "இவர் பல்துறை வித்தகர்" என்று பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பரை அறிமுகம் செய்தவர் யார்?

A) கி.வா.ஜகந்நாதன்

B) சுப்புடு

**C) கி.ஆ.பெ.விசுவநாதன்**

D) சுரதா

72. உணர்ச்சிகளை காட்ட ______ கொண்ட மொழிநடையே ஏற்ற கருவி.

**A) உவமை**

B) உவமேயம்

C) உரிச்சொல்

D) அணி

73. குறிஞ்சி மலர் என்ற நூலை இயற்றியவர் யார்?

A) ஈரோடு தமிழன்பன்

B) கபிலர்

**C) நா.பார்த்தசாரதி**

D) பாரதிதாசன்

74. "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர் நிறைந்த கண்மாய்கள்" என்று உவமையை பயன்படுத்தியவர் யார்?

A) ஈரோடு தமிழன்பன்

B) கல்கி

**C) நா. பார்த்தசாரதி**

D) சுரதா

**(விளக்கம்: குறிஞ்சி மலர் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.)**

75. திருவள்ளுவர் என்ற பெயரில் முதல் தமிழ் கணினியை பி.சி.எம். டேட்டா புரொடக்ட்ஸ் என்னும் நிறுவனம் விற்பனைக்கு கொண்டு வந்த ஆண்டு

A) 1973 செப்டம்பர்

B) 1973 அக்டோபர்

**C) 1983 செப்டம்பர்**

D) 1983 அக்டோபர்

76. சென்னை தேனாம்பேட்டையில் இருந்த புள்ளி விவரத் துறை அலுவலகத்திற்கும் தலைமை செயலகத்துக்கும் கோப்புகளையும் செய்திகளையும் பறிமாறிக் கொண்ட முதல் நேர்வழிக் கணினி எது?

A) தமிழ் மறை

B) திருக்குறள்

C) நாயனார்

**D) திருவள்ளுவர்**

77. திருவள்றவர் கணினி எந்தெந்த மொழிகளை கையாளக் கூடியதாக அமைந்தது

A) தமிழ், சமஸ்கிருதம்

B) தமிழ், மலையாளம்

**C) தமிழ், ஆங்கிலம்**

D) தமிழ், தெலுங்கு

78. 'உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்' என்று உருவகத்தை பற்றி எழுதியவர் யார்?

A) குன்னூர்க் கிழார்

B) தொல்காப்பியர்

**C) தண்டி**

D) நக்கீரர்

79. இன்றைய இலக்கியங்களில் _____ ஐ விட _______ உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றது.

A) உருவகம், உவமை

**B) உவமை, உருவகம்**

C) உவமை, உவமேயம்

D) உவமேயம், உவமை

80. "களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைத்தான் அதற்குச் சான்று " என்பது யாருடைய உரைநடை

A) பெரியார்

**B) அண்ணா**

C) திரு.வி.க

D) மீனாட்சி சுந்தரனார்

81. உவம உருபு மறைந்து வந்தால் அதற்கு ______அணி என்று பெயர்.

A) உவமையணி

B) உருவக அணி

**C) எடுத்துக்காட்டுவமை அணி**

D) பிறிது மொழிதல் அணி

82. " புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

வாய்மையால் காணப் படும் "

இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி

A) உவமையணி

B) உருவக அணி

**C) எடுத்துக்காட்டுவமை அணி**

D) பிறிது மொழிதல் அணி

83. எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் _____ என்கிறோம்.

A) இணை அணி

B) ஒப்பு அணி

C) இணைபொழிப்பு

**D) இணை ஒப்பு**

84. 'மழையும புயலும்' என்ற நூலை எழுதியவர் யார்?

A) நா.பார்த்சாரதி

B) தண்டி

**C) வ.ராமசாமி**

D) திரு.வி.க

85. "ஊர் கூடிச் செக்கு தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள், ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது. புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என்று கூறியவர் யார்?

A) நா.பார்த்தசாரதி

B) தண்டி

**C) வ.ராமசாமி**

D) திரு.வி.க

**(விளக்கம்: 'மழையும் புயலும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.)**

86. "ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்" என்று எழுதும் திறத்தை குறிப்பிட்டுள்ளவர் யார்?

A) அகத்தியர்

**B) தொல்காப்பியர்**

C) கம்பர்

D) கபிலர்

**(விளக்கம்: செய்யுளியல், 192)**

87. உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வது இணையத் தமிழன் காலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) இணை ஒப்பு

**B) இலக்கணை**

C) ஒப்பு எல்லை

D) இலக்கணம்

88. "மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்று முற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும் " என்று எழுதியவர் யார்?

A) நா. பார்த்தசாரதி

B) தண்டி

C) வ.ராமசாமி

**D) திரு.வி.க**

**(விளக்கம்: திரு.வி.க தமிழ் தென்றல் என அழைக்கப்படுகிறார்.)**

89. தமிழின்பம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) நா.பார்த்சாரதி

**B) ரா.பி.சேதுப்பிள்ளை**

C) வ.ராமசாமி

D) திரு.வி.க

90. " தென்றல் அசைந்து வரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலை வளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும் நறுமணங் கமழும்! கோல மாமயில் தோகை விரித்தாடும்" என்று எழுதியவர் யார்?

A) நா.பார்த்சாரதி

**B) ரா.பி.சேதுப்பிள்ளை**

C) வ.ராமசாமி

D) திரு.வி.க

**(விளக்கம்: தமிழின்பம் நூலில் ரா.பி.சேதுப்பிள்ளை எழுதியுள்ளார்.)**

91. "நாட்டுப்பற்று" என்னும் கட்டுரைத் தொகுப்பு யாருடையது?

**A) மு.வ**

B) ரா.பி.சேதுப்பிள்ளை

C) வ.ராமசாமி

D) திரு.வி.க

92. " வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள் பல வேண்டும். அரிசி, காய், கனி முதலியவை வேண்டும். உடை, வீடு முதலியவை வேண்டும். காசும் காகித நோட்டும் வேண்டும். இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்" எழுதியவர் யார்?

**A) மு.வ**

B) ரா.பி.சேதுப்பிள்ளை

C) வ.ராமசாமி

D) திரு.வி.க

**(விளக்கம்: நாட்டுப்பற்று என்ற கட்டுரை தொகுப்பில் எழுதியுள்ளார்.)**

93. படிப்பவருக்கு முரண்படுவது போல இருக்கும்; உண்மையில் முரண்படாத – மெய்ம்மையைச் சொல்லுவது ____ எனப்படும்.

A) இணை ஒப்பு

B) இலக்கணை

C) ஒப்பு எல்லை

**D) முரண்படு மெய்ம்மை**

94. "இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்பட வேண்டும்?" என்பது கீழ்க்கண்ட எதற்கு எடுத்துக்காட்டு

A) இணை ஒப்பு

B) இலக்கணை

C) ஒப்பு எல்லை

**D) முரண்படு மெய்ம்மை**

95. "கலப்பில்லாத பொய்" என முரண்பட்ட சொல்லை சேர்த்து எழுதுவது _____ எனப்படும்.

A) எதிரிணை இசைவு

B) இலக்கணை

**C) சொல்முரண்**

D) முரண்படு மெய்ம்மை

96. சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவது _______ எனப்படும்.

**A) எதிரிணை இசைவு**

B) இலக்கணை

C) சொல்முரண்

D) முரண்படு மெய்ம்மை

97. " குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒரு பக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்; மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்; கேடுகெட்ட இந்த சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்!" என்று எழுதியவர் யார்?

A) மு.வ

B) ரா.பி.சேதுப்பிள்ளை

**C) ப.ஜீவானந்தம்**

D) திரு.வி.க

**(விளக்கம்: இந்த வரிகள் எதிரிணை இசைவுக்கு எடுத்துக்காட்டு)**

98. "அவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எந்த புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது? எனவே தான் பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் – ஒரு காலகட்டம் – ஒரு திருப்பம் என்று கூறுகிறேன்" என்று பெரியாரை புகழ்ந்தவர் யார்?

A) சுரதா

**B) அண்ணா**

C) எம்.ஜி.ஆர்

D) கருணாநிதி

99. "இந்தியாதான் என்னுடைய மோட்சம்; இந்தியாவின் நன்மைதான் என் நன்மை. இந்தியாதான் என் இளமையின் மெத்தை என் யௌவனத்தின் நந்தவனம்; என்கிழக்காலத்தின் காசி" என்று கூறியவர் யார்?

A) அண்ணா

B) பெரியார்

**C) பாரதியார்**

D) பாரதிதாசன்

100. 'உரைநடையின் அணிநலன்கள்' என்னும் கட்டுரை _______ நூலில் அமைந்துள்ளது.

A) உரைநடை உலகம்

B) இணைய உலகம்

C) இணையம்

**D) புதிய உரைநடை**

**(விளக்கம்: புதிய உரைநடை – எழில் முதல்வன்)**

101. மா. இராமலிங்கம் (எ) எழில் முதல்வன் எந்த நூலுக்காக சாகித்திய அகாடெமி பரிசு பெற்றார்

A) இனிக்கும் நினைவுகள்

B) எங்கெங்கு காணினும்

C) யாதுமாகி நின்றாய்

**D) புதிய உரைநடை**

102. இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய் முதலிய நூல்களை இயற்றியவர் யார்?

A) மு.வ

B) ஜீவானந்தம்

C) பெரியார்

**D) மா. இராமலிங்கம்**

103. மாநிலக் கல்லூரியில் பேராசிரியராகவும் குடந்தை அரசு ஆடவர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த் துறைத் தலைவராக பணி செய்தவர் யார்?

A) மு.வ

B) ஜீவானந்தம்

C) பெரியார்

**D) மா. இராமலிங்கம்**

104. "வாழையும் கமுகும் தாழ்குலைத்தெங்கும்
மாவும் பலாவும் சூழ் அடுத்து ஓங்கி
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்"
என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

**A) சிலப்பதிகாரம்**

B) மணிமேகலை

C) சீவக சிந்தாமணி

D) மதுரைக் காஞ்சி

**(விளக்கம்: சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் அமைந்துள்ளது)**

105. 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' என்ற இலக்கியத் தொடரில் அமைந்துள்ள நயம்

**A) உவமை**

B) உருவகம்

C) மோனை

D) எதுகை

106. மொழியை தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது _____.

A) இலக்கியம்

**B) இலக்கணம்**

C) செய்யுள்

D) செய்யுள் உறுப்புகள்

107. அளபெடுத்தல் என்பதன் பொருள் _____

**A) நீண்டு ஒலித்தல்**

B) குறுகி ஒலித்தல்

C) வாய்ப்பாடு

D) அசை

108. செய்யுளில் ஓசை குறையும் போது, அதனை நிறைவு செய்ய, மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலித்து அதை குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வருவது ____ எனப்படும்.

A) ஒற்றளபெடை

**B) உயிரளபெடை**

C) ஐகாரக் குறுக்கம்

D) ஔகாரக் குறுக்கம்

109. உயிரளபெடை எத்தனை வகைப்படும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

110. செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளிப்படுத்தல் _______ அளபெடை என்பர்

**A) செய்யுளிசை அளபெடை**

B) இன்னிசை அளபெடை

C) சொல்லிசை அளபெடை

D) ஒற்றளபெடை

111. இசை நிறை அளபெடை என அழைக்கப்படும் அளபெடை எது?

**A) செய்யுளிசை அளபெடை**

B) இன்னிசை அளபெடை

C) சொல்லிசை அளபெடை

D) ஒற்றளபெடை

112. செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது _____ ஆகும்

A) செய்யுளிசை அளபெடை

**B) இன்னிசை அளபெடை**

C) சொல்லிசை அளபெடை

D) ஒற்றளபெடை

113. "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை "

இதில் அடிகோடிட்ட சொற்களில் பயின்று வந்துள்ள அளபெடை

A) செய்யுளிசை அளபெடை

**B) இன்னிசை அளபெடை**

C) சொல்லிசை அளபெடை

D) ஒற்றளபெடை

114. செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாக திரிந்து அளபெடுப்பது _____ அளபெடை.

A) செய்யுளிசை அளபெடை

B) இன்னிசை அளபெடை

**C) சொல்லிசை அளபெடை**

D) ஒற்றளபெடை

115. " உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்

வரனசைஇ இன்னும் உளேன்"

இதில் அடிகோடிட்ட சொற்களில் பயின்று வந்துள்ள அளபெடை

A) செய்யுளிசை அளபெடை

B) இன்னிசை அளபெடை

**C) சொல்லிசை அளபெடை**

D) ஒற்றளபெடை

116. சரியான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக – நசை

A) துன்பம்

B) இன்பம்

C) வெறுப்பு

**D) விருப்பம்**

117. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகள் மற்றும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ______ அளபெடை.

A) செய்யுளிசை அளபெடை

B) இன்னிசை அளபெடை

C) சொல்லிசை அளபெடை

**D) ஒற்றளபெடை**

118. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

**A) 10**

B) 11

C) 12

D) 13

119. கீழ்வருவனவற்றுள் ஒற்றளபெடையில் அளபெடுக்காத மெய்யெழுத்து எது?

A) ய்

B) ல்

**C) ர்**

D) ள்

**(விளக்கம்: ஒற்றளபெடையில் அளபெடுக்காத மெய்யெழுத்துகள் – ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்)**

120. ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது ________ ஆகும்.

A) அசை

B) சீர்

C) தளை

**D) சொல்**

121. கீழ்க்கண்ட சொல் குறித்த கூற்றுகளில் தவறானது எது?

A) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.

B) மூவகை இடங்களிலும் வரும்

C) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.

**D) வெளிப்படையாக மட்டும் வரும்**

**(விளக்கம்: வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வரும்)**



winmeen.com

122. கீழ்வருவனவற்றுள் மொழியின் வகைகள் எவை?

1. தனி மொழி 2. தொடர் மொழி

3. பல்வகை மொழி 4. பொது மொழி

A) அனைத்தும்

B) 1, 2, 3

**C) 1, 2, 4**

D) 1, 3, 4

**(விளக்கம்: மொழி மூன்று வகைப்படும்)**

123. "ஒரு மொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி

பலபொருளன பொது இருமையும் ஏற்பன"

என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல்

A) அகத்தியம்

B) தொல்காப்பியம்

**C) நன்னூல்**

D) நாலடியார்

124. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது _____ எனப்படும்.

**A) தனி மொழி**

B) தொடர் மொழி

C) பொது மொழி

D) எழுத்து மொழி

125. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது _____ ஆகும்.

A) தனி மொழி

**B) தொடர் மொழி**

C) பொது மொழி

D) எழுத்து மொழி

126. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர் மொழிக்கும் பொதுவாய் அமைவது _____ ஆகும்

A) தனி மொழி

B) தொடர் மொழி

**C) பொது மொழி**

D) எழுத்து மொழி

127. வேங்கை, எட்டு முதலியவை எவ்வகை மொழிக்கு எடுத்துக்காட்டுகள்

A) தனி மொழி

B) தொடர் மொழி

**C) பொது மொழி**

D) எழுத்து மொழி

**(விளக்கம்: எள் + து = நின்று எள்ளை உண்**

**வேம் + கை = வேகின்ற கை)**

128. ஒரு வினை அல்லது செயலை குறிக்கும் பெயரானது எண் இடம் காலம் பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது ____ எனப்படும்

A) குணப் பெயர்

**B) தொழிற்பெயர்**

C) சினைப் பெயர்

D) பொருட்பெயர்

129. 'ஆளல்' என்ற தொழிற் பெயரின் வினையடி மற்றும் விகுதி

A) அல், ஆள்

**B) ஆள், அல்**

C) ஆல், அள்

D) அள், ஆல்

130. 'வாழ்க்கை' என்ற தொழிற் பெயரின் வினையடி மற்றும் விகுதி

A) வாழ்வு, கை

B) வாழ்வு, ஐ

**C) வாழ், கை**

D) வாழ், ஐ

131. 'நடத்தல்' என்ற தொழிற் பெயரின் வினையடி மற்றும் விகுதி

A) நடந்து, அல்

**B) நட, தல்**

C) நட, அல்

D) நடந்து, தல்

132. நட வாமை, கொல்லாமை முதலியவை எவ்வகை தொழிற்பெயர்கள்

A) முதனிலைத் தொழிற்பெயர்

B) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**C) எதிர்மறைத் தொழிற்பெயர்**

D) செய்வினை

133. விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் எவ்வகை தொழிற்பெயராகும்?

A) முதனிலைத் தொழிற்பெயர்

B) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**C) எதிர்மறைத் தொழிற்பெயர்**

D) செய்வினை

134. விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் ______ எனப்படும்.

A) முதனிலைத் தொழிற்பெயர்

**B) முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

C) எதிர்மறைத் தொழிற்பெயர்

D) செய்வினை

135. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது ______ எனப்படும்.

A) வினையெச்சம்

B) பெயரெச்சம்

**C) வினையாலணையும் பெயர்**

D) குறிப்பு வினை முற்று

**(விளக்கம்: இது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று காலங்களிலும் வரும்)**

136. தொழிற்பெயர் குறித்த கூற்றுகளில் தவறானது எது?

A) வினை பெயர்த்தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும்.

B) காலம் காட்டாது

**C) முன்னிலைக்கே உரியது**

D) எ. கா.: பாடுதல், படித்தல்

**(விளக்கம்: படர்க்கைக்கே உரியது)**

137. வினையாலணையும் பெயர் குறித்த கூற்றுகளில் தவறானது எது?

A) தொழிலை செய்யும் கருத்தாவைக் குறிக்கும்

**B) காலம் காட்டாது**

C) மூவிடத்திற்கும் உரியது

D) எ. கா.: பாடியவள், படித்தவர்

**(விளக்கம்: காலம் காட்டும்)**

138. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது

**A) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்**

B) பெரு வணிகமும் பெரும் கலன்களும்

C) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

D) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

139. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

A) இலையும் சருகும்

B) தோகையும் சண்டும்

C) தாளும் ஓலையும்

**D) சருகும் சண்டும்**

140. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

A) எந் + தமிழ் + நா

B) எந்த + தமிழ் + நா

**C) எம் + தமிழ் + நா**

D) எந்தம் + தமிழ் + நா

141. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

A) பாடிய, கேட்டவர்

B) பாடல், பாடிய

C) கேட்டவர், பாடிய

**D) பாடல், கேட்டவர்**

142. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

A) குலை வகை

**B) மணி வகை**

C) கொழுந்து வகை

D) இலை வகை

143. 'மரமது மரத்தில் ஏறி

மரமதைத் தோளில் வைத்து

மரமது மரத்தைக் கண்டு

மரத்தினால் மரத்தைக் குத்தி

மரமது வழியே சென்று ' என்ற பாடலை பாடியவர் யார்?

A) அழகிய சொக்கநாதர்

B) காளமேக புலவர்

**C) சுந்தர கவிராசர்**

D) பட்டினத்தடிகள்

144. 'வனமனைக் கேகும் போது

மரமது கண்ட மாதர்

மரமுடன் மரம் எடுத்தார்'

என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல்

A) சிலப்பதிகாரம்

B) சீறாப்புராணம்

C) மணிமேகலை

**D) தனிப்பாடல் திரட்டு**

145. 'தேனிலே ஊரிய செந்தமிழின் – சுவை

தேரும் சிலப்பதி காறமதை

ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்

ஓதி யுணர்ந்தின் புருவோமே' என்ற பாடலை பாடியவர் யார்?

A) கா.நமச்சிவாயர்

B) மீனாட்சி சுந்தரனார்

**C) கவிமணி**

D) பாரதிதாசன்

146. 'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே

தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே

ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே

உணர்வினுக் குணர்வதாய் ஒளிர் தமிழ் மொழியே '

என்ற பாடலை பாடியவர் யார்?

**A) கா. நமச்சிவாயர்**

B) மீனாட்சி சுந்தரனார்

C) கவிமணி

D) பாரதிதாசன்

147. பொருத்துக

1. Vowel – i) மெய்யெழுத்து

2. Consonant – ii) உயிரெழுத்து

3. Homograph – iii) ஒரு மொழி

4. Monolingual – iv) ஒப்பெழுத்து

A) i ii iii iv

B) i iii ii iv

C) i ii iv iii

**D) ii i iv iii**

148. சரியான இணையைத் தேர்ந்தெடு

1. Conversation – உரையாடல்

2. Discussion – கலந்துரையாடல்

**A) அனைத்தும் சரி**

B) 1 மட்டும் சரி

C) 2 மட்டும் சரி

D) இரண்டும் தவறு

149. 'வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே

மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே

தானனி சிறப்புறுருந் தனித்தமிழ் மொழியே

தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே '

என்ற வரிகள் அமைந்த பாடலை இயற்றியவர்

**A) கா. நமச்சிவாயர்**

B) மீனாட்சி சுந்தரனார்

C) கவிமணி

D) பாரதிதாசன்

150. தவறான இணையைத் தேர்ந்தெடு

1. நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் – மா. நன்னன்

2. தவறின்றி தமிழ் எழுதுவோம் – முனைவர் சேதுமணி மணியன்

3. பச்சை நிழல் – உதயசங்கர்

**A) 1, 2**

B) 2, 3

C) 1, 3

D) எதுவுமில்லை

**(விளக்கம்:**

**• நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் – முனைவர் சேதுமணி மணியன்**

**• தவறின்றி தமிழ் எழுதுவோம் – மா. நன்னன்.)**

# 10th Tamil Questions - Unit 2

1. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை! நாம் நம்பியிருப்பதும் நம்மில் இருப்பதும் இயற்கையே.

II. மூச்சுக்குக் காற்று, தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் போன்றவை உயிரினங்களின் முதன்மைத் தேவை.

III. இயற்கையின் கூறுகளில் காற்றின் பங்கு கூடுதலானது; காற்றே எங்கும் நிறைந்திருக்கிறது; மெல்லத் தொட்டுச் சென்றால் தென்றல்; தூக்கிச் சென்றால் புயல்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

2. ___________________ என்பவர் உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்.

A) வள்ளலார்

**B) தொல்காப்பியர்**

C) சயம் கொண்டார்

D) மாணிக்கவாசகர்

3. திருமூலர் தம் _______________ நூலில் மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.

**A) திருமந்திரம்**

B) திருமூலர் காவியம்

C) ஆறாதாரம்

D) தீட்சை விதி

4. பிற்கால ஔவையார் தம் குறளில் _________________ எனும் அதிகாரத்தில், "வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம்" என்று காற்றைச் சிறப்பித்துள்ளார்.

A) காற்றின் உயிர்

B) வாயு

C) காற்றாவி

**D) வாயுதாரணை**

5. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. காற்றுக்கு இந்தப் பூவுலகில் பல பெயர்கள் உண்டு.

II. காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் காற்று அழைக்கப்படுகிறது.

III. பருவநிலை, சூழல், வீசும் வேகம் ஆகியவற்றிற்கேற்பத் தென்றல்காற்று, பூங்காற்று, கடல்காற்று, பனிக்காற்று, வாடைக்காற்று, மேல்காற்று, கீழ்காற்று, மென்காற்று, இளந்தென்றல், புழுதிக்காற்று, ஆடிக்காற்று, கடுங்காற்று, புயல்காற்று, பேய்க்காற்று, சுழல்காற்று, சூறாவளிக்காற்று எனப் பல்வேறு பெயர்களால் காற்று அழைக்கப்படுகிறது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

6. காற்று – பற்றிய சரியான கூற்று எது?

I. கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு. கிழக்கிலிருந்து வீசும்போது நான் கொண்டல் எனப்படுகிறேன். கொண்டலாக நான் குளிர்ச்சி தருகிறேன்; இன்பத்தைத் தருகிறேன்; மழையைத் தருகிறேன்; கடல் பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று எனப்படுகிறேன்.

II. மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும்போது நான் கோடை எனப்படுகிறேன்; மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன்; வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன்.

III. வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும்போது நான் வாடைக்காற்று எனப்படுகிறேன். நான் பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.

IV. தெற்கிலிருந்து வீசும் போது நான் தென்றல் காற்று எனப்படுகிறேன்; மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறேன்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

7. தென்றலாகிய நான், பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும்பொழுது கூடவே வண்டுகளையும் அழைத்து வருவதால், _______________ என்பவர் என்னை, "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" என்று கூறுகிறார்.

**A) இளங்கோவடிகள்**

B) மாணிக்கவாசகர்

C) ஔவையார்

D) கம்பர்

8. "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) மணிமேகலை

**B) சிலப்பதிகாரம்**

C) கம்பராமாயணம்

D) நளவெண்பா

9. "பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது" என்னும் சிற்றிலக்கிய நூலின் ஆசிரியர் யார்?

A) பட்டினத்துப் பிள்ளையார்

B) காளமேகப் புலவர்

**C) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்**

D) காரைக்கால் அம்மையார்

10. "நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே" – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) முகில்விடுதூது

B) திருத்தணிகை மயில்விடு தூது

C) சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சுவிடு தூது

**D) பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது**

11. "நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே" எனப் பாடியவர்?

**A) கண்ணதாசன்**

B) வாலி

C) மருதகாசி

D) பட்டுக்கோட்டை

12. சரியாகப் பொருந்தியது எது?

I. கிழக்கு (குணக்கு) – கொண்டல்

II. மேற்கு (குடக்கு) – கோடை

III. வடக்கு – வாடை

IV. தெற்கு – தென்றல்

A) I, II, III மட்டும் சரி

**B) I, II, III, IV அனைத்தும் சரி**

C) III, IV மட்டும் சரி

D) IV மட்டும் சரி

13. முந்நீர் நாவாய் ஓட்டியாக காற்று (வளி): பழங்காலத்தில் கடல்கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றினால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால் தான் நிகழ்ந்தன. "நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக! களிஇயல் யானைக் கரிகால் வளவ!" – என்று பாடியவர் யார்?

A) அஞ்சில் அஞ்சியார்

B) ஒக்கூர் மாசாத்தியார்

**C) வெண்ணிக் குயத்தியார்**

D) வெள்ளி வீதியார்

14. "நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக! களிஇயல் யானைக் கரிகால் வளவ!" – என்ற பாடல்வரி ________________ அவர்களைப் புகழ்ந்து பாடிய பாடல்.

A) விசயாலய சோழன்

B) கண்டராதித்தர்

C) உத்தம சோழன்

**D) கரிகால் பெருவளத்தான் (கரிகால் சோழன்)**

15. சரியானது எது? ஹிப்பாலஸ் பருவக்காற்று:

I. கி. பி. (பொ. ஆ) முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர்கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்ய புதிய வழியைக் கண்டுபிடித்தார்.

II. அதுமுதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன.

III. அந்தப் பருவக் காற்றுக்கு யவனர் (கிரேக்கரும் உரோமானியரும் யவனர் ஆவர்.) அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பாலஸ் என்பதையே சூட்டினார்கள்.

IV. ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

16. சரியானது எது?

I. கிரேக்க அறிஞர் "ஹிப்பாலஸ்" (Hippalus) என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார் என்பது வரலாறு.

II. அதற்கும் முன்னரே காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) II மட்டும் தவறு

**D) I, II இரண்டுமே சரி**

17. காற்று, _______________ வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும் _______________ வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் மழைப்பொழிவைத் தருகிறது.

**A) ஜூன் முதல் செப்டம்பர், அக்டோபர் முதல் டிசம்பர்**

B) அக்டோபர் முதல் டிசம்பர், ஜூன் முதல் செப்டம்பர்

C) மே முதல் டிசம்பர், ஜூன் முதல் செப்டம்பர்

D) அக்டோபர் முதல் டிசம்பர், ஆகஸ்டு முதல் செப்டம்பர்

18. இந்தியாவிற்குத் தேவையான _______________ விழுக்காடு மழையளவினைத் தென்மேற்கு பருவக்காற்று கொடுக்கிறது.

A) 35

B) 60

**C) 70**

D) 75

19. காற்றின் ஆற்றலை "வளி மிகின் வலி இல்லை" என்று ஐயூர் முடவனார் ____________ நூலில் கூறியுள்ளார்.

A) கலித்தொகை

B) நளவெண்பா

C) அகநானூறு

**D) புறநானூறு**

20. கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைக் கூறும் புறநானூற்று பாடல் வரியின் ஆசிரியர் யார்?

**A) மதுரை இளநாகனார்**

B) பூங்குன்றனார்

C) ஔவையார்

D) கம்பர்

21. காற்றின் ஆற்றல்: கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது. தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகிறது.

II. விதைகளைப் பல இடங்களுக்குப் பரப்புகிறது. உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது. நவீன தொலைத்தொடர்பின் மையமாக விளங்குகிறது.

III. காற்றாலை மூலம் மின்னாற்றலைப் பெற உதவுகிறது. புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமான காற்றைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிமவளங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

22. உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா _______________ இடம் பெற்றுள்ளது. இந்தியாவில், தமிழகம் _______________ வகிக்கிறது.

A) இரண்டாமிடம், ஐந்தாமிடம்

B) மூன்றாமிடம், நான்காமிடம்

C) முதலிடம், இரண்டாமிடம்

**D) ஐந்தாம், முதலிடம்**

23. உலகிலேயே அதிகளவு மாசுபடுத்தும் நாடுகளில் ______________ இடம் இந்தியாவுக்கு.

A) முதல்

**B) இரண்டாம்**

C) மூன்றாம்

D) நான்காம்

24. மனிதன் உணவின்றி ______________ வாரம் உயிர் வாழ முடியும். நீரின்றி ____________ நாள் உயிர் வாழ முடியும்.

**A) ஐந்து, ஐந்து**

B) நான்கு, நான்கு

C) மூன்று, மூன்று

D) இரண்டு, இரண்டு

25. இந்தியாவில் மிகுந்த உயிரிழப்பைத் தரும் காரணங்களில் _____________ இடம் பெறுவது காற்று மாசுபாடு.

A) மூன்றாம்

B) நான்காம்

**C) ஐந்தாம்**

D) ஆறாம்

26. காற்று மாசுபடுவதால், குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக _____________ தெரிவித்துள்ளது.

A) பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

B) ஐக்கிய நாடுகளின் போதை மருந்துகள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகம்

C) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை

**D) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF)**

27. கதிரவனிடமிருந்து வெளிவரும் புற ஊதாக் கதிர்களை தடுக்கும் அரண் எது?

A) வானம்

**B) ஓசோன்**

C) கோள்கள்

D) காற்று

28. புவியை ஒரு போர்வை போலச் சுற்றிக்கிடந்து பரிதியின் கதிர்ச்சூட்டைக் குறைத்துக் கொடுப்பது எது?

**A) காற்று**

B) ஓசோன்

C) கோள்கள்

D) வானம்

29. குளிர்ப்பதன பெட்டியில் இருந்து வெளிவரும் நச்சுக்காற்று எது?

A) குளோரோ அல்கேன்

**B) குளோரோ புளோரோ கார்பன் (சி.எப்.சி.)**

C) அயடோ அல்கேன்

D) தொலுயீன்

30. நச்சுக்காற்று – சரியானது எது?

I. குளோரோ புளோரோ கார்பன் (சி.எப்.சி.,) ஓசோன் படலத்தை ஓட்டை இடுகிறது.

II. இதனால் புற ஊதாக் கதிர்கள் நேரடியாக தாக்குகிறது. இதனால் கண்களும், தோலும் அதிக பாதிப்படைகின்றன.

III. இதைக் குறைக்கும் விதமாக ஹைட்ரோ கார்பன் என்னும் குளிர்பதனியை இப்போது பயன்படுத்த தொடங்கியுள்ளோம்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

31. ______________, நைட்ரஜன் டை ஆக்ஸைடு ஆகியவை மழை பெய்யும் போது நீரில் கரைந்து விடுவதால் அமில மழை பெய்கிறது.

**A) கந்தக டை ஆக்ஸைடு**

B) நைட்ரஸ் ஆக்சைடு

C) கால்சியம் ஆக்சைடு

D) சிலிக்கான் ஈரொக்சைட்டு

32. ஒரு மணித்துளிக்கு ________________ முறை மூச்சுக்காற்றாய் நாம் வெளியிடும் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு நம் நுரையீரலுக்குத் தேவையான உயிர்வளியை (ஆக்சிஜன்) மரங்கள் தருகின்றன.

A) 10 முதல் 15

**B) 12 முதல் 18**

C) 15 முதல் 20

D) 07 முதல் 12

33. உலகக் காற்று தினம் எப்போது?

A) ஏப்ரல் 15

B) மே 15

**C) ஜூன் 15**

D) ஜூலை 15

34. குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு, _____________ ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்.

A) நூறு

B) ஆயிரம்

C) பத்தாயிரம்

**D) ஒரு இலட்சம்**

35. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களைத் தாய் மொழியில் எழுதி வைத்துப் பாடுகின்றனர் – என்ற கூற்றுடன் தொடர்புடையவர் யார்?

**A) தனிநாயக அடிகள், (ஒன்றே உலகம்)**

B) பாரதியார்

C) திரு.வி.க

D) கே.கே.பிள்ளை

36. மென்துகிலாய் உடல்வருடி வாஞ்சையுடன் மனம் வருடி பகலெரிச்சல் பணக்கவலை பயக்குழப்பம் மொட்டை மாடித் தனியிரவில் நட்சத்திரக் கணக்கெடுப்பில் மறுபடியும் தவறவிட்ட தாளாத தன்னிரக்கம் இவை எல்லாமே எளிதாகக் கரைந்து போகும் – என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) ராஜம் கிருஷ்ணன்

B) சி.சு.செல்லப்பா

**C) தேவகோட்டை வா.மூர்த்தி**

D) சுஜாதா

37. மாயங்கள் செய்கின்ற பூங்காற்றே! இத்தனை நாள் உனைப் பாடாதிருந்து விட்டேன் புதுக்கவிதையில் சிக்கிப் போனேன் – என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) சுஜாதா

B) சி.சு.செல்லப்பா

C) ராஜம் கிருஷ்ணன்

**D) தேவகோட்டை வா.மூர்த்தி**

38. __________ நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறி காட்சியளிக்கிறது.

A) 13ஆம்

B) 15ஆம்

C) 16ஆம்

**D) 17ஆம்**

39. காற்றே வா. மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா. இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த ப்ராண –ரசத்தை எங்களுக்குக் கொண்டு கொடு – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

**A) பாரதியார் (பாரதியார் கவிதைகள்)**

B) பாரதிதாசன் (அழகின் சிரிப்பு)

C) நாமக்கல் கவிஞர் (சங்கொலி)

D) வாணிதாசன் (கொடி முல்லை)

40. காற்றே, வா எமது உயிர்–நெருப்பை நீடித்து நின்ற நல்லொளி தருமாறு நன்றாக வீசு. சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே. பேய்போல வீசி, அதனை மடித்துவிடாதே – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) பாரதிதாசன் (அழகின் சிரிப்பு)

**B) பாரதியார் (பாரதியார் கவிதைகள்)**

C) நாமக்கல் கவிஞர் (சங்கொலி)

D) வாணிதாசன் (கொடி முல்லை)

41. மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம் நின்று வீசிக் கொண்டிரு உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம். உன்னை வழிபடுகின்றோம் – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) நாமக்கல் கவிஞர் (சங்கொலி)

B) பாரதிதாசன் (அழகின் சிரிப்பு)

**C) பாரதியார் (பாரதியார் கவிதைகள்)**

D) வாணிதாசன் (கொடி முல்லை)

42. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. மயலுறுத்து – மயங்கச்செய்



winmeen.com

II. ப்ராண ரஸம் – உயிர்வளி

III. லயத்துடன் – சீராக

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

43. "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா", "சிந்துக்குத் தந்தை" – என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர் யார்?

A) திரு.வி.க

**B) பாரதியார்**

C) உ.வே.சாமிநாதர்

D) மனோன்மணியம்

44. கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?

எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர். கவிஞர்; கட்டுரையாளர்; கேலிச்சித்திரம் – கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்; சிறுகதை ஆசிரியர்; இதழாளர்; சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்;

A) திரு.வி.க

B) உ.வே.சாமிநாதர்

**C) பாரதியார்**

D) கே.கே.பிள்ளை

45. குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும், பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி என, குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்; இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். – இவர் யார்?

A) மனோன்மணியம் சுந்தரனார்

B) நாமக்கல் கவிஞர்

C) பாரதிதாசன்

**D) பாரதியார்**

46. பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர்?

A) கவிஞர் கண்ணதாசன்

**B) பாரதியார்**

C) பாரதிதாசன்

D) நாமக்கல் கவிஞர்

47. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.

II. ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

III. உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தை இலகுவாகக் கையாண்டுள்ளார். இவ்வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

48. "திக்குகள் எட்டும் சிதறி – தக்கத் தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட பக்க மலைகள் உடைந்து வெள்ளம் பாயுது பாயுது பாயுது – தாம்தரிகிட – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) கண்ணதாசன்

D) வாணிதாசன்

49. தக்கத் ததிங்கிட தித்தோம் – அண்டம் சாயுது சாயுது சாயுது – பேய்கொண்டு தக்கை யடிக்குது காற்று – தக்கத் தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) வாணிதாசன்

B) பாரதிதாசன்

C) கண்ணதாசன்

**D) பாரதியார்**

50. மழையின் சீற்றம் இயல்பு வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களைச் __________ படம்பிடித்துக் காட்டுகிறது.

A) சிறு கதைகள்

B) புதினங்கள்

C) காப்பியங்கள்

**D) சங்க இலக்கியம்**

51. நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு வலம்புரி பொறித்த மா தாங்கு தடக்கை நீர் செல நிமிர்ந்த மாஅல் போல, பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

**A) முல்லைப் பாட்டு, நப்பூதனார்**

B) நெடுநல்வாடை, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்

C) குறிஞ்சிப்பாட்டு, கபிலர்

D) மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

52. பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை அருங்கடி மூதூர் மருங்கில் போகி, யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு நாழி கொண்ட நறு வீ முல்லை அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது, பெரு முது பெண்டிர் விரிச்சி நிற்பச் – என்ற பாடல்வரி எந்த "பா" வால் இயற்றப்பட்டது?

A) வஞ்சிப்பா

**B) ஆசிரியப்பா**

C) கலிப்பா

D) இவற்றில் ஏதுமில்லை

53. சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள் நடுங்குசுவல் அசைத்த கையள், "கைய கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர, இன்னே வருகுவர், தாயர்" என்போள் நன்னர் நன்மொழி கேட்டனம் – இந்த முல்லைப்பாட்டு _________ நூல்களுள் ஒன்று. இது ___________ அடிகளைக் கொண்டது.

A) எட்டுத்தொகை, 100

B) ஐம்பெரும்காப்பியம், 500

**C) பத்துப்பாட்டு, 103**

D) அறநூல்கள், 1000

54. சொல்லும் பொருளும் – சரியானது எது?

I. நனந்தலை உலகம் – அகன்ற உலகம்

II. நேமி – சக்கரம்

III. கோடு – மலை

IV. கொடுஞ்செலவு – விரைவாகச் செல்லுதல்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

55. சொல்லும் பொருளும் – சரியானது எது?

I. நறுவீ – நறுமணமுடைய மலர்கள்

II. தூஉய் – தூவி

III. விரிச்சி – நற்சொல்

IV. சுவல் – தோள்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

56. கீழ்க்கண்ட கூற்று எதனுடன் தொடர்புடையது?

அகன்ற உலகத்தையே வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச் சங்கு பொறித்த கைகளை உடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது.

A) சூரியன்

B) தலை

C) கைகள்

**D) மழைமேகம்**

57. கீழ்க்கண்ட கூற்று எதனுடன் தொடர்புடையது?

ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெரும்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

**A) மேகம்**

B) காற்று

C) கைகள்

D) திருமாலின் அருள்

58. துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில், முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்; அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர் – இந்த கூற்று கீழ்க்கண்ட எந்த நூலுடன் தொடர்புடையது?

A) புறநானூறு

**B) முல்லைப்பாட்டு**

C) குறிஞ்சிப்பாட்டு

D) அகநானூறு

59. சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள். குளிர்தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள், "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்துவிடுவர், வருந்தாதே" என்றாள். இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினர். இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர். நின் தலைவன் பகைவரை வென்று திறைப்பொருளோடு வருவது உறுதி. தலைவியே, மனத்தடுமாற்றம் கொள்ளாதே! என ஆற்றுப்படுத்தியவர் யார்?

**A) முதுபெண்டிர்**

B) தோழி

C) தலைவன்

D) இவர்களில் யாருமில்லை

60. இலக்கணக்குறிப்பு தருக – மூதூர்

A) உரிச்சொல்தொடர்

B) மூன்றாம் வேற்றுமைத்தொகை

C) வினைத்தொகை

**D) பண்புத்தொகை**

(குறிப்பு – பண்புத்தொகை: நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "மை" என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும். மூதூர் – முதுமை + ஊர், செங்காந்தள் – செம்மையாகிய காந்தள், வட்டத்தொட்டி – வட்டமான தொட்டி, இன்மொழி – இனிமையானமொழி)

61. இலக்கணக்குறிப்பு தருக – உறுதுயர்

A) உரிச்சொல்தொடர்

B) மூன்றாம் வேற்றுமைத்தொகை

**C) வினைத்தொகை**

D) பண்புத்தொகை

**(குறிப்பு – வினைத்தொகை: காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது "வினைத்தொகை" எனப்படும். காலம் கடந்த பெயரெச்சமே வினைத்தொகையாகும்.**

**எ.கா. வீசுதென்றல், கொல்களிறு, வீசு, கொல் என்பவை வினைப்பகுதிகள். இவை முறையே தென்றல், களிறு என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து காலத்தை வெளிப்படுத்தாத பெயரெச்சங்களாயின. மேலும் இவை வீசிய காற்று, வீசுகின்ற காற்று, வீசும் காற்று எனவும் கொன்ற களிறு, கொல்கின்ற களிறு, கொல்லும் களிறு எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தருகின்றன. காலம்காட்டும் இடைநிலைகள் இப்பெயரெச்சங்களில் தொக்கி இருக்கின்றன. வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச்சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே வினைத்தொகை அமையும்.)**

62. இலக்கணக்குறிப்பு தருக – கைதொழுது

A) உரிச்சொல்தொடர்

**B) மூன்றாம் வேற்றுமைத்தொகை**

C) வினைத்தொகை

D) பண்புத்தொகை

63. இலக்கணக்குறிப்பு தருக – தடக்கை

**A) உரிச்சொல்தொடர்**

B) மூன்றாம் வேற்றுமைத்தொகை.

C) வினைத்தொகை

D) பண்புத்தொகை

64. "பொறித்த" பகுபத உறுப்பிலக்கணம் – சரியானது எது?

I. பொறித்த – பொறி + த் + த் +அ

II. பொறி – பகுதி

III. த் – சந்தி

IV. த் – இறந்தகால இடைநிலை

V. அ – பெயரெச்ச விகுதி

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, II, III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV, V அனைத்தும் சரி**

65. விரிச்சி – பற்றிய சரியான கூற்று எது?

I. ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்;

II. அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II அனைத்தும் சரி**

D) I, II அனைத்தும் தவறு

66. முல்லை நிலம் தொடர்பான சரியான கூற்று எது?

I. முல்லை நிலத்துக்குரிய இடம் – (காடும் காடு சார்ந்த இடமும்)

II. முல்லை நிலத்துக்குரிய பெரும்பொழுது – கார்காலம், ஆவணி, புரட்டாசி

III. முல்லை நிலத்துக்குரிய சிறுபொழுது – மாலை

IV. முல்லை நிலத்துக்குரிய உரிப்பொருள் – இருத்தலும் இருத்தல் நிமித்தமும் (காத்திருத்தல்)

A) I, II, III மட்டும் சரி

**B) I, II, III, IV அனைத்தும் சரி**

C) II, III, IV மட்டும் சரி

D) IV மட்டும் சரி

67. முல்லை நிலத்துக்குரிய உரிப்பொருள் சரியானது எது?

I. நீர் – குறுஞ்சுனை நீர், காட்டாறு

II. மரம் – கொன்றை, காயா, குருந்தம்

III. பூ – முல்லை, பிடவம், தோன்றிப்பூ

winmeen.com

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

68. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் எது?

A) மதுரைக்காஞ்சி

B) நெடுநல்வாடை

C) குறிஞ்சிப்பாட்டு

**D) முல்லைப்பாட்டு**

69. முல்லைப்பாட்டு நூலின் ஆசிரியர் யார்?

**A) பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்**

B) இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

C) முடத்தாமக் கண்ணியார்

D) கடியலூர் உருத்திரங்கண்ணனார்

70. முல்லைப்பாட்டு ______________ அடிகளைக் கொண்டது?

A) 77

B) 17

C) 97

**D) 103**

71. புயலிலே ஒரு தோணி என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) சுஜாதா

B) ராஜம் கிருஷ்ணன்

**C) ப.சிங்காரம்**

D) பூமணி

72. புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம் எது?

A) பிரதாப முதலியார் சரித்திரம்

**B) புயலிலே ஒரு தோணி**

C) திசை மாறிய தென்றல்

D) கரையைத் தேடும் கட்டுமரங்கள்

73. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்காசிய நாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறினர். அவ்வாறு குடியேறிய இனங்களில் தமிழினமும் ஒன்று.

II. தமிழ்க்குடிகள் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா நாடுகளில் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

III. ப.சிங்காரம் அவர்கள் அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒருவர். அவர் இந்தோனேசியாவில் மெபின் நகரில் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது.

IV. ப.சிங்காரம் அவர்களின் நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்த ஒரு கதைதான் புயலிலே ஒரு தோணி என்னும் புதினம்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

74. 'கப்பித்தான்'– என்ற சொல்லின் பொருள்?

**A) தலைமை மாலுமி (கேப்டன்)**

B) சிப்பாய்

C) கப்பல்

D) கயிறு

75. 'தொங்கான்' – என்ற சொல்லின் பொருள்?

A) தலைமை மாலுமி (கேப்டன்)

B) சிப்பாய்

**C) கப்பல்**

D) கயிறு

76. வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை _____________ ஆம் ஆண்டில் தொடங்கியது.

A) 1985

B) 1990

C) 1995

**D) 2000**

77. ______________ இடத்தில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க 64 பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது.

**A) புது தில்லி**

B) கொச்சின்

C) சென்னை

D) மைசூர்

78. புயலுக்குப் பெயர் சூட்டல் – சரியான கூற்று எது?

I. வங்கதேசம், இந்தியா, மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து, ஆகிய நாடுகள் இந்தப் பெயர்களை வழங்கியுள்ளன.

II. இதில் இந்தியா கொடுத்து ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பெயர்கள் அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் (நான்கு பூதங்கள்), கடைசியாக லெஹர் (அலை). இன்னும் வரவிருப்பவை மேக், சாஹர், வாயு. 'கஜா' புயலின் பெயர் இலங்கை தந்தது. அடுத்து வந்த 'பெய்ட்டி' புயல் பெயர் தாய்லாந்து தந்தது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II அனைத்தும் தவறு

**D) I, II அனைத்தும் சரி**

79. வங்கக் கடலில் வீசும் புயலும், அமெரிக்காவை, ஜப்பானை, சீனாவைத் தாக்கும் புயல்கள் __________ என அழைக்கப்படுகின்றன.

**A) இடம்புரிப் புயல்கள்**

B) வலம்புரிப் புயல்கள்

C) ஒருதிசைப் புயல்கள்

D) இவற்றில் ஏதுமில்லை

80. ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, ஹவாய் தீவுகளைத் தாக்கும் புயல்கள் __________ என அழைக்கப்படுகின்றன.

A) இடம்புரிப் புயல்கள்

**B) வலம்புரிப் புயல்கள்**

C) ஒருதிசைப் புயல்கள்

D) இவற்றில் ஏதுமில்லை

81. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநர் காஸ்பார்ட் குஸ்டாவ் கொரியாலிஸ் இந்த வலம்புரிப் புயல்கள், இடம்புரிப் புயல்கள் விளைவை ___________ இல் கண்டுபிடித்தார். புயலின் இந்த இருவகைச் சுழற்சிக்குக் கொரியாலிஸ் விளைவு என்று பெயர்.

A) 1825

**B) 1835**

C) 1845

D) 1855

82. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. பறவை மீன், அவுலியா மீன் – மீன் வகை

II. பிலவான் – இந்தோனேசியாவிலுள்ள இடம்

III. கப்பித்தான் – தலைமை மாலுமி (கேப்டன்)

IV. தொங்கான் – கப்பல்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

83. 'தமிரோ' என்பதற்கு _________ என்று பொருள்.

A) அமெரிக்கர்கள்

B) மலேசியர்கள்

C) ஜப்பானியர்கள்

**D) தமிழர்கள்**

84. புயலிலே ஒரு தோணி – என்னும் புதினத்தின் ஆசிரியர் ப.சிங்காரம் அவர்களின் காலம்?

A) 1900 – 1977

B) 1910 – 1987

**C) 1920 – 1997**

D) 1930 – 2007

85. ப.சிங்காரம் அவர்களைப் பற்றிய சரியான கூற்று எது?

I. இவர் இந்தோனேசியாவில் இருந்தபோது, தென்கிழக்காசியப் போர் மூண்டது.

II. அச்சூழலில், மலேசியா, இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு புயலிலே ஒரு தோணி என்னும் இப்புதினம்.

III. அதில் கடற்கூத்து என்னும் அத்தியாயத்தின் சுருக்கப்பட்ட பகுதியே கடல் காட்சி.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) III மட்டும் சரி

86. ப.சிங்காரம் _______________ மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்தவர்.

A) விருதுநகர்

**B) சிவகங்கை**

C) இராமநாதபுரம்

D) மதுரை

87. ப.சிங்காரம் அவர்கள் வேலைக்காக எந்த நாட்டிற்குச் சென்றார்?

**A) இந்தோனேசியா**

B) வியட்நாம்

C) மலேசியா

D) சிங்கப்பூர்

88. ப.சிங்காரம் அவர்கள் மீண்டும் இந்தியா வந்து __________ நாளிதழில் பணியாற்றினார்.

A) தி இந்து

B) தினமலர்

**C) தினத்தந்தி**

D) தினமணி

89. ப.சிங்காரம் அவர்கள் அன்றைய சூழலில் அவருடைய சேமிப்பான ஏழரை இலட்சம் ரூபாயை _______________ வழங்கினார்.

A) மாணவர்களின் மருத்துவ செலவுக்காக

B) மாணவர்களின் உணவுத் திட்டத்துக்காக

C) மாணவர்களின் இருப்பிட வசதிக்காக

**D) மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக**

90. கொல்லிமலை எந்த மாவட்டத்தில் உள்ளது?

**A) நாமக்கல்**

B) ஈரோடு

C) கோவை

D) தருமபுரி

91. பல் பழுப் பலவின் பயங்கெழு கொல்லி – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) புறநானூறு

B) கலித்தொகை

**C) அகநானூறு**

D) கலிங்கத்துப்பரணி

92. பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்குமானால் அதனை ______________ என்று கூறுவர். எ.கா. கரும்பு தின்றான்.

A) பொருள்கோள்

B) வழு

**C) தொகைநிலைத் தொடர்**

D) தொகாநிலைத் தொடர்

93. கரும்பு தின்றான் – இத்தொடரில் உள்ள இரண்டு சொற்களுக்கு நடுவில் _____________ என்னும் உருபு மறைந்து நின்று, அப்பொருளைத் தருகிறது. எனவே, இது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

**A) ஐ**

B) ஆல்

C) கு

D) இன்

94. தொகைநிலைத் தொடர் _____________ வகைப்படும்.

A) 5

**B) 6**

C) 7

D) 8

95. வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை – இவற்றுடன் தொடர்புடையது எது?

A) பொருள்கோள்

B) வழு

**C) தொகைநிலைத் தொடர்**

D) தொகாநிலைத் தொடர்

96. மதுரை சென்றார் – இத்தொடர் மதுரைக்குச் சென்றார் என விரிந்து நின்று பொருள் தருகிறது. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களுக்கு இடையில் "கு" என்னும் வேற்றுமை உருபு இல்லை. அது தொக்கி நின்று பொருளை உணர்த்துகிறது. இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) ஆகியவற்றுள் ஒன்று மறைந்து வந்து பொருள் உணர்த்துவது ______________ எனப்படும்.

A) அன்மொழித்தொகை

B) உவமைத்தொகை

C) பண்புத்தொகை

**D) வேற்றுமைத்தொகை**

97. தமிழ்த்தொண்டு – இலக்கணக்குறிப்பு தருக?

A) அன்மொழித்தொகை

B) உவமைத்தொகை

C) பண்புத்தொகை

**D) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

98. வேற்றுமை உருபுகள் – தொடர்புடையது எது?

A) சால, தவ

B) நனி, கூர், கழி

**C) ஐ, ஆல், கு, இன், அது, கண்**

D) இவற்றில் ஏதுமில்லை

99. உருபும் பயனும் உடன்தொக்க தொகை – சரியானது எது?

I. தேர்ப்பாகன் – இத்தொடர் "தேரை ஓட்டும் பாகன்" என விரிந்து பொருளை உணர்த்துகிறது.

II. கொடுக்கப்பட்டுள்ள தேர், பாகன் என்னும் சொற்களுக்கிடையில் "ஐ" என்னும் வேற்றுமை உருபும் "ஓட்டும்" என்னும் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வந்துள்ளன.

III. இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும். இதுவும் வேற்றுமைத் தொகையே ஆகும்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II, III, IV அனைத்தும் தவறு

C) I, II, III மட்டும் சரி

D) II, III, IV மட்டும் சரி

100. காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப் பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது ___________ எனப்படும்.

A) வேற்றுமைத்தொகை

**B) வினைத்தொகை**

C) பண்புத்தொகை

D) அன்மொழித்தொகை

101. காலம் கரந்த பெயரெச்சம் __________ எனப்படும்.

A) வேற்றுமைத்தொகை

B) பண்புத்தொகை

**C) வினைத்தொகை**

D) அன்மொழித்தொகை

102. வீசுதென்றல், கொல்களிறு – இலக்கணக்குறிப்பு தருக.

A) வேற்றுமைத்தொகை

B) பண்புத்தொகை

C) அன்மொழித்தொகை

**D) வினைத்தொகை**

**(குறிப்பு – வீசு, கொல் என்பவை வினைப்பகுதிகள். இவை முறையே தென்றல், களிறு என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து காலத்தை வெளிப்படுத்தாத பெயரெச்சங்களாயின. மேலும் இவை வீசிய காற்று, வீசுகின்ற காற்று, வீசும் காற்று எனவும் கொன்ற களிறு, கொல்கின்ற களிறு, கொல்லும் களிறு எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தருகின்றன. காலம்காட்டும் இடைநிலைகள் இப்பெயரெச்சங்களில் தொக்கி இருக்கின்றன. வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச்சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே வினைத்தொகை அமையும்.)**

103. நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் ____________ என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

**A) மை**

B) ஐ

C) ஆல்

D) கண்

104. இவற்றுடன் தொடர்புடையது எது?

I. செங்காந்தள் – செம்மையாகிய காந்தள்

II. வட்டத் தொட்டி – வட்டமான தொட்டி

III. இன்மொழி – இனிமையானமொழி

A) வேற்றுமைத்தொகை

**B) பண்புத்தொகை**

C) அன்மொழித்தொகை

D) வினைத்தொகை

105. சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது ___________________ ஆகும்.

A) வேற்றுமைத்தொகை

**B) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

C) அன்மொழித்தொகை

D) வினைத்தொகை

106. இலக்கணக்குறிப்பு தருக? மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு.

A) வேற்றுமைத்தொகை

B) வினைத்தொகை

C) அன்மொழித்தொகை

**D) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

**(குறிப்பு – திங்கள், பாம்பு ஆகிய பொதுப் பெயர்களுக்கு முன் மார்கழி, சாரை எனும் சிறப்புப் பெயர்கள் வந்து மார்கழி ஆகிய திங்கள் என்றும் சாரை ஆகிய பாம்பு என்றும் இருபெயரொட்டாக வந்துள்ளன.)**

107. உவமைக்கும் பொருளுக்கும் (உவமேயம்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது __________ எனப்படும்.

**A) உவமைத்தொகை**

B) உம்மைத் தொகை

C) அன்மொழித்தொகை

D) பண்புத்தொகை

108. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. மலர்க்கை – இலக்கணக்குறிப்பு உவமைத்தொகை.

II. மலர்க்கை – (மலர் போன்ற கை)

III. மலர் – உவமை, கை – உவமேயம் (பொருள்) இடையே 'போன்ற' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

109. இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது _________________?

A) உவமைத்தொகை

**B) உம்மைத் தொகை**

C) அன்மொழித்தொகை

D) பண்புத்தொகை

110. _________________ என்பது எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

A) உவமைத்தொகை

B) அன்மொழித்தொகை

**C) உம்மைத் தொகை**

D) பண்புத்தொகை

111. கீழ்க்கண்ட கூற்றுடன் தொடர்புடையது எது?

அண்ணன் தம்பி, தாய்சேய் – அண்ணனும் தம்பியும், தாயும் சேயும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

A) உவமைத்தொகை

B) அன்மொழித்தொகை

C) பண்புத்தொகை

**D) உம்மைத் தொகை**

112. வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்கள் அவை அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது _______________ ஆகும்.

A) உவமைத்தொகை

B) உம்மைத் தொகை

**C) அன்மொழித்தொகை**

D) பண்புத்தொகை

113. கீழ்க்கண்ட கூற்றுடன் தொடர்புடையது எது?

சிவப்புச் சட்டை பேசினார்; முறுக்கு மீசை வந்தார் – இவற்றில் சிவப்புச் சட்டை அணிந்தவர் பேசினார், முறுக்கு மீசையை உடையவர் வந்தார் எனத் தொகை நிலைத்தொடர் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருகின்றன.

A) உவமைத்தொகை

B) உம்மைத் தொகை

C) பண்புத்தொகை

**D) அன்மொழித்தொகை**

114. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) வாணிதாசன்

D) நாமக்கல் கவிஞர்

115. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

செய்தி 1 – ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

செய்தி 3 – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

A) செய்தி 1 மட்டும் சரி

B) செய்தி 1, 2 ஆகியன சரி

C) செய்தி 3 மட்டும் சரி

**D) செய்தி 1, 3 ஆகியன சரி**

116. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

**A) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்**

B) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

C) கடல் நீர் ஒலித்தல்

D) கடல் நீர் கொ ந்தளித்தல்

117. 'பெரிய மீசை' சிரித்தார் – இந்தச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

A) பண்புத்தொகை

B) உவமைத் தொகை

**C) அன்மொழித்தொகை**

D) உம்மைத்தொகை

118. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

I. கொண்ட ல் – 1. மேற்கு

II. கோடை – 2. தெற்கு

III. வாடை – 3. கிழக்கு

IV. தென்றல் – 4. வடக்கு

A) 1, 2, 3, 4

**B) 3, 1, 4, 2**

C) 4, 3, 2, 1

D) 3, 4, 1, 2

119. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்; உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

A) உருவகம், எதுகை

**B) மோனை, எதுகை**

C) முரண், இயைபு

D) உவமை, எதுகை

120. மாஅல் (திருமால்) – இலக்கணக்குறிப்பு தருக?

A) அன்மொழித்தொகை

B) பண்புத்தொகை

C) உரிச்சொல்தொடர்

**D) செய்யுளிசை அளபெடை**

121. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல வளரும் விழி வண்ணமே – வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக விளைந்த கலை அன்னமே நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந் தென்றலே – வளர் பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமே – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

B) வாலி

**C) கவிஞர் கண்ணதாசன்**

D) வைரமுத்து

122. அந்த இடம் காற்றே! வா உன்னைப் பாடாமல் இருக்க முடியாது ஏனெனில் பாட்டின் மூல ஊற்றே நீதான் – இந்த பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) கோ. சுவாமிநாதன்

**B) அப்துல் ரஹ்மான்**

C) மீ. ராசேந்திரன்

D) பெருஞ்சித்திரனார்

123. பொய்கையிடம் போனால் குளிர்ந்து போகிறாய் பூக்களைத் தொட்டால் நறுமணத்தோடு வருகிறாய் புல்லாங்குழலில் புகுந்தால் இசையாகிவிடுகிறாய் எங்களிடம் வந்தால் மட்டுமே அழுக்காகி விடுகிறாய் மரங்களின் ஊமை நாவுகள் உன்னிடம் மட்டுமே பேசுகின்றன – இப்பாடல் வரிகளின் ஆசிரியர் கீழ்க்கண்ட நூல்களையும் எழுதியுள்ளார். அவர் யார் (பால்வீதி, நேயர் விருப்பம், கரைகளே நதியாவதில்லை, அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளி அல்ல, விலங்குகள் இல்லாத கவிதை, சுட்டுவிரல்)?

**A) அப்துல் ரஹ்மான்**

B) கோ. சுவாமிநாதன்

C) மீ. ராசேந்திரன்

D) பெருஞ்சித்திரனார்

124. கடல் அலைகள் உன்னோடு மட்டுமே குதித்துக் கும்மாளமிடுகின்றன வயலின் பச்சைப் பயிர்கள் நீ வந்தால் மட்டுமே ஆனந்த நடனம் ஆடுகின்றன நீ என்ன குதூகலமா? கொண்டாட்டமா? கோலாகலமா? நெடுநாட்களாகவே எனக்கொரு சந்தேகம் விளக்குகளிலிருந்து பறிக்கும் சுடர்களை பூக்களிலிருந்து திருடும் நறுமணத்தை வீணையிலிருந்து கவர்ந்த இசையை எங்கே கொண்டு போய் ஒளித்து வைக்கிறாய்?

A) பெருஞ்சித்திரனார்

B) கோ. சுவாமிநாதன்

C) மீ. ராசேந்திரன்

**D) அப்துல் ரஹ்மான்**

125. இலக்கணக்குறிப்பு தருக – சரியானது எது?

I. இன்சொல் – பண்புத்தொகை

II. எழுகதிர் – வினைத்தொகை

III. பூங்குழல் வந்தாள் – அன்மொழித்தொகை

IV. கீரிபாம்பு – உம்மைத்தொகை

A) I, II மட்டும் சரி

B) III, IV மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் தவறு

126. இலக்கணக்குறிப்பு தருக – சரியானது எது?

I. மலை வாழ்வார் – வேற்றுமைத்தொகை

II. முத்துப்பல் – உவமைத்தொகை

III. பூங்குழல் – அன்மொழித்தொகை

IV. கீரிபாம்பு – உம்மைத்தொகை

A) I, II மட்டும் சரி

B) III, IV மட்டும் சரி

C) I, II, III, IV அனைத்தும் தவறு

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

127. பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் எவை?

**A) ஆல மலர், பலா மலர்**

B) சுள்ளி மலர், பாங்கர் மலர்

C) அத்தி, கொழிஞ்சி

D) நெருஞ்சி, எருக்கு, பூளை

winmeen.com

128. மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் எவை?

A) ஆல மலர், பலா மலர்

**B) சுள்ளி மலர், பாங்கர் மலர்**

C) அத்தி, கொழிஞ்சி

D) நெருஞ்சி, எருக்கு, பூளை

129. அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் எவை?

**A) அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா**

B) சுள்ளி மலர், பாங்கர் மலர்

C) கொன்றை, தாமரை

D) நெருஞ்சி, எருக்கு, பூளை

130. பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவை யாவை?

**A) நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை**

B) அத்தி, ஆலம், கொழிஞ்சி

C) கொன்றை, தாமரை

D) இவற்றில் ஏதுமில்லை

131. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும் – இந்த கூற்று யாருடையது?

**A) கோவை. இளஞ்சேரன்**

B) தாமோதரன்

C) அழ. வள்ளியப்பா

D) இவற்றில் ஏதுமில்லை

132. பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள்: ஆல மலர்; பலா மலர்; மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்: சுள்ளி மலர், பாங்கர் மலர். அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்: அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா; பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை. – இந்த கூற்று யாருடையது?

A) அழ. வள்ளியப்பா

B) தாமோதரன்

**C) கோவை. இளஞ்சேரன்**

D) இவற்றில் ஏதுமில்லை

133. அரிய மலர் – இலக்கணக் குறிப்புத் தருக?

**A) குறிப்புப் பெயரெச்சம்**

B) முற்றெச்சம்

C) பண்புத்தொகை

D) வினைத்தொகை

134. சிறியதானியம் போன்ற மூக்கு; சின்னக்கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண் – இந்த கூற்று யாருடையது?

A) அழ. வள்ளியப்பா (குழந்தை)

B) வாணிதாசன் (மயில்)

C) பாரதி தாசன் (குயில்)

**D) பாரதியார் (சிட்டுக்குருவி)**

135. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. Storm – புயல்

II. Land Breeze – நிலக்காற்று

III. Tornado – சூறாவளி

IV. Sea Breeze – கடல்காற்று

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

136. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. Tempest – பெருங்காற்று

II. Whirlwind – சுழல் காற்று

III. Tornado – சூறாவளி

IV. Sea Breeze – கடல்காற்று

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

137. சரியானது எது?

I. குயில்பாட்டு – பாரதியார்

II. அதோ அந்த பறவை போல – ச. முகமது அலி

III. உலகின் மிகச்சிறிய தவளை – எஸ். ராமகிருஷ்ணன்

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

winmeen.com

# 10th Tamil Questions - Unit 3

1. உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று _____________ கூறியுள்ளார்.

A) ஔவையார்

B) பாரதிதாசன்

C) பாரதியார்

**D) தொல்காப்பியர்**

2. திருவள்ளுவர் ____________ இயலில் 'விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே' அமைத்திருக்கிறார்.

A) பாயிரம்

B) ஊழியல்

**C) இல்லறவியல்**

D) துறவறவியல்

3. இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்; முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்று எடுத்துரைக்கிறார் – இந்த கூற்று யாரைப்பற்றியது?

A) ஔவையார்

**B) திருவள்ளுவர்**

C) பாரதியார்

D) தொல்காப்பியர்

4. "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) சிலப்பதிகாரம்**

B) மணிமேகலை

C) வளையாபதி

D) குண்டலகேசி

5. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் __________________ குறிப்பிட்டுள்ளார்.

A) ஔவையார்

B) திருவள்ளுவர்

C) பாரதியார்

**D) கம்பர்**

6. விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளவர் யார்?

A) ஔவையார் (ஆத்திச்சூடி)

B) திருவள்ளுவர் (திருக்குறள்)

**C) சயம்கொண்டார் (கலிங்கத்துப்பரணி)**

D) கம்பர் (இராமாயணம்)

7. "பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே" – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) (ஆத்திச்சூடி) ஔவையார்

B) (கலிங்கத்துப்பரணி) சயம்கொண்டார்

C) (திருக்குறள்) திருவள்ளுவர்

**D) (கம்பராமாயணம்) கம்பர்**

8. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) (ஆத்திச்சூடி) ஔவையார்

**B) (கலிங்கத்துப்பரணி) சயம்கொண்டார்**

C) (திருக்குறள்) திருவள்ளுவர்

D) (கம்பராமாயணம்) கம்பர்

9. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை, "உண்டால் அம்ம, இவ்வுலகம், இந்திரர்; அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே" – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) (ஆத்திச்சூடி) ஔவையார்

B) (கலிங்கத்துப்பரணி) சயம்கொண்டார்

**C) (புறநானூறு) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

D) (கம்பராமாயணம்) கம்பர்

10. "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று கண்ணகி வருந்துகிறாள். கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை __________ உணர்த்துகிறார்.

A) திருவள்ளுவர்

B) அறவண அடிகள்

C) சீத்தலைச் சாத்தானர்

**D) இளங்கோவடிகள்**

11. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு. இதை "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" என்று __________ நூல் குறிப்பிடுகிறது.

A) அகநானூறு

B) கலித்தொகை

**C) நற்றிணை**

D) புறநானூறு

12. ஏழு அடி நடந்து சென்று வழி அனுப்பினர். பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும் போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர். மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழி அனுப்பினர். ("காலின் ஏழடிப் பின் சென்று") என்று கூறும் நூல் எது?

A) கலித்தொகை

**B) பொருநராற்றுப்படை**

C) கலிங்கத்துப்பரணி

D) வளையாபதி

13. வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக்

குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி. இதனை, "குரல்உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன்றோ இலள்" – என்று கூறும் நூல் எது?

**A) புறநானூறு**

B) பொருநராற்றுப்படை

C) கலிங்கத்துப்பரணி

D) வளையாபதி

14. நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்; இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான். இச்செய்தி, "நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன் இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்று இக் கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்" – என்று கூறும் நூல் எது?

A) வளையாபதி

B) பொருநராற்றுப்படை

C) கலிங்கத்துப்பரணி

**D) புறநானூறு**

15. இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் _________________ நூலில் காட்டப்படுகிறது.

A) வளையாபதி

B) பொருநராற்றுப்படை

**C) பெரியபுராணம்**

D) புறநானூறு

16. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது ______________ நூல்.

**A) சிறுபாணாற்றுப்படை**

B) திருவாசகம்

C) நளவெண்பா

D) ஐங்குறுநூறு

17. "இலையை மடிப்பதற்கு முந்தைய வினாடிக்கு முன்பாக மறுக்க மறுக்க பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில் நீண்டு கொண்டிருந்தது பிரியங்களின் நீள் சரடு" – என்று கூறியவர் யார்?

A) அருந்ததி

**B) அம்சப்பிரியா**

C) ரம்யா

D) மதிவதனி

18. இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை, "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" – என்று கூறும் நூல் எது?

A) சிறுபாணாற்றுப்படை

B) திருவாசகம்

**C) குறுந்தொகை**

D) ஐங்குறுநூறு

19. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று ___________ நூலில் ஔவையார் பாடியுள்ளார்.

A) நல்வழி

B) மூதுரை

**C) கொன்றை வேந்தன்**

D) ஆத்திசூடி

20. "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டான்ஈ(து) எல்லா உலகும் பெறும்" – என்று தனிப்பாடல் நூலில் ____________________ அவர்கள் கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறியமுடிகிறது.

A) மாணிக்கவாசகர்

B) கம்பர்

C) சயம்கொண்டார்

**D) ஔவையார்**

21. விருந்தினர் – விருந்து பற்றிய சரியான கூற்று எது?

I. சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர். கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின.

II. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

III. புதியவர்களான விருந்தினர்களை ஏற்பது குறைந்துவிட்ட காலத்தில், ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர். படிப்படியாக உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

22. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பு எது?

A) அந்நிய மொழியைப் பேணிக்காத்தல்

B) இறக்குமதியில் சிறந்து விளங்குதல்

**C) விருந்தோம்பல்**

D) இவற்றில் ஏதுமில்லை

23. இட்டதோர் தாமரைப்பூ இதழ்விரித் திருத்தல் போலே வட்டமாய்ப் புறாக்கள் கூடி இரையுண்ணும் – இவ்வாறு கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் பற்றி கூறியவர் யார்?

A) பாரதியார்

**B) பாரதிதாசன்**

C) வாணிதாசன்

D) அழ. வள்ளியப்பா

24. ________________ நாட்டின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர். முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.

A) மலேசியா

B) சிங்கப்பூர்

C) தென் ஆப்பிரிக்கா

**D) அமெரிக்கா**

25. வாழை இலையில் விருந்து – சரியான கூற்று எது?

I. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

II. தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.

III. உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

26. காசிக்காண்டம் – நூலின் ஆசிரியர் யார்?

**A) அதிவீரராம பாண்டியர்**

B) ஔவையார்

C) கம்பர்

D) சேக்கிழார்

27. விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின் வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல் திருந்துற நோக்கல் வருக என உரைத்தல் எழுதல் முன் மகிழ்வன செப்பல் – என்ற பாடல் எதைப்பற்றிக் குறிப்பிட்டுக் கூறுகிறது?

A) நல்லொழுக்கம் (பொறை)

**B) இல்லொழுக்கம் (விருந்தோம்பல்)**

C) நன்றியுணர்வு

D) மேற்கூறிய அனைத்தும்

28. பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல் போமெனில் பின் செல்வதாதல் சொல்லும் பொருளும் பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான் ஒழுக்கமும் வழிபடும் பண்பே – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) திருவாசகம், மாணிக்கவாசகர்

B) கம்பராமாயணம், கம்பர்

C) கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

**D) காசிக்காண்டம், அதிவீரராம பாண்டியர்**

29. சொல்லும் பொருளும் சரியாகப் பொருந்தியது எது?

I. அருகுற – அருகில்

II. முகமன் – ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொல்

III. கேழல் – பன்றி

IV. நவ்வி – மான்

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

30. விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், 'வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல், அவர் எதிரில் நிற்றல், அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடை பெற்றுச் செல்லும்போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லல், அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும் – என்று விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கத்தைப் பற்றி கூறுபவர் யார்?

**A) அதிவீரராம பாண்டியர்**

B) ஔவையார்

C) கம்பர்

D) சேக்கிழார்

31. நன்மொழி – இலக்கணக்குறிப்பு தருக?

A) அன்மொழித்தொகை

**B) பண்புத்தொகை**

C) வேற்றுமைத்தொகை

D) வினைத்தொகை

32. வியத்தல், நோக்கல், எழுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல் – இலக்கணக்குறிப்பு தருக?

**A) தொழிற்பெயர்**

B) வினைமுற்று

C) வினையெச்சம்

D) வியங்கோள் வினைமுற்று

33. பகுபத உறுப்பிலக்கணம் – சரியானது எது?

I. உரைத்த – உரை + த் + த் + அ

II. உரை – பகுதி

III. த் – சந்தி

IV. த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

A) I, II, III மட்டும் சரி

**B) I, II, III, IV அனைத்தும் சரி**

C) III, IV மட்டும் சரி

D) I, II, III, IV அனைத்தும் தவறு

34. பகுபத உறுப்பிலக்கணம் – சரியானது எது?

I. வருக – வா(வரு) + க

II. வா – பகுதி

III. க – வியங்கோள் வினைமுற்று விகுதி

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) III மட்டும் சரி

D) I, II, III அனைத்தும் தவறு

35. ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித்து, உண்மை பேசி, உப்பிலாக் கூழ் இட்டாலும், உண்பதே அமிர்தம் ஆகும். முப்பழ மொடு பால் அன்னம் முகம் கடுத்து இடுவராயின் கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும் தானே – என்ற பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) கலித்தொகை

B) புறநானூறு

**C) விவேகசிந்தாமணி**

D) ஐங்குறுநூறு

36. காசிக்காண்டம் நூல் பற்றிய சரியான கூற்று எது?

I. காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம்.

II. துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது.

III. 'இல்லொழுக்கம்' பகுதியில் உள்ள பதினேழாவது பாடலே "விருந்தினனாக" – எனத் தொடங்கும் பாடல்.

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I மட்டும் சரி

C) II மட்டும் சரி

D) III மட்டும் சரி

37. கீழ்க்கண்டவர்களுள், முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் யார்?

A) இரும்பொறை

**B) அதிவீரராம பாண்டியர்**

C) விக்கிரம சோழன்

D) நெடுங்கிள்ளி

38. வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை சிறந்த அறக்கருத்துக்களைக் கூறும் நூல். இந்நூலின் ஆசிரியர் யார்?

A) ஔவையார்

B) ஒட்டக்கூத்தர்

**C) அதிவீரராம பாண்டியர்**

D) கம்பர்

39. சீவலமாறன் என்ற பட்டப்பெயர் உடைய மன்னன் யார்?

A) இரும்பொறை

B) சடையவர்மன் வீரபாண்டியன்

C) விக்கிரம சோழன்

**D) அதிவீரராம பாண்டியர்**

40. நைடதம், கூர்ம புராணம், லிங்க புராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி முதலிய நூல்களின் ஆசிரியர் யார்?

**A) அதிவீரராம பாண்டியர்**

B) ஒட்டக்கூத்தர்

C) ஔவையார்

D) கம்பர்

41. அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி, கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து சேந்த செயலைச் செப்பம் போகி, அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச் – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) முதுமொழிக்காஞ்சி

**B) மலைபடுகடாம்**

C) பரிபாடல்

D) குறுந்தொகை

42. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி நோனாச் செருவின் வலம்படு நோன்தாள் மான விறல்வேள் வயிரியம் எனினே, நும்இல் போல் நில்லாது புக்கு – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

**A) பெருங்கௌசிகனார்**

B) கூடலூர் கிழார்

C) பிசிராந்தையார்

D) மாணிக்கவாசகர்

43. கிழவிர் போலக் கேளாது கெழீஇ சேட் புலம்பு அகல இனிய கூறி பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர் – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள மலைபடுகடாம் நூலை _______________ என்றும் அழைப்பர்.

A) முதுமொழிக்காஞ்சி

**B) கூத்தராற்றுப்படை**

C) பரிபாடல்

D) குறுந்தொகை

44. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. அசைஇ – இளைப்பாறி

II. அல்கி – தங்கி

III. கடும்பு – சுற்றம்

IV. நரலும் – ஒலிக்கும்

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) IV மட்டும் சரி

45. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. ஆரி – அருமை

II. படுகர் – பள்ளம்

III. வயிரியம் – கூத்தர்

IV. வேவை – வெந்தது

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி.

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

46. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. இறடி – தினை

II. பொம்மல் – சோறு

III. கடும்பு – சுற்றம்

IV. நரலும் – இணைக்கும்

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

47. கீழ்க்கண்டவற்றுள் தினைச்சோற்று விருந்து பற்றி கூறும் நூல் எது?

A) ஆசாரக்கோவை

B) மூதுரை

C) கொன்றை வேந்தன்

**D) மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)**

48. நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கு வழிப்படுத்துதல் – இந்த கூற்று எந்த நூலுடன் தொடர்புடையது?

A) ஆசாரக்கோவை

**B) மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)**

C) சிலப்பதிகாரம்

D) குண்டலகேசி

49. பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள்; எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள்; சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்; அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள். அங்குள்ளவர்களிடம், பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள் – இந்த கூற்றுடன் தொடர்புடைய ஆசிரியர் யார்?

A) கூடலூர் கிழார்

B) நன்னன் வேண்மான்

**C) இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்**

D) ஔவையார்

50. நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டிற்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர். நீண்ட வழியைக் கடந்துவந்த உங்களின் துன்பம் தீர இனிய சொற்களைக் கூறுவர். அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள் – இந்த கூற்று ______________ என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் அவர்களால் பாடப்பட்டுள்ளது.

A) இரணியன்

**B) நன்னன்**

C) தொண்டைமான் இளந்திரையன்

D) அதியமான் நெடுமான் அஞ்சி

51. அசைஇ, கெழீஇ – இலக்கணக்குறிப்பு தருக?

A) செய்யுளிசை அளபெடை

B) இன்னிசை அளபெடை

**C) சொல்லிசை அளபெடை**

D) இவற்றில் ஏதுமில்லை

52. பரூஉக், குரூஉக்கண் – இலக்கணக்குறிப்பு தருக?

**A) செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை)**

B) இன்னிசை அளபெடை

C) சொல்லிசை அளபெடை

D) இவற்றில் ஏதுமில்லை

53. மலைந்து – பகுபத உறுப்பிலக்கணம் – சரியானது எது?

I. மலைந்து – மலை +த்(ந்) + த் + உ

II. மலை – பகுதி; த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

III. த் – இறந்தகால இடைநிலை

IV. உ – வினையெச்ச விகுதி

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

54. பொழிந்த – பகுபத உறுப்பிலக்கணம் – சரியானது எது?

I. பொழிந்த – பொழி +த்(ந்) + த் + அ

II. பொழி – பகுதி; த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

III. த் – இறந்தகால இடைநிலை

IV. அ – பெயரெச்ச விகுதி

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

55. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை.

II. நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது, மலைபடுகடாம்.

A) I, II இரண்டுமே தவறு

**B) I, II இரண்டுமே சரி**

C) I மட்டும் சரி

D) II மட்டும் சரி

56. மலைபடுகடாம் _____________ நூல்களுள் ஒன்று.

A) எட்டுத்தொகை

**B) பத்துப்பாட்டு**

C) ஐம்பெரும் காப்பியங்கள்

D) ஐஞ்சிறு காப்பியங்கள்

57. மலைபடுகடாம் நூல் ________ அடிகளைக் கொண்டது.

A) 503

B) 523

C) 553

**D) 583**

58. மலையை ___________ ஆக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**A) யானை**

B) கரடி

C) புலி

D) சிங்கம்

59. கீழ்க்கண்டவற்றுள், கருப்பு நிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம் எது?

A) சோளம்

B) கேழ்வரகு

**C) கம்பு**

D) கரும்பு

60. கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினத்தின் ஆசிரியர் யார்?

A) சுஜாதா

B) சேர்மக்கனி

C) ராஜம் கிருஷ்ணன்

**D) கி.ராஜநாராயணன்**

61. வட்டார வழக்குச் சொற்கள் – சரியானது எது?

I. பாச்சல் – பாத்தி

II. பதனம் – கவனமாக

III. நீத்துப்பாகம் – மேல்கஞ்சி

IV. மகுளி – சோற்றுக் கஞ்சி

A) I மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

62. வட்டார வழக்குச் சொற்கள் – சரியானது எது?

I. தொலவட்டையில் – தொலைவில்

II. அலுக்கம் – அழுத்தம் (அணுக்கம்)

III. சடைத்து புளித்து – சலிப்பு

IV. வரத்துக்காரன் – புதியவன்

A) I மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

63. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட கதையே கோபல்லபுரத்து மக்கள். ஆசிரியர் தன் சொந்த ஊரான இடைசெவல் மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனையையும் புகுத்தி இந்நூலினைப் படைத்துள்ளார்.

II. இந்திய விடுதலைப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது இந்நூல்.

III. இது 1991ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றது.

IV. கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஆசிரியர் கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II, III மட்டும் சரி

C) I, II மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

64. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்கள் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். இவரின் கதைகள் ஒரு கதைசொல்லியின் கதைப்போக்கில் அமைந்திருக்கும்.

II. கி.ராஜநாராயணன் அவர்கள் கரிசல் வட்டாரச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார்.

III. இவர் தொடங்கிய வட்டார மரபு வாய்மொழிப் புனைகதைகள் 'கரிசல் இலக்கியம்' என்று அழைக்கப்படுகின்றன.

IV. கி.ராஜநாராயணன் அவர்கள் எழுத்துலகில் கி.ரா என்று குறிப்பிடப்படுகிறார்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II, III மட்டும் சரி

C) I, II மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

65. கறங்கு இசை விழவின் உறந்தை – இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) புறநானூறு

**B) அகநானூறு**

C) கலித்தொகை

D) கலிங்கத்துப்பரணி

66. காலையிலிருந்தே வீட்டுக்குள்ளிருந்து வாசலுக்கு வந்து வந்து எட்டிப் பார்த்துச் செல்வாள் அம்மா. திண்ணையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பா கேட்பார். என்ன விஷயம், இன்னிக்கு யாராவது விருந்தாளி வரப்போறாங்களா என்ன?" "ஏங்க... காலையிலேருந்து வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியா? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப் போறாங்க பாருங்க." "அடடே, ஆமாம் காக்கா கத்துது. யாரு வரப் போறா? இது பலாப்பழ சீசன் ஆச்சே... உன் தம்பிதான் வருவான், பலாப்பழத்தைத் தூக்கிக்கிட்டு" – நாங்கள் ஓடிப்போய் தெருவில் பார்ப்போம். அப்பா சொன்னதும் சரி, காக்கா கத்தியதும் சரி. தூரத்தில் தெரு முனையில் அறந்தாங்கி மாமா தலையில் பலாப்பழத்துடன் வந்து கொண்டிருப்பார். அம்மாவுக்குக் காக்கை மொழி தெரியும்! – என்ற கூற்று யாருடையது?

A) சுஜாதா

**B) தஞ்சாவூர்க் கவிராயர்**

C) ராஜம் கிருஷ்ணன்

D) உடுமலை நாராயண கவி

67. 'கறங்கு இசை விழவின் உறந்தை' என்ற கூற்று கீழ்கண்ட எதனுடன் தொடர்புடையது?

A) சிவகங்கை மாவட்டத்தின் மானாமதுரை

B) திருவாரூர் மாவட்டத்தின் மன்னார்குடி

**C) திருச்சி மாவட்டத்தின் உறையூர்**

D) இவற்றில் ஏதுமில்லை

68. ஒரு தொடர் மொழியில் இருசொற்கள் இருந்து அவற்றின் இடையில் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே, பொருளை உணர்த்துவது _____________ எனப்படும்.

A) தொகைநிலைத் தொடர்

B) வழுவமைதி

C) வழு

**D) தொகாநிலைத் தொடர்**

69. கீழ்க்கண்ட கூற்று எதனுடன் தொடர்புடையது?

(எ.கா) காற்று வீசியது; குயில் கூவியது.

முதல் தொடரில் "காற்று" என்னும் எழுவாயும் "வீசியது" என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று வேறுசொல் வேண்டாது பொருளை உணர்த்துகின்றது. அதேபோன்று இரண்டாவது தொடரிலும் எழுவாயும் பயனிலையும் தொடர்ந்து நின்று குயில் கூவியது என்னும் பொருளைத் தருகின்றது.

A) தொகைநிலைத் தொடர்

**B) தொகாநிலைத் தொடர்**

C) வழு

D) வழுவமைதி

70. தொகாநிலைத் தொடர் __________ வகைப்படும்?

A) 6

B) 7

C) 8

**D) 9**

71. எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது ________________ ஆகும். இனியன் கவிஞர் – பெயர்; காவிரி பாய்ந்தது – வினை; பேருந்து வருமா? – வினா. மேற்கண்ட மூன்று தொடர்களிலும் பெயர், வினை, வினா ஆகியவற்றுக்கான பயனிலைகள் வந்து எழுவாய்த் தொடர்கள் அமைந்துள்ளன – இந்த கூற்று கீழ்க்கண்டவற்றுள் எதனுடன் தொடர்புடையது?

**A) எழுவாய்த்தொடர்**

B) விளித்தொடர்

C) வினைமுற்றுத்தொடர்

D) பெயரெச்சத்தொடர்

72. விளித்தொடர் – சரியான கூற்று எது?

I. விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் ஆகும்.

II. நண்பா எழுது! – "நண்பா " என்னும் விளிப்பெயர் "எழுது" என்னும் பயனிலையைக்கொண்டு முடிந்துள்ளது.

III. எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது விளித்தொடர் ஆகும்.

A) I மட்டும் சரி

**B) I, II மட்டும் சரி**

C) I, II, III அனைத்தும் சரி

D) I, II, III அனைத்தும் தவறு

73. வினைமுற்றுத் தொடர் – சரியான கூற்று எது?

I. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத்தொடர் ஆகும்.

II. 'பாடினாள் கண்ணகி' – "பாடினாள்" என்னும் வினைமுற்று முதலில் நின்று ஒரு பெயரைக் கொண்டு முடிந்துள்ளது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II அனைத்தும் சரி**

D) I, II அனைத்தும் தவறு

74. பெயரெச்சத்தொடர் – சரியான கூற்று எது?

I. முற்றுப் பெறாத வினை, பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சத்தொடர் எனப்படும்.

II. கேட்ட பாடல் – "கேட்ட" என்னும் எச்சவினை "பாடல்" என்னும் பெயரைக்கொண்டு முடிந்துள்ளது.

III. தொகாநிலைத் தொடர் ஒன்பது வகைப்படும்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

75. வினையெச்சத் தொடர் – சரியான கூற்று எது?

I. முற்றுப் பெறாத வினை, வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சத் தொடர் ஆகும்.

II. பாடி மகிழ்ந்தனர் – "பாடி" என்னும் எச்சவினை "மகிழ்ந்தனர்" என்னும் வினையைக் கொண்டு முடிந்துள்ளது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II அனைத்தும் சரி**

D) I, II அனைத்தும் தவறு

76. வேற்றுமைத் தொடர் – சரியான கூற்று எது?

I. வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் ஆகும்.

II. கட்டுரையைப் படித்தாள் – இத்தொடரில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது.

III. அன்பால் கட்டினார் – (ஆல்) மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

IV. அறிஞருக்குப் பொன்னாடை – (கு) நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

77. இடைச்சொல் தொடர் – சரியான கூற்று எது?

I. இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது இடைச்சொல் தொடர் ஆகும்.

II. மற்றொன்று – மற்று + ஒன்று. "மற்று" என்னும் இடைச்சொல்லை அடுத்து "ஒன்று" என்னும் சொல் நின்று பொருள் தருகிறது.

III. வருக! வருக! வருக! – ஒரே சொல் உவகையின் காரணமாக மீண்டும் மீண்டும் அடுக்கி வருவது, இடைச்சொல் தொடராகும்.

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) III மட்டும் சரி

78. உரிச்சொல்தொடர் – சரியான கூற்று எது?

I. உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது உரிச்சொல் தொடர் ஆகும்.

II. சாலச் சிறந்தது – "சால" என்பது உரிச்சொல். அதனைத் தொடர்ந்து "சிறந்தது" என்ற சொல்நின்று மிகச் சிறந்தது என்ற பொருளைத் தருகிறது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II அனைத்தும் தவறு

**D) I, II அனைத்தும் சரி**

79. அடுக்குத் தொடர் – சரியான கூற்று எது?

I. ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது அடுக்குத் தொடர் ஆகும்.

II. வருக! வருக! வருக! – ஒரே சொல் உவகையின் காரணமாக மீண்டும் மீண்டும் அடுக்கி வந்துள்ளது.

III. சல சல, கரகரத்த ஆகியவை அடுக்குத் தொடருக்கு மிகச்சிறந்த உதாரணம் ஆகும்.

A) I, II, III அனைத்தும் சரி

**B) I, II மட்டும் சரி**

C) II, III மட்டும் சரி

D) I, II, III அனைத்தும் தவறு

80. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. ஒன்றிற்கு மேற்பட்ட எச்சங்கள் சேர்ந்து பெயரைக்கொண்டு முடியும் கூட்டுநிலைப் பெயரெச்சங்களை இக்காலத்தில் பெருமளவில் பயன்படுத்துகிறோம். வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை, செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன. (எ.கா) கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி

II. தொகாநிலைத் தொடர் 9 வகைப்படும். அவையாவன: எழுவாய்த் தொடர், விளித்தொடர், வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், வேற்றுமைத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத் தொடர்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

81. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. இறங்கினார் முகமது – வினைமுற்றுத் தொடர்

II. அவர் பாடகர் – எழுவாய்த் தொடர்

III. பாடுவதும் கேட்பதும் – எண்ணும்மை

IV. கேட்ட பாடல்கள் – பெயரெச்சத் தொடர்

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

82. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. கேட்காத பாடல்கள் – எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்

II. அடுக்கு அடுக்காக – அடுக்குத் தொடர்

III. பழகப் பழகப் – அடுக்குத்தொடர்

IV. வடித்த கஞ்சியில் – பெயரெச்சத் தொடர்

A) I, III மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

83. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. நன்றாகப் பேசினான் – வினையெச்சத் தொடர்

II. வந்தார் அண்ணன் – வினைமுற்றுத் தொடர்

III. கவிதைகளின் தொகுப்பு – ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

84. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?

A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

**C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு**

D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

85. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது?

A) புத்தூர்

B) மூதூர்

C) பேரூர்

**D) சிற்றூர்**

86. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது எது?

**A) வேற்றுமை உருபு**

B) எழுவாய்

C) உவம உருபு

D) உரிச்சொல்

87. காசிக்காண்டம் என்பது?

A) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

B) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

**C) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

D) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

88. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை?

A) நிலத்திற்கேற்ற விருந்து

**B) இன்மையிலும் விருந்து**

C) அல்லிலும் விருந்து

D) உற்றாரின் விருந்து

winmeen.com

89. பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகுமுன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன் – கீழ்க்கண்டவற்றுள் இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஒரு கிராமத்து நதி, சிற்பி பாலசுப்ரமணியம் – 2002

B) காதுகள், எம். வி. வெங்கட்ராம் –1993

C) அஞ்ஞாடி, பூமணி – 2014

**D) கண்ணன், பிரசாந்தி சேகரம் – அடிசில் 2017**

90. பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்ந்துகொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்டவைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு– அது கிராமத்து உன்னதம் – கீழ்க்கண்டவற்றுள் இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஒரு கிராமத்து நதி, சிற்பி பாலசுப்ரமணியம் – 2002

**B) கண்ணன், பிரசாந்தி சேகரம் – அடிசில் 2017**

C) அஞ்ஞாடி, பூமணி – 2014

D) காதுகள், எம். வி. வெங்கட்ராம் –1993

91. "மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து" – என்று பழைய சோறு பற்றி பற்றி கூறும் நூல் எது?

A) புறநானூறு

B) கலித்தொகை

C) குற்றாலக்குறவஞ்சி

**D) முக்கூடற்பள்ளு**

92. "கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில் அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம் இலையிலிட வெள்ளி எழும்" – இந்தப் பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) மனோன்மணியம்

**B) காளமேகப் புலவர்**

C) ஔவையார்

D) இளங்கோவடிகள்

93. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. பண்டைய இலக்கியம் – Ancient literature

II. பக்தி இலக்கியம் – Devotional literature

III. காப்பிய இலக்கியம் – Epic literature

IV. செவ்விலக்கியம் – Classical literature

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

94. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. பண்டைய இலக்கியம் – Ancient literature

II. வட்டார இலக்கியம் – Regional literature

III. நாட்டுப்புற இலக்கியம் – Folk literature

IV. நவீன இலக்கியம் – Modern literature

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II, IV மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) III மட்டும் சரி

95. ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும் சாம்பார் சாதமும் கத்தரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், 'ஆம், காணாமல் போய்விடும்'! உங்கள் குழந்தைகள், "ஆடு, மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்! – இக்கருத்து யாருடையது?

**A) கு. சிவராமன்**

B) பாலாஜி

C) மதிவதனி

D) கந்த பாலன்

96. சரியானது எது?

I. திருக்குறள் தெளிவுரை – வ. உ. சிதம்பரனார்

II. சிறுவர் நாடோடிக் கதைகள் – கி. ராஜநாராயணன்

III. ஆறாம் திணை – மருத்துவர் கு. சிவராமன்

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I மட்டும் சரி

C) II மட்டும் சரி

D) III மட்டும் சரி

97. விடுபட்டதை நிரப்புக.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் ___________ ___________ ___________?

**A) உயிரினும் ஓம்பப் படும்**

B) எய்துவர் எய்தாப் பழி

C) கல்லார் அறிவிலா தார்

D) மெய்ப்பொருள் காண்ப தறிவு

98. விடுபட்டதை நிரப்புக.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின் ___________ ___________ ___________?

A) உயிரினும் ஓம்பப் படும்

**B) எய்துவர் எய்தாப் பழி**

C) கல்லார் அறிவிலா தார்

D) மெய்ப்பொருள் காண்ப தறிவு

99. விடுபட்டதை நிரப்புக.

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும் ___________ ___________ ___________?

A) உயிரினும் ஓம்பப் படும்

B) எய்துவர் எய்தாப் பழி

**C) கல்லார் அறிவிலா தார்**

D) மெய்ப்பொருள் காண்ப தறிவு

100. விடுபட்டதை நிரப்புக.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் __________ __________ __________?

A) உயிரினும் ஓம்பப் படும்

B) எய்துவர் எய்தாப் பழி

C) கல்லார் அறிவிலா தார்

**D) மெய்ப்பொருள் காண்ப தறிவு**

101. விடுபட்டதை நிரப்புக.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன் __________ __________ __________?

**A) நாமம் கெடக்கெடும் நோய்**

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) நல்லார் தொடர்கை விடல்

102. விடுபட்டதை நிரப்புக.

அறியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் __________ __________ __________?

A) நாமம் கெடக்கெடும் நோய்

**B) பேணித் தமராக் கொளல்.**

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) நல்லார் தொடர்கை விடல்

103. விடுபட்டதை நிரப்புக.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் __________ __________ __________?

A) நாமம் கெடக்கெடும் நோய்

B) பேணித் தமராக் கொளல்

**C) கெடுப்பார் இலானும் கெடும்**

D) நல்லார் தொடர்கை விடல்

104. விடுபட்டதை நிரப்புக.

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே __________ __________ __________?

A) நாமம் கெடக்கெடும் நோய்

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

**D) நல்லார் தொடர்கை விடல்**

105. விடுபட்டதை நிரப்புக.

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும் __________ __________ __________?

**A) கோலொடு நின்றான் இரவு**

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) நல்லார் தொடர்கை விடல்

106. விடுபட்டதை நிரப்புக.

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன் __________ __________ __________?

winmeen.com

A) கோலொடு நின்றான் இரவு

**B) நாள்தொறும் நாடு கெடும்**

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) நல்லார் தொடர்கை விடல்

107. விடுபட்டதை நிரப்புக.

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம் ___________ ___________ ___________?

A) கோலொடு நின்றான் இரவு

B) பேணித் தமராக் கொளல்

**C) கண்ணோட்டம் இல்லாத கண்**

D) நல்லார் தொடர்கை விடல்

108. விடுபட்டதை நிரப்புக.

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க் ___________ ___________ ___________?

A) கோலொடு நின்றான் இரவு

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

**D) குரிமை உடைத்திவ் வுலகு**

109. விடுபட்டதை நிரப்புக.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க ___________ ___________ ___________?

**A) நாகரிகம் வேண்டு பவர்**

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) நல்லார் தொடர்கை விடல்

110. விடுபட்டதை நிரப்புக.

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும் ___________ ___________ ___________?

A) நாகரிகம் வேண்டு பவர்

**B) பெருமை முயற்சி தரும்**

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) நல்லார் தொடர்கை விடல்

111. விடுபட்டதை நிரப்புக.

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே ___________ ___________ ___________?

A) நாகரிகம் வேண்டு பவர்

B) பேணித் தமராக் கொளல்

**C) வேளாண்மை என்னும் செருக்கு**

D) நல்லார் தொடர்கை விடல்

112. விடுபட்டதை நிரப்புக.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை ___________ ___________ ___________?

A) நாகரிகம் வேண்டு பவர்.

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

**D) இன்மை புகுத்தி விடும்**

113. விடுபட்டதை நிரப்புக.

பொறிஇன்மை யார்க்கும் பழிஅன் றறிவறிந் ___________ ___________ ___________?

**A) தாள்வினை இன்மை பழி**

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) இன்மை புகுத்தி விடும்

114. விடுபட்டதை நிரப்புக.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் ___________ ___________ ___________?

A) தாள்வினை இன்மை பழி

**B) தாழா துஞற்று பவர்**

C) கெடுப்பார் இலானும் கெடும்

D) இன்மை புகுத்தி விடும்

115. விடுபட்டதை நிரப்புக.

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய ___________ ___________ ___________?

A) தாள்வினை இன்மை பழி

B) பேணித் தமராக் கொளல்

**C) கோடிஉண் டாயினும் இல்**

D) இன்மை புகுத்தி விடும்

116. விடுபட்டதை நிரப்புக.

நச்சுப் படாதவன் செல்வம் நடுஊருள் ___________ ___________ ___________?

A) தாள்வினை இன்மை பழி

B) பேணித் தமராக் கொளல்

C) கெடுப்பார் இலானும் கெடும்

**D) நச்சு மரம்பழுத் தற்று**

117. நச்சுப் படாதவன் செல்வம் நடுஊருள் நச்சு மரம்பழுத் தற்று – என்ற குறளில் பயின்று வரும் அணி எது?

**A) உவமையணி**

B) எடுத்துக்காட்டு உவமையணி

C) தற்குறிப்பேற்ற அணி

D) வஞ்சப்புகழ்ச்சி அணி

118. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண் – என்ற குறளில் பயின்று வரும் அணி எது?

A) உவமையணி

**B) எடுத்துக்காட்டு உவமையணி**

C) தற்குறிப்பேற்ற அணி

D) வஞ்சப்புகழ்ச்சி அணி

119. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும் கோலொடு நின்றான் இரவு – என்ற குறளில் பயின்று வரும் அணி எது?

A) தற்குறிப்பேற்ற அணி

B) எடுத்துக்காட்டு உவமையணி

winmeen.com

**C) உவமையணி**

D) வஞ்சப்புகழ்ச்சி அணி

120. திருக்குறள் பற்றிய கவிதை: உரை(றை) ஊற்றி ஊற்றிப் பார்த்தாலும்

புளிக்காத பால்! தந்தை தந்த தாய்ப்பால் முப்பால்! – என்று பாடியவர் யார்?

A) மதிவதனி

B) செங்கல்வராயன்

C) சாலை இளந்திரையன்

**D) அறிவுமதி**

121. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்ப்பாடு எது?

A) தேமா புளிமா காசு

**B) கூவிளம் தேமா மலர்**

C) புளிமா தேமா பிறப்பு

D) கூவிளம் புளிமா நாள்

122. உயிரினும் மேலானதாகப் பேணிக் காக்க வேண்டியது எது?

**A) ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தருவதால், அவ்வொழுக்கத்தை**

B) ஒழுக்கமாக வாழும் எல்லாரும் மேன்மை அடைவர்

C) உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதார்

D) உண்மைப்பொருளைக் காணும் அறிவை

123. பொருத்தமானதை தேர்வு செய்க.

I. ஒழுக்கமாக வாழும் எல்லாரும் மேன்மை அடைவர் – ஒழுக்கம் தவறுபவர் அடையக்கூடாத பழிகளை அடைவர்

II. உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதார் – பல நூல்களைக் கற்றாராயினும் அறிவு இல்லாதவரே எனக் கருதப்படுவார்

III. எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் – அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்

IV. ஆசை, சினம், அறியாமை என்ற மூன்றும் – அழிந்தால் இவற்றால் வரும் துன்பமும் அழியும்

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

124. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. கிடைத்தற்கரிய பேறுகளுள் எல்லாம் பெரும்பேறு பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதல் ஆகும்.

II. குற்றங் கண்டபொழுது இடித்துக் கூறும் பெரியாரைத் துணைக்கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னன், பகைவர் இன்றியும் தானே கெடுவான்.

III. தானொருவனாக நின்று பலரோடு பகைமேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தருவது நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடுதலாகும்.

IV. ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரிவிதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) IV மட்டும் சரி

125. மன்னவன், தன் நாட்டை நாள் தோறும் இழக்க நேரிடுவது எப்போது?

**I. தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாதபோது.**

II. பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன் என்றவாறு ஆட்சி செய்யும் போது

III. நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டும் போது

IV. விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டுள்ள போது

126. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியது எது?

I. பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்? – இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?

II. நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு – இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

III. விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர்கள் – பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் அதனை உண்ணும் பண்பாளர் ஆவார்.

**A) I, II, III அனைத்துமே சரி**

B) I மட்டும் சரி

C) III மட்டும் சரி

D) I, II, III அனைத்துமே தவறு

127. யாரால் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும்?

A) அறிய வேண்டியதை அறிய முயற்சி செய்யாதவர்கள்

**B) விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்கள்**

C) சோர்விலாது முயற்சி செய்வோர்

D) பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர்கள்

128. யார் ஒருவர்க்குச் செல்வம் பெருகும்? யார் ஒருவர்க்கு வறுமையே வந்து சேரும்?

A) ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருப்பவர்; அறிய வேண்டியதை அறிய முயற்சி செய்யாதவர்கள்

B) சோர்விலாது முயற்சி செய்வோர்; பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர்கள்

**C) முயற்சி செய்பவர்; முயற்சி செய்யாதவர்**

D) இவற்றில் ஏதுமில்லை

129. எது இழிவன்று? எது இழிவாகும்?

**A) ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருத்தல்; அறிய வேண்டியதை அறிந்து முயற்சி செய்யாதிருத்தல்**

B) சோர்விலாது முயற்சி செய்தல்; பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருத்தல்

C) முயற்சி செய்தல்; இகழ்ச்சி இல்லாதிருத்தல்

D) இவற்றில் ஏதுமில்லை

130 கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

I. சோர்விலாது முயற்சி செய்வோர், செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும் முன் வினையையும் தோற்கடித்து வெற்றியடைவர்

II. பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர், அடுக்கடுக்காய்ப் பல கோடிப் பொருள்கள் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை

III. பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) III மட்டும் சரி

winmeen.com

# 10th Tamil Questions - Unit 4

1. ___________ ஆம் ஆண்டுகளில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் (personal computers) வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் (digital revolution) காரணமாயின. அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு.

A) 1970

**B) 1980**

C) 1990

D) 2000

2. செயற்கை நுண்ணறிவு – சரியான கூற்று எது?

I. அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறதே, அதனுள் பொதிந்திருப்பது செயற்கை நுண்ணறிவு.

II. 'அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம். இதுவே சுருக்கமான வழி' என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா? அதற்குக் காரணமாக இருப்பதும் செயற்கை நுண்ணறிவே.

III. நமது திறன்பேசியோ, கணினியோ நாம் சொல்லச் சொல்லத் தன் அகண்ட தரவுகளில் உள்ள கோடிக்கணக்கான சொற்களுடன் ஒப்பிட்டுச் சரியான சொல்லைக் கால் நொடிக்கும் குறைவான நேரத்தில் தேர்ந்தெடுத்துத் திரையில் காண்பிக்கிறதல்லவா? அங்கு இணைந்திருப்பது செயற்கை நுண்ணறிவுதான்.

IV. செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது. கண் அறுவை மருத்துவம் செய்கிறது; சமைக்கிறது; சில புள்ளிகளை வைத்துப் படம் வரைகிறது.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

3. இதழியல், செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது. அவற்றுள் விந்தையான ஒன்று, இயல்பான மொழிநடையை உருவாக்குதல் (natural language generation) என்னும் மென்பொருள். அதற்கு ___________ என்று பெயர். தகவல்களைக் கொடுத்தால் போதும், இது அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கிவிடும்.

A) விகாஸ்பீடியா

B) மித்திரன்

**C) வேர்டுஸ்மித் (எழுத்தாளி)**

D) இவற்றில் ஏதுமில்லை

4. இணையத்தில் வணிகம் செய்யும் தனியார் நிறுவனம் ஒன்று ____________ பயன்படுத்திப் பெரும்பாலும் ஆளற்ற பல்பொருள் அங்காடிகளை உலகெங்கிலும் திறந்து வருகிறது.

A) இணையச் செயலியை

**B) செயற்கை நுண்ணறிவை**

C) வலைதளத்தை

D) இவற்றில் ஏதுமில்லை

5. 2016இல் __________ நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான __________, சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

**A) ஐ.பி.எம்., வாட்சன்**

B) மைக்ரோசாப்ட், எக்ஸ் பாக்ஸ்

C) கூகுள், ஆல்பபெட்

D) இவற்றில் ஏதுமில்லை

6. __________ நாட்டில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள், இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன. அவை அங்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன.

A) மலேசியா

B) அமெரிக்கா

**C) சீனா**

D) அயர்லாந்து

7. செயற்கை நுண்ணறிவு – சரியான கூற்று எது?

I. இவ்வுலகை இதுவரை மென்பொருள் (Software) ஆண்டுகொண்டிருக்கிறது; இனிமேல் செயற்கை நுண்ணறிவுதான் ஆளப்போகிறது.

II. சமூக ஊடகங்கள் வழியாகவும் மின்னணுச் சந்தை மூலமாகவும் செயற்கை நுண்ணறிவு கொஞ்சம் கொஞ்சமாக நம்மிடம் வந்து சேரத் தொடங்கிவிட்டது.

III. சமூக ஊடகங்களில் நீங்கள் பார்க்கிற ஒவ்வொன்றும், தேடுபொறிகளில் தேடிக் கிடைக்கும் விடைகளும் செயற்கை நுண்ணறிவு தீர்மானிப்பதைத்தான்.

IV. செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு வன்பொருள்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

8. தொழில்நுட்ப வரையறைகளின்படி செயற்கை நுண்ணறிவு – சரியான கூற்று எது?

I. செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு (Computer Program) எனலாம். அது தானாகக் கற்றுக் கொள்ளக்கூடியது. இந்த அறிவைக்கொண்டு தனக்கு வரும் புதிய புதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது.

II. ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக் கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார். அவ்வாறு கற்றுக் கொண்டதை அந்த இயந்திரம் தேவைப்படும் இடங்களில், தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும்.

III. செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை; செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்து கொள்ளவும் முடியும் என்பதே அதன் சிறப்பு.

IV. மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

9. மெய்நிகர் உதவியாளர் சரியான கூற்று எது?

I. திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றது. இவை நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும். நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்பதை உலாவியில் (browser) தேடும்.

II. நாம் விரும்பும் அழகான கவிதையை இணையத்தில் தேடித் தரும்! எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றிக் கருத்துரைக்கும்.

எதிர்காலத்தில் உங்கள் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் இதுபோன்ற மெய்நிகர் உதவியாளர் உங்களை நன்கு அறிந்தவர்களாக இருக்கும்;

III. "டாக்டர்! திரும்பவும் ஐயாவுக்கு மூச்சுத் திணறல்! டெரிஃப்லின் ஊசி போட்டுவிடட்டுமா?" – என்று கேட்கும். இந்த உதவியாளர்களை 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்' என்று பாரதியார் மெச்சுவதுபோல் மெச்சிக் கொள்ளலாம்!

IV. மெய்நிகர் உதவியாளர், இயற்கை நுண்ணறிவுடன் செயல்படும் தனித்துவம் வாய்ந்தது.

A) I, II மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

10. ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவு – சரியான கூற்று எது?

I. தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக்கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் திறன்பேசியைத் திறப்பது பழமையானது.

II. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டுதிறப்பது, இன்றைய தொழில்நுட்பம். இது படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது. திறன்பேசிகளில் உள்ள ஒளிப்படக் கருவியில், எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில்நுட்பம் உதவுகிறது.

III. ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்த, பணம் மிக மிக அதிக அளவில் வீணாகும்.

IV. காணொலிகளைத் தொகுக்கும் மென் பொருள்களில் (Video Editing ) இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுகிறது. இதன் மூலம் நேரம் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, IV மட்டும் சரி**

11. இந்தியாவின் பெரிய வங்கியான ___________, 'இலா' (ELA – Electronic Live Assistant) என்னும் உரையாடு மென்பொருளை (Chatbot) உருவாக்கியிருக்கிறது. ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் அது உரையாடும்.

A) இந்தியன் வங்கி

**B) பாரத ஸ்டேட் வங்கி**

C) ஆக்ஸிஸ் வங்கி

D) கனரா வங்கி

12. செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் ___________ (DATA SCIENTISTS) தேவை கூடியுள்ளது. இயந்திரக் கற்றல் வல்லுநர்கள் முதலான பல தொழில்நுட்ப வல்லுநர்களின் தேவையும் பெருகி வருகிறது.

A) வன்பொருள் வல்லுநர்கள்

B) மென்பொருள் வல்லுநர்கள்

**C) தரவு அறிவியலாளர்கள்**

D) இவற்றில் ஏதுமில்லை

13. ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே ___________. இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன. இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச்

செயல்படுகின்றன. இந்த ரோபோவை வரவேற்பாளராகவும், பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

A) அசிமோ

**B) பெப்பர்**

C) நவ்

D) டோபியோ

14. பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் ___________ யைப் பயன்படுத்துகின்றன.

**A) செயற்கை நுண்ணறிவு**

B) விளம்பரங்கள்

C) தானியங்கி இயந்திரங்கள்

D) இவற்றில் ஏதுமில்லை

15. ஒரு காலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்த கல்வியறிவே போதுமானதாக இருந்தது. இப்போது கல்வியறிவுடன் ___________ அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கவும் வணிகத்தில் வெற்றியடையவும் உதவுகிறது. ஆனால் எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்த உதவும்.

A) மென்பொருள் தகவமைப்பை

B) வன்பொருள் தகவமைப்பை

**C) மின்னணுக் கல்வியறிவையும் (Digital Literacy) மின்னணுச் சந்தைப்படுத்துதலையும் (Digital Marketing)**

D) இவற்றில் ஏதுமில்லை

16. சீன நாட்டில் '___________' நகருக்கு 500 கல் வடக்கே சூவன்சௌ என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர். அதன் காரணமாக சீனாவில் சிவன் கோவில் ஒன்று கட்டப்பட்டது. அது சீனப் பேரரசரான ___________ ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் தமிழ்க் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது. இக்கோயிலில் ___________ காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

A) பெய்ஜிங், ஆங் வு, சேரர்

**B) காண்டன், குப்லாய்கான், சோழர்**

C) ஹாங்காங், தான் லுன், பாண்டியர்

D) இவற்றில் ஏதுமில்லை

17. பொருந்திய இணையைக் கண்டறிக.

I. பெப்பர் – ஜப்பான் சாப்ட் வங்கி

II. வாட்சன் – ஐ.பி.எம். நிறுவனம்

III. இலா – பாரத ஸ்டேட் வங்கி

IV. சுகா – புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் இயந்திர மனிதன்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) IV மட்டும் சரி

18. வேர்டுஸ்மித் என்பதைத் தமிழில் _________ என்று அழைப்பர்.

**A) எழுத்தாளி**

B) எழுத்தாணி

C) எழுத்தோவியம்

D) குரலாளி

19. "இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்" என்று பாடியவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) கவிமணி

D) வைரமுத்து

20. ஜப்பானில் வரவேற்பாளராகவும் பணியாளராகவும் உள்ள இயந்திர மனிதன் பெயர்?

A) வாட்சன்

B) இலா

C) வேர்ட்டுஸ்மித் (எழுத்தாளி)

**D) பெப்பர்**

21. காண்டன் நகர் அமைந்துள்ள நாடு எது?

A) இந்தியா

**B) சீனா**

C) அமெரிக்கா

D) ஜப்பான்

22. சீனாவில் சிவன் கோவில் கட்டிய சீனப்பேரரசர் யார்?

A) சூ யுவான்சாங்க்

B) கின் ஷி ஹுவாங்

**C) குப்லாய்கான்**

D) இவர்களில் யாருமில்லை

23. எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் _____________ தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவும் நம்மை வளப்படுத்த உதவும்.

அ) மூன்றாவது

**ஆ) நான்காவது**

இ) ஐந்தாவது

ஈ) இரண்டாவது

24. பெருமாள் திருமொழி என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) கம்பர்

B) சுந்தரர்

C) மாணிக்கவாசகர்

**D) குலசேகர ஆழ்வார்**

25. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. சுடினும் – சுட்டாலும்

II. மாளாத – தீராத

III. மாயம் – விளையாட்டு

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

26. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டம்மா! – வித்துவக்கோடு என்னும் ஊர் எங்கு உள்ளது? இங்குள்ள இறைவனான உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடியவர் யார்?

A) ஆந்திரா மாநிலம் திருப்பதி, நம்மாழ்வார்

**B) கேரளா மாநிலம் பாலக்காடு, குலசேகர ஆழ்வார்**

C) தமிழ்நாடு மாநிலம் சென்னை, கம்பர்

D) கர்நாடகம் மாநிலம் பெங்களூரு, சுந்தரர்

27. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டம்மா! நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே – என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) திருப்பாவை

B) பெரியாழ்வார் திருமொழி

C) திருச்சந்த விருத்தம்

**D) பெருமாள் திருமொழி**

28. கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

I. இலக்கியங்கள் தாம் தோன்றிய சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு மட்டும் இல்லாமல் அக்காலகட்டத்தில் நிலவிய அறிவியல் கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தாங்கி அமைகின்றன.

II. அறிவியல் செழுமை அடைந்திருக்கும் இக்காலத்தின் தொடக்க விதைகளைப் பண்டைய இலக்கியங்களில் நாம் பார்க்க முடிகிறது.

III. மேனாட்டு அறிவியல் சிந்தனையின் சாயல், துளியும் இல்லாமல் படைக்கப்பட்ட தமிழர் இலக்கியங்களில் துளிர்த்திருக்கும் அறிவியல் கருத்துகள் இன்றளவும் அவற்றோடு ஒத்துப்போவதைக் காண்கையில் பெருவியப்பு மேலிடுகிறது. புவியின் உருவாக்கம் குறித்து இன்றைய அறிவியல் கூறுகிற கருத்தை அன்றே காட்டிய பழங்கவிதை வியப்பிலும் வியப்பே!

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I, II சரி III தவறு

C) II, III மட்டும் சரி

D) III மட்டும் சரி

29. விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக், கரு வளர் வானத்து இசையில் தோன்றி, உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்; உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும் செந் தீச்சுடரிய ஊழியும் – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) பரிபாடல்**

B) கலித்தொகை

C) ஐங்குறுநூறு

D) அகநானூறு

30. பனியொடு தண் பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு, மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும் – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) சேக்கிழார்

B) ஔவையார்

**C) கீரந்தையார்**

D) சீத்தலை சாத்தனார்

31. மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அதுபோன்று நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன் – என்ற கூற்று யாருடையது?

A) மாணிக்கவாசகர்

B) கம்பர்

C) ஔவையார்

**D) குலசேகர ஆழ்வார்**

32. எதுவுமேயில்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது. உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும் படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது – என்ற கூற்று யாருடையது?

**A) கீரந்தையார்**

B) ஔவையார்

C) பாரதியார்

D) நாமக்கல் கவிஞர்

33. பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது – என்ற கூற்று யாருடையது?

A) சுத்தானந்த பாரதி

B) வைகுண்ட சுவாமிகள்

C) திரு.வி.க

**D) கீரந்தையார்**

34. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. விசும்பு – வானம்

II. ஊழி – யுகம்

III. ஊழ் – முறை

IV. தண்பெயல் – குளிர்ந்த மழை

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) II, III, IV மட்டும் சரி

35. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. ஆர்தருபு – வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த

II. பீடு – சிறப்பு

III. ஈண்டி – செறிந்து திரண்டு

IV. நவ்வி – கரடி

A) I, II, III, IV அனைத்தும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) II, III, IV மட்டும் சரி

36. ஊழ் ஊழ் – இலக்கணக்குறிப்பு தருக?

**A) அடுக்குத்தொடர்**

B) வினைத்தொகை

C) பண்புத்தொகை

D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

37. வளர்வானம் – இலக்கணக்குறிப்பு தருக?

A) அடுக்குத்தொடர்

**B) வினைத்தொகை**

C) பண்புத்தொகை

D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

38. செந்தீ – இலக்கணக்குறிப்பு தருக?

A) அடுக்குத்தொடர்

B) வினைத்தொகை

**C) பண்புத்தொகை**

D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

39. வாரா (ஒன்றன்) – இலக்கணக்குறிப்பு தருக?

A) அடுக்குத்தொடர்

B) வினைத்தொகை

C) பண்புத்தொகை

**D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

40. கிளர்ந்த – பகுபத உறுப்பிலக்கணம் சரியானது எது?

I. கிளர்ந்த – கிளர் + த்(ந்) + த் + அ

II. கிளர் – பகுதி; த் – சந்தி;

III. த்(ந்) – ஆனது விகாரம்

IV. த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

A) I, II மட்டும் சரி

B) I, II, III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் தவறு

41. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டம்மா! நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே – இந்த பாடலைப் பற்றிய சரியான கூற்று எது?

I. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 691ஆவது பாசுரம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

II. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன. இதனைப் பாடியவர் குலசேகராழ்வார். இவரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.

III. திருக்கை வழக்கம், சிலையெழுபது, சடகோபர் அந்தாதி ஆகியன குலசேகராழ்வாரின் பிற நூல்கள்.

IV. குலசேகராழ்வார் மயிலாப்பூரில் தங்கி சேவை புரிந்தார்.

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

D) IV மட்டும் சரி

42. __________ நாட்டின் வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் _________ ஆம் ஆண்டு நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.

A) இங்கிலாந்து, 1914

**B) அமெரிக்கா, 1924**

C) ரஷ்யா, 1934

D) அயர்லாந்து, 1944

43. ___________ ஆண்டுகளுக்கு முன் ___________ என்பவர் ___________ நூலில், திருஅண்டப் பகுதியில் இவ்வாறாக எழுதுகிறார். "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் .... சிறிய ஆகப் பெரியோன் தெரியின்".

A) 1000, கம்பர், கம்பராமாயணம்

B) 1100, இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்

C) 1200, சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை

**D) 1300, மாணிக்கவாசகர், திருவாசகம்**

44. பரிபாடல் ___________ நூல்களுள் ஒன்றாகும்.

A) பத்துப்பாட்டு

**B) எட்டுத்தொகை**

C) சிற்றிலக்கியம்

D) ஐம்பெரும் காப்பியங்கள்

45. பரிபாடல் மற்றும் சங்க இலக்கியம் பற்றிய சரியான கூற்று எது?

I. பரிபாடல் – இந்நூல் ஓங்கு பரிபாடல் எனும் புகழுடையது. இது சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்.

II. உரையாசிரியர்கள் பரிபாடலில் 70 பாடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர். இன்று 24 பாடல்களே கிடைத்துள்ளன.

III. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூக உறவு, அறிவாற்றல், இயற்கையைப் புரிந்து கொள்ளும் திறன் போன்றவற்றைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

A) I மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

46. பரிபாடல் ___________ ஆகும்.

A) இலக்கண நூல்

B) நாடகம்

**C) இசைப்பாடல்**

D) இவற்றில் ஏதுமில்லை

47. கீழ்க்கண்டவற்றுள் பெருவெடிப்புக் காட்சி – பற்றி கூறும் நூல் எது?

**A) பரிபாடல்**

B) கலித்தொகை

C) நற்றிணை

D) ஐங்குறுநூறு

48. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப வளாகம் எங்கு உள்ளது?

A) ஈரோடு, கோபிசெட்டி பாளையம்

B) திருவாரூர், மன்னார்குடி

**C) சென்னை, கோட்டூர்புரம்**

D) இவற்றில் ஏதுமில்லை

49. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் ___________ ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இங்கு பத்துக் காட்சிக் கூடங்கள் உள்ளன. பரிணாம வளர்ச்சி பூங்கா, புதிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பூங்கா, இயந்திரவியல் பூங்கா, குழந்தைகள் விளையாடத்தக்க பொம்மைகளைக் கொண்ட பூங்காக்கள் உள்ளன.

A) 1966

B) 1978

**C) 1988**

D) 2000

50. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தில் உள்ள கோளரங்கம் தனித்துவம் வாய்ந்தது. இந்தியாவிலேயே முதன்முதலாக 360 பாகை அரைவட்ட வானத்திரை இங்குதான் உள்ளது. இது ___________ ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

A) 2000

B) 2003

C) 2006

**D) 2009**

51. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்திக்கூர்மை.

II. அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல. அது அறிவின் மாயையே.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

52. தற்காலத்தின் ஐன்ஸ்டைன் என்று புகழப்படுபவர் யார்?

A) அப்துல் கலாம்

**B) ஸ்டீபன் ஹாக்கிங்**

C) சிவன்

D) இவர்களில் யாருமில்லை

53. ஸ்டீபன் ஹாக்கிங் – பற்றிய சரியான கூற்று எது?

I. இங்கிலாந்தின் மருத்துவமனை ஒன்றில் 1963ஆம் ஆண்டு 21 வயது இளைஞர் அனுமதிக்கப்பட்டார். மருத்துவத்திற்குப் பின் அவர் இன்னும் சில திங்களே உயிர் வாழ்வார் என்றும் விரைவில் இறந்து விடுவார் என்றும் மருத்துவர்கள் அறிக்கை தந்தனர்.

II. பக்கவாதம் என்னும் நரம்பு நோய்ப் பாதிப்புடன் அவர், மருத்துவ உலகமே மிரண்டுபோகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார்.

III. 1985இல் மூச்சுக்குழாய்த் தடங்கலால் பேசும் திறனை இழந்தார்.

IV. கன்னத் தசையமைவு மூலம் தன் கருத்தைக் கணினியில் தட்டச்சு செய்து வெளிப்படுத்தினார். அவரின் ஆய்வுகளுக்குத் துணையாகச் செயற்கை நுண்ணறிவுக் கணினி செயல்பட்டது.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

54. பேரண்டப் பெருவெடிப்பு – பற்றிய ஸ்டீபன் ஹாக்கிங் கூறியனவற்றுள் சரியானது எது?

I. இப்பேரண்டம் பெருவெடிப்பினால் (BIG BANG THEORY) உருவானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கினார்.

II. இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை மறுத்தார்.

III. பிரபஞ்சத்தை இயக்கம் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை, என்றார்.

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I மட்டும் சரி

C) II மட்டும் சரி

D) III மட்டும் சரி

55. கருந்துளை – பற்றிய சரியான கூற்று எது?

I. நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் நம் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீனின் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது.

II. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்து கொண்டே சென்று அளவற்றதாகிறது. சில நேரங்களில் உண்மை, புனைவை விடவும் வியப்பூட்டுவதாக அமைந்து விடுகிறது.

III. அப்படி ஓர் உண்மைதான் கருந்துளைகள் பற்றியதும். புனைவு இலக்கியம் படைப்பவர்களது கற்பனைகளையெல்லாம் மிஞ்சுவதாகவே கருந்துளைகள் பற்றிய உண்மைகள் உள்ளன. அதனை அறிவியல் உலகம் மிக மெதுவாகவே புரிந்துகொள்ள முயல்கிறது என்று கூறுகிறார், ஸ்டீபன் ஹாக்கிங்.

IV. சில சமயங்களில் கருந்துளையின் ஈர்ப்பு விசை பூமியில் வெப்பத்தை அதிகப்படுத்துகிறது.

A) I, II சரி III, IV தவறு

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) III, IV மட்டும் சரி

56. ______________ நாட்டின் அறிவியலாளர் ______________ என்பவர்தாம் கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர். சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பெல்லைக்குள் செல்கிற எதுவும், ஏன் ஒளியும் கூடத் தப்ப முடியாது. உள்ளே ஈர்க்கப்படும். இவ்வாறு உள் சென்ற யாவையும் வெளிவரமுடியாததால் இதனைக் கருந்துளை எனலாம் என்று இவர் கருதினார்.

**A) அமெரிக்கா, ஜான் வீலர்**

B) இங்கிலாந்து, லாரல் சுமி

C) அயர்லாந்து, செபாஸ்டியன்

D) ரஷ்யா, சுர்ரம் ரகி

57. ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருந்துளை – ஆராய்ச்சி முடிவுகள் பற்றிய சரியான கூற்று எது?

I. கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது.

II. கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து (Event Horizon) கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

III. கருந்துளை உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் கருந்துளை வெடித்து மறைந்துவிடும்.

IV. ஸ்டீபன் ஹாக்கிங்கின் இந்த ஆராய்ச்சி முடிவு 'ஹாக்கிங் கதிர்வீச்சு' என்று அழைக்கப்படுகிறது. இது கருந்துளை பற்றிய முந்தைய கருத்துகளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. முன்னர் அண்டவெளியில்

காணப்படும் கருந்துளை அழிவு ஆற்றல் என்று கருதப்பட்டது. ஆனால் ஹாக்கிங், கருந்துளை என்பது படைப்பின் ஆற்றல் என்று நிறுவினார்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

58. ஐன்ஸ்டைன், நியூட்டன் முதலானோர் ஸ்டீபன் ஹாக்கிங்கின் அறிவியல் முன்னோடிகள். இவர், அவர்களுக்கு நிகராக மதிக்கப்படுகிறார். நியூட்டன், ________________ பல்கலைக்கழகத்தில் வகித்த ________________ துறையின் 'லூகாசியன் பேராசிரியர்' என்ற மதிப்பு மிகுந்த பதவியை ஸ்டீபன் ஹாக்கிங்கும் வகித்திருக்கிறார்.

A) நாட்டிங்காம், அறிவியல்

B) ஆக்ஸ்போர்டு, புவியியல்

**C) கேம்பிரிட்ஜ், கணக்கியல்**

D) இவற்றில் ஏதுமில்லை

59. ________________ என்பவர் ஈர்ப்பலைகள் குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னார். அவர் காலத்தில் $E = MC^2$ எனும் கோட்பாட்டை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. 100 ஆண்டுகளுக்குப் பின் ஈர்ப்பலைகள் இருப்பதை உலகம் கண்டுகொண்டது.

A) ஸ்டீபன் ஹாக்கிங்

**B) ஐன்ஸ்டைன்**

C) நியூட்டன்

D) இவற்றில் ஏதுமில்லை

60. கருந்துளை குறித்த தன்னுடைய ஆய்வை ஐன்ஸ்டைன் போல, கோட்பாடுகளாக வெளியிடாமல், ________________ இயக்கத்தோடு ஒப்பிட்டு ஸ்டீபன் ஹாக்கிங் விளக்கியதால் உலகம் கருந்துளைக் கோட்பாட்டை எளிதில் புரிந்து கொண்டது.

**A) விண்மீன்**

B) சூரியன்

C) காற்று

D) ஆகாயம்

61. அறிவியல் கோட்பாடுகளை எளிய மக்களுக்கும் புரியும் வண்ணம் சொன்ன ஸ்டீபன் ஹாக்கிங் வாங்கிய விருதுகளுள் சரியானது எது?

I. அமெரிக்காவின் உயரிய விருதான அதிபர் விருது (Presidential medal of Freedom), ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது

II. உல்ஃப் விருது (Wolf Foundation Prize), காப்ளி பதக்கம் (Copler Medal), அடிப்படை இயற்பியல் பரிசு (Fundamental Physics Prize)

III. நோபல் பரிசு, பாரத ரத்னா

IV. பத்ம ஸ்ரீ, ஆஸ்கர், மேன் புக்கர்

A) I மட்டும் சரி

**B) I, II மட்டும் சரி.**

C) II, III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

62. ஹாக்கிங், ________________ என்பவரின் நினைவு நாளில் பிறந்து, ________________ என்பவரின் பிறந்த நாளில் இறந்தது அறிவியலைப் பொறுத்தவரை ஒரு தற்செயல் நிகழ்வாக இருக்கலாம். ஆனால் அந்தத் தற்செயலிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. இம் மூன்று அறிவியலாளர்களும் அவரவர் காலத்தில் இந்தப்

பேரண்டத்தைப் பற்றி இருந்த புரிதலைப் பலமடங்கு வளர்த்தவர்கள்; பேரண்டத்தைப் பற்றி மனித இனம் நம்பியதைப் புரட்டிப் போட்டவர்கள். ஹாக்கிங்குடைய துணிச்சல், உறுதி, அறிவாற்றல், நகைச்சுவை உணர்வு முதலானவை உலக மக்களால் என்றும் நினைவுகூரப்படும்.

A) நியூட்டன், ராண்ட்ஜன்

B) தாமசு ஆல்வா எடிசன், அப்துல் கலாம்

**C) கலீலியோ, ஐன்ஸ்டைன்**

D) இவற்றில் ஏதுமில்லை

63. தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. விதிதான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும் போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள்? – என்று கூறியவர் யார்?

**A) ஸ்டீபன் ஹாக்கிங்**

B) எடிசன்

C) நியூட்டன்

D) கலிலியோ

64. ஸ்டீபன் ஹாக்கிங் வாழ்க்கைப் பயணத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் – கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. 2012 இல் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் "தொடக்க விழா நாயகர்" என்ற சிறப்பைப் பெற்றார். 'அடுத்த தலைமுறை' (The next generation), 'பெருவெடிப்புக் கோட்பாடு' (The Bigbang Theory) உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர்களில் பங்கேற்றார்.

II. சூடான காற்று நிரம்பிய பலூனில் வானில் பறந்து தனது 60 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

III. போயிங் 727 என்ற விமானத்தில் பூஜ்ஜிய ஈர்ப்பு விசைப் பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை உணர்ந்தார்.

IV. ஸ்டீபன் ஹாக்கிங் வாழ்க்கைப் பயணத்தில் மிக முக்கியமான ஒன்று, அவர் இமயமலை சென்றது.

A) I, II மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) III, IV மட்டும் சரி

D) I, II, III, IV அனைத்துமே சரி

65. உடலில் ஏற்பட்ட உறுப்பு இழப்போ, ஊனமோ ஒருவருக்குக் குறையாகாது; ஊக்கமும் உழைப்பும் சேர்ந்த ஆளுமைத் தன்மை இல்லாமல் இருப்பதே குறையாகும் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் ______________?

A) கலிலியோ

B) எடிசன்

C) நியூட்டன்

**D) ஸ்டீபன் ஹாக்கிங்**

66. 'விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை' குறும்படம் யாரைப்பற்றியது?

A) கல்பனா சாவ்லா

**B) ஸ்டீபன் ஹாக்கிங்**

C) ரைட் சகோதரர்கள்

D) இவற்றில் ஏதுமில்லை

67. ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் ________________ மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. ________________ ஆம் ஆண்டு வெளிவந்த

இந்நூல் பெருவெடிப்பு, கருந்துளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி, ஒரு கோடிப் படிகளுக்கு மேல் விற்பனையானது.

A) இருபது, 1975

**B) நாற்பது, 1988.**

C) ஐம்பது, 2000

D) அறுபது, 2010

68. "கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை" (கரூர் மாவட்டத்தின் கருவூர் (கரூர் )) – என்று கூறும் நூல் எது?

A) ஐங்குறுநூறு

B) கலித்தொகை

C) புறநானூறு

**D) அகநானூறு.**

69. "அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று; இனி நாம் அறிந்துகொள்ளப்போவதையும் உள்ளடக்கியது – என்று கூறியவர் யார்?

**A) ஐன்ஸ்டைன்**

B) ஸ்டீபன் ஹாக்கிங்

C) கல்பனா சாவ்லா

D) ரைட் சகோதரர்கள்

70. "வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன்மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன்" – என்று கூறியவர் யார்?

A) ஐன்ஸ்டைன்

**B) ஸ்டீபன் ஹாக்கிங்**

C) கல்பனா சாவ்லா

D) ரைட் சகோதரர்கள்

71. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. இருதிணை: ஆறறிவுடைய மக்களை உயர்திணை என்றும் மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் அஃறிணை (அல்திணை) என்றும் வழங்குவர்.

II. ஐம்பால்: பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும் (பால் – பகுப்பு; பிரிவு). இஃது ஐந்து வகைப்படும்.

III. உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பிரிவுகளை உடையது.

IV. அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் என இரு பிரிவுகளை உடையது.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

72. உயர்திணைக்குரிய பால் பகுப்புகள் – சரியானது எது?

I. வீரன், அண்ணன், மருதன் – ஆண்பால்

II. மகள், அரசி, தலைவி – பெண்பால்

III. மக்கள், பெண்கள், ஆடவர் – பலர்பால்

IV. நாற்காலி, மேசை – பலவின்பால்

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

73. அஃறிணைக்குரிய பால் பகுப்புகள் – சரியானது எது?

I. அஃறிணையில் ஒன்றனைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும். எ.கா. யானை, புறா, மலை

II. அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும். எ.கா. பசுக்கள், மலைகள்

A) I மட்டும் சரி

**B) I, II இரண்டுமே சரி**

C) II மட்டும் சரி

D) I, II இரண்டுமே தவறு

74. மூவிடம் பற்றிய சரியான கூற்று எது?

I. தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

II. தன்மை – தன்மைப் பெயர்கள்: நான், யான், நாம், யாம்; தன்மை வினைகள்: வந்தேன், வந்தோம்.

III. முன்னிலை – முன்னிலைப் பெயர்கள்: நீ, நீர், நீவிர், நீங்கள்; முன்னிலை வினைகள்: நடந்தாய், வந்தீர், சென்றீர்கள்.

IV. படர்க்கை – படர்க்கைப் பெயர்கள்: அவன், அவள், அவர், அது, அவை; படர்க்கை வினைகள்: வந்தான், சென்றாள், படித்தனர், பேசினார்கள், பறந்தது, பறந்தன.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

75. இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ________________ எனப்படும்.

**A) வழாநிலை**

B) வழு

C) வழுவமைதி

D) இவற்றில் ஏதுமில்லை

76. இலக்கணமுறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ________________ எனப்படும்.

A) வழாநிலை

**B) வழு**

C) வழுவமைதி

D) இவற்றில் ஏதுமில்லை

77. இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது ________________ ஆகும்.

A) வழாநிலை

B) வழு

**C) வழுவமைதி**

D) இவற்றில் ஏதுமில்லை

78. வழு – கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

winmeen.com

I. திணை – செழியன் வந்தது; பால் – கண்ணகி உண்டான்.

II. இடம் – நீ வந்தேன்; காலம் – நேற்று வருவான்.

III. வினா – ஒரு விரலைக் காட்டிச் 'சிறியதோ? பெரியதோ?' என்று கேட்டல்; விடை – 'கண்ணன் எங்கே இருக்கிறார்?' என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல்.

IV. மரபு – தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

79. வழாநிலை – கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. திணை – செழியன் வந்தான்; பால் – கண்ணகி உண்டாள்.

II. இடம் – நீ வந்தாய்; காலம் – நேற்று வந்தான்.

III. வினா – இரு விரல்களைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது?' என்று கேட்டல். விடை – கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார் என்று விடையளித்தல்.

IV. மரபு – தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோப்பு என்று கூறுதல்.

A) I, II மட்டும் சரி

B) I, II, III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

80. "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது ________________ ஆகும். இங்கு உவப்பின் காரணமாக அஃறிணை, உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

**A) திணை வழுவமைதி**

B) பால் வழுவமைதி

C) இட வழுவமைதி

D) கால வழுவமைதி

81. "வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது ________________ ஆகும். இங்கு உவப்பின் காரணமாகப் பெண்பால், ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

A) திணை வழுவமைதி

**B) பால் வழுவமைதி**

C) இட வழுவமைதி

D) கால வழுவமைதி

82. மாறன் என்பான் தன்னைப்பற்றிப் பிறரிடம் கூறும்போது, "இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்" என, தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது ________________ ஆகும்.

A) திணை வழுவமைதி

B) பால் வழுவமைதி

**C) இட வழுவமைதி**

D) கால வழுவமைதி

83. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார். இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லை என்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை. ஏனெனில் அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் ________________ ஆக ஏற்றுக் கொள்கிறோம்.

A) திணை வழுவமைதி

B) பால் வழுவமைதி

C) இட வழுவமைதி

**D) கால வழுவமைதி**

84. "கத்துங் குயிலோசை – சற்றே வந்து காதிற் படவேணும்"– பாரதியார். குயில் கூவும் என்பதே மரபு, குயில் கத்தும் என்பது மரபு வழு ஆகும். இங்குக் கவிதையில் இடம்பெற்றிருப்பதால் இது _______________ ஆக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**A) மரபு வழுவமைதி**

B) பால் வழுவமைதி

C) இட வழுவமைதி

D) கால வழுவமைதி

85. இரு திணையும் ஐம்பாலும் மூவிடமும் காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தொடர்களில் இலக்கணப் பிழைகளுடன் வந்தால் அவையும் ________________ எனப்படும். அவ்வாறு இலக்கணப் பிழைகள் இல்லாதிருப்பின் அவை ________________ எனப்படும்.

**A) வழு, வழாநிலை**

B) வழு, வழாநிலை

C) வழுவமைதி, வழாநிலை

D) இவற்றில் ஏதுமில்லை

86. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக – சரியானது எது?

I. அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார் – கால வழுவமைதி

II. "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான் – இட வழுவமைதி

III. சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம் – மரபு வழுவமைதி

IV. செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார் – திணை வழுவமைதி.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

87. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?

A) குலசேகராழ்வாரிடம் இறைவன்

**B) இறைவனிடம் குலசேகராழ்வார்**

C) மருத்துவரிடம் நோயாளி

D) நோயாளியிடம் மருத்துவர்

88. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

தலைப்பு: செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள்: கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

**A) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன**

B) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது

C) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன

D) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது

89. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

A) வானத்தையும் பாட்டையும்

B) வானத்தையும் புகழையும்

C) வானத்தையும் பூமியையும்

**D) வானத்தையும் பேரொலியையும்**

90. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே –

A) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

B) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

**C) பால் வழுவமைதி, திணை வழுவமைதி**

D) கால வழுவமைதி, இடவழுவமைதி

91. முகந்தெரியா நபரிடையே இனம்புரியா உறவு முறை நட்பெனும் சங்கிலிக்குள் நாடெல்லாம் சங்கமிக்கும் வாடிக்கை செய்பவரின் கேளிக்கை கூத்துகளை வேடிக்கை பார்ப்பதனை வாழ்க்கையெனக் கொண்ட பலர் தேடியுமே கிடைக்காத தேசம் கடந்த உறவுகளை இணையத்தின் தேடலினால் நிமிடத்தில் அறியும் சிலர் பகடிகளின் பகிர்ந்தளிப்பும் விருப்பத்தின் தெரிவிப்பும் கருத்துக்களின் பரிமாற்றம் தினமும் இங்கு இடம்பெறுமே – இந்த பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) மதன் கார்க்கி

B) வைரமுத்து

C) சச்சிதானந்தன்

**D) டெபோரா பர்னாந்து (இலங்கைத் தமிழ்க் கவிஞர்)**

92. பலர் அறிந்த பாடல்வரியும் பகலுணவின் சுவையினையும் பாட்டி தந்த பரிசினையும் பறைசாற்றும் வாய்ப்பிதுவே புகைப்படத்தில் தெரிந்தமுகம் பார்த்ததுமோர் புன்சிரிப்பு உரையாடல் செய்கையிலே அர்த்தமற்ற கலகலப்பு பரீட்சைக்கு முன்தினமும் புத்தகத்தைத் திறவாதோர் பரீட்சையின் நொடிவரைக்கும் திறந்து வைப்பதிதுவன்றோ புத்தகத்தின் மத்தியிலே மயிலிறகை வைத்தவர்கள் –முகப் புத்தகத்தைத் திறந்தவுடன் உணர்வுகளை வைப்பதேனோ – இந்த பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) மதன் கார்க்கி

B) வைரமுத்து

C) சச்சிதானந்தன்

**D) டெபோரா பர்னாந்து (இலங்கைத் தமிழ்க் கவிஞர்)**

93. காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா? எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித் துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச் செவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காது கேட்கும். பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம் – இந்த கூற்று கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?

A) வர்ணம்

B) கிரியா

**C) யுரேகா! யுரேகா! – அறிவியல் வெளியீடு**

D) இவற்றில் ஏதுமில்லை

94. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும் நேர்ப்பட வைத்தாங்கே குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு கோல வெறிபடைத்தோம்; உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும் ஓட்டி மகிழ்ந்திடுவோம்; பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு பாடுவதும் வியப்போ? – இந்த பாடலின் ஆசிரியர் பெயர் என்ன?

A) நாமக்கல் கவிஞர்

B) பாரதிதாசன்

**C) பாரதியார்**

D) வாணிதாசன்

95. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. Nanotechnology – மீநுண்தொழில்நுட்பம்

II. Space Technology – விண்வெளித் தொழில்நுட்பம்

III. Biotechnology – உயிரித் தொழில்நுட்பம்

IV. Cosmic rays – விண்வெளிக் கதிர்கள்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

96. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. Ultraviolet rays – புற ஊதாக் கதிர்கள்

II. Infrared rays – அகச்சிவப்புக் கதிர்கள்

III. Biotechnology – உயிரித் தொழில்நுட்பம்

IV. Mini Computer – இணையக் கணினி

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

97. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் – நீலமணி

II. அன்றாட வாழ்வில் அறிவியல் – ச. தமிழ்ச் செல்வன்

III. காலம் – ஸ்டீபன் ஹாக்கிங்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

winmeen.com

# 10th Tamil Questions - Unit 5

1. மொழிபெயர்ப்புக் கல்வி – பற்றிய சரியான கூற்று எது?

I. ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒரு துறையில் இல்லாத செழுமையை ஈடுசெய்ய வேறு துறைகளில் உச்சங்கள் இருக்கும்.

II. மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு. கொடுக்கல் வாங்கலாக அறிவனைத்தும் உணர்வனைத்தும் அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும்.

III. நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது மொழிபெயர்ப்பு.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) III மட்டும் சரி

2. "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் ________________.

**A) மணவை முஸ்தபா**

B) மு.கு. ஜகந்நாதர்

C) பரிதிமாற் கலைஞர்

D) உ.வே.சாமிநாதர்

3. 'ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் ________________.

A) மணவை முஸ்தபா

**B) மு.கு. ஜகந்நாதர்**

C) பரிதிமாற் கலைஞர்

D) உ.வே.சாமிநாதர்

4. மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் ________________ என்பவர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார்.

A) திருவள்ளுவர்

B) வச்சணந்தி முனிவர்

C) குணவீர பண்டிதர்

**D) தொல்காப்பியர்**

5. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி யாது?

**A) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது**

B) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

C) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

D) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

6. வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் ________________ நூல்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

A) சிற்றிலக்கியம்

B) ஐம்சிறும் காப்பியம்

C) ஐம்பெரும் காப்பியம்

**D) சங்க இலக்கியம்**

7. கீழ்க்கண்டவற்றுள் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவை எவை?

**A) பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம்.**

B) திருக்குறள், நாலடியார், நான்மணிக் கடிகை

C) ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன்

D) இவற்றில் ஏதுமில்லை

8. மொழிபெயர்ப்பு தேவை பற்றிய சரியான கூற்று எது?

I. மொழி பெயர்ப்பு, எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று.

II. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது;

III. ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழிபெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த இருக்கின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது.

IV. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம் (NBT), தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

9. மொழிபெயர்ப்பின் தேவையை உணர்த்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறார்கள். உலகப் போரின்போது அமெரிக்கா, "சரண் அடையாவிடில் குண்டு வீசப்படும்" என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும் அதற்கு ஜப்பான், 'மொகு சாஸ்ட்டு'என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹீரோஷிமாவில் குண்டுவீசியது என்று சொல்கிறார்கள். அந்தத் தொடருக்குப் பொருள், '________________' என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள், 'மறுக்கிறோம்' என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர்.

**A) விடைதர அவகாசம் வேண்டும்**

B) போருக்குத் தயார்

C) சமாதானம்

D) போர் வேண்டாம்

10. மொழிபெயர்ப்பு கல்வி – பற்றிய சரியான கூற்று எது?

I. மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்; அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளி நாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்;

II. மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்; நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத்தன்மையைப் பெறமுடியும்.

III. நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும்

தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

IV. இவ்வாறாக பல காரணங்கள் இருப்பினும் மொழிபெயர்ப்பு கல்வி தற்காலத்தில் அவசியமற்ற ஒன்றாகவே உள்ளது.

A) I, II மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) II, III மட்டும் சரி

D) II, III, IV மட்டும் சரி

11. பாரதியின் மொழி பெயர்ப்பு – சரியானவை எவை?

I. Exhibition – காட்சி, பொருட்காட்சி

II. East Indian Railways – இருப்புப் பாதை

III. Revolution – புரட்சி

IV. Strike – தொழில் நிறுத்தி இருத்தல், தொழில் நிறுத்தம், வேலை நிறுத்தம்

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II, III மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

12. இலக்கிய இறக்குமதி – சரியான கூற்று எது?

I. பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

II. இலக்கியம் என்பது தன் அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது.

III. அத்தகைய பொது நிலை பெற்ற இலக்கியத்தை மொழிவேலி சிறையிடுகிறது. மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது.

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) III மட்டும் சரி

13. ________________ மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.

A) பிரெஞ்சு

B) ஆங்கிலம்

C) மலாய்

**D) ஜெர்மன்**

14. ________________ ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின.

A) 15

B) 16

C) 17

**D) 18**

15. ________________ வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

**A) இரவீந்திரநாத தாகூர்**

B) காசி நஸ்ருல்

C) கவிஞர் வித்யாபதி

D) அக்னிஹோத்ரி

16. ஒரு நாடு எவ்வளவு ________________ பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவார்கள். அதுபோல, ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

A) காற்று ஆற்றல்

**B) மின்னாற்றல்**

C) சூரிய ஆற்றல்

D) நீர் ஆற்றல்

17. எங்கோ தொலைதூரத்தில் வாழும் மனிதர்கள் தங்களின் மொழியில் சொன்னவற்றை, எழுதியவற்றை இன்னொரு மொழியில் தமக்குத் தெரிந்த மொழியில் மொழிபெயர்த்து அறிந்து கொள்கிறார்கள். அதுதான் மொழிபெயர்ப்பு. எப்பொழுது உலகத்தில் நான்கைந்து மொழிகள் உருவாயினவோ அப்பொழுதே மொழி பெயர்ப்பும் வந்துவிட்டது. கருத்துப்பரிமாற்றம், தகவல் பகிர்வு, அறநூல் அறிதல், இலக்கியம், தத்துவம் என்பன எல்லாம் மொழிபெயர்ப்பு வழியாகவே சர்வதேசத்தன்மை பெறுகின்றன – என்ற கூற்று யாருடன் தொடர்புடையது?

A) ராஜம் கிருஷ்ணன்

B) சுஜாதா

**C) சா. கந்தசாமி**

D) பெருஞ்சித்திரனார்

18. ராகுல் சாங்கிருத்யாயன் 1942 ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை ________________ மொழியில் எழுதினார். ________________ ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இன்றுவரையில் 'வால்காவிலிருந்து கங்கை வரை' ஒவ்வொரு தமிழரும் விரும்பிப் படிக்கும் நூலாக இருக்கிறது.

A) மலையாளம், 1943

**B) இந்தி, 1949**

C) சமஸ்கிருதம், 1950

D) பஞ்சாபி, 1955

19. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை மொழிபெயர்த்த வருடம் மற்றும் ஆசிரியர் – சரியானது எது?

I. 1949 – கணமுத்தையா மொழி பெயர்ப்பு

II. 2016 – டாக்டர் என்.ஸ்ரீதர் மொழி பெயர்ப்பு

III. 2016 – முத்து மீனாட்சி மொழி பெயர்ப்பு

IV. 2018 – யூமா வாசுகி மொழி பெயர்ப்பு

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

20. மொழிபெயர்ப்பு செம்மை – பற்றிய சரியான கூற்று எது?

I. Hundred railsleepers were washed away என்பதை, தொடர்வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறு பேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று ஒரு செய்தித்தாள் வெளியிட்டது. Railsleeper என்பது தொடர்வண்டியின் போக்குவரத்துப் பாதையான தண்டவாளத்தில் உள்ள குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும். அதனை உறங்கிக் கொண்டிருந்தோர் என மொழிபெயர்த்தது பெரும்பிழையே.

II. Camel என்பதற்கு வடம் (கயிறு), ஒட்டகம் என இருபொருள் உண்டு. ஊசி காதில் வடம் நுழையாது என்னும் வேற்றுமொழித் தொடரை 'ஊசி காதில் ஒட்டகம் நுழையாது' என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகிறோம். இத்தொடரில் வடம் என்பதே பொருத்தமான சொல்லாக அமையும் (அதாவது ஊசி காதில் நூல் நுழையுமே அன்றிக் கயிறு நுழையாது என்பதே). மொழிபெயர்ப்புகள் கழிவின்றி, சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

III. 'Underground drainage' என்ற தொடரை மொழிபெயர்ப்பதில் தடுமாற்றம் வந்தது. பாதாளச் சாக்கடை என்பது போன்றெல்லாம் மொழிபெயர்த்தனர். தமிழோடு தொடர்புடைய மலையாள மொழியில் பயன்படுத்திய புதைசாக்கடை என்ற சொல் பொருத்தமாக இருப்பதைக் கண்டனர். அதையே பயன்படுத்தவும் தொடங்கினர்.

**A) I, II, III அனைத்தும் சரி**

B) I, II, III அனைத்தும் தவறு

C) I, II மட்டும் சரி

D) II, III மட்டும் சரி

21. மொழிபெயர்ப்பு செம்மை – பற்றிய சரியான கூற்று எது?

I. Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே Telegraph, Television, Telephone, Telescope, Telemetry முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிற போது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலை நோக்கி, தொலை அளவியல் என்றவாறு முன் ஒட்டுகளுடன் மொழி பெயர்க்கப்பட்டன.

II. இதற்கு மாறாக, Transcribe, Transfer, Transform, Transact ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. இங்கு Trans என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை.

III. இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்பு தேவைப்படவில்லை.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II மட்டும் சரி**

D) I, II, III அனைத்தும் சரி

22. மொழிபெயர்ப்பு – பல்துறை வளர்ச்சி பற்றிய சரியான கூற்று எது?

I. இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை.

II. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழி பெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன.

III. விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. திரைப்படங்கள் தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வேற்று மொழிமாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழி பேசும் மக்களையும் அடைகின்றன. இதனால் புதுவகையான சிந்தனைகள் மொழிக்கூறுகள் பரவுகின்றன.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

23. மொழிபெயர்ப்பு பயன் – சரியான கூற்று எது?

winmeen.com

I. இன்றைய வளரும் நாடுகளில் அறிவியலை உருவாக்க – அரசியலை உருவாக்க – பொருளியலை உருவாக்க – சமூகவியலை உருவாக்க – இலக்கியத்தை உருவாக்க மொழிபெயர்ப்பே உதவுகிறது.

II. மொழிபெயர்ப்பு, மனிதர்களையும் நாடுகளையும் காலங்களையும் இணைக்கிற நெடுஞ்சாலையாக இருக்கிறது; காலத்தால் இடத்தால் மொழியால் பிரிக்கப்பட்ட மானுடத்தை இணைக்கிறது;

III. கடந்த காலத்தை எதிர்காலத்துடன் இணைக்கும் அது மனித வாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கிறது; பல மொழிகளிலும் காணப்படும் சிறப்புக் கூறுகளை எல்லாம் ஒருங்கு சேர்த்து அனைவருக்கும் பொதுமையாக்குகிறது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

24. ________________ நாட்டில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன. புள்ளி விவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம்; இரண்டாமிடம் மலையாளம்; அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளில் முறையே தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி, வங்கமொழி, மராத்தி மொழி போன்றவை இடம்பெறுகின்றன.

A) அமெரிக்கா

**B) ஜெர்மனி**

C) ரஷ்யா

D) இங்கிலாந்து

25. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் ________________ என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

A) அறிவுசார் வளம்

B) இலக்கியப் பயன்

**C) பயன்கலை**

D) இவற்றில் ஏதுமில்லை

26. ________________ தன் வெளியீட்டு வடிவமாகக் கொண்டிருந்த தமிழ், அச்சு இயந்திரத்தின் வருகையை ஒட்டி மொழிபெயர்ப்பை எதிர்கொண்டபோது உரைநடை வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

**A) செய்யுளையே**

B) இலக்கணத்தையே

C) இலக்கியத்தையே

D) இவற்றில் ஏதுமில்லை

27. ஒரு குறிப்பிட்ட சிறு குழுவில் பேசப்படும் மொழியில் இருப்பவையும் கூட நம்மை வந்தடைய வேண்டும். சிறு குழுவினர் பேசும் ________________ மொழிகளின் படைப்பாளர்கள் நோபல் பரிசு பெறுகிறார்கள். ஆனால் அந்தப் படைப்புகள் நம்மை எட்டுவதில்லை.

A) ஜப்பானிய

B) இலத்தீன்

C) ஐரோப்பிய

**D) ஆப்பிரிக்க**

28. தமிழின் தொன்மையான இலக்கியங்கள் முன்னரே மொழி பெயர்க்கப்பட்டு அறிமுகமாகியிருந்தால் தமிழின் பெருமை உலகெங்கும் முறையாகப் பரவியிருக்கும். ________________ பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கை அத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும்.

**A) ஹார்வர்ட்**

B) ஆக்ஸ்போர்டு

C) ஸ்டான்போர்டு

D) நாளந்தா

29. தமிழுக்கு அத்தனை அறிவுச் செல்வங்களும் கிடைக்க வேண்டும். இதனை ________________, "காசினியில் இன்று வரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி பேசி மகிழ் நிலை வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

A) இராஜராஜன்

**B) குலோத்துங்கன்**

C) கரிகாலன்

D) இரும்பொறை

30. "சென்றிடுவீர் எட்டுதிக்கும் – கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்", "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" – என்ற பாடல் வரிகளின் ஆசிரியர் யார்?

A) வாணிதாசன்

B) திரு.வி.க

C) பாரதிதாசன்

**D) பாரதியார்**

31. பிரான்சு "தேசிய நூற்கூடத்தில் (Bibliothque Nationale) ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள. இவற்றுள் சில இந்தியாவிலேயே கிடைக்காத படிகளும் ஏடுகளுமாம். பண்டைக் காலத்தில் முதன் முதலாக ஐரோப்பியர் யாத்த இலக்கணங்களும் கையெழுத்துப் பிரதிகளும் இந்நூற்கூடத்தில் இருக்கின்றன. அங்கிருக்கும் தமிழ் நூல்களின் பட்டியலைப் படித்தபொழுது இன்றும் அச்சிடப்பெறாத நூல்கள் சிலவற்றின் தலைப்பைக் கண்டேன். "மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சரளிப்புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத் தமிழ்" முதலிய நூல்களும் அங்கு உள." – என்று கூறியவர் யார்?

A) மனோன்மணியம்

**B) தனிநாயக அடிகள்**

C) திரு.வி.க

D) உ.வே.சாமிநாதர்

32. கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது ________________?

**A) சங்க இலக்கியம்**

B) காவியம்

C) ஐம்சிறும் காப்பியம்

D) ஐம்பெரும் காப்பியம்

33. தோண்டும் அளவு ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும், என்கிறது ________________?

A) நளவெண்பா

B) ஆத்திச்சூடி

**C) திருக்குறள்**

D) ஆசாரக் கோவை

34. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம் பொருத்துவதும் கல்வியென்றே போற்று – என்ற பாடலின் ஆசிரியர் யார்?

A) திரு.வி.க

B) உ.வே.சாமிநாதர்

C) சச்சிதானந்தன்

**D) கா.ப. செய்குதம்பிப் பாவலர்**

35. நீதிவெண்பா நூலின் ஆசிரியர் யார்?

**A) கா.ப. செய்குதம்பிப் பாவலர்**

B) ஆறுமுக நாவலர்

C) பரிதிமாற் கலைஞர்

D) திரு.வி.க

36. அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது ________________ ஆகும். எனவே அதைப் போற்ற வேண்டும் – என்று கூறுபவர் யார்?

A) பக்தி, திரு.வி.க

B) செல்வம், மாணிக்கவாசகர்

**C) கல்வி, கா.ப.செய்குதம்பிப் பாவலர்**

D) இவற்றில் ஏதுமில்லை

37. அருந்துணை என்பதைப் பிரித்தால் ________________?

**A) அருமை + துணை**

B) அரு + துணை

C) அருமை + இணை

D) அரு + இணை

38. 'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி' – இவ்வடியில் பயின்று வரும் தொடை நயம் யாது?

A) எதுகை

**B) மோனை**

C) இயைபு

D) முரண்

39. 'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண் அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே ________________ ஆகும்.

A) சதக்ரட்சகன்

B) சதபிராமணம்

**C) சதாவதானம்**

D) இவற்றில் ஏதுமில்லை

40. கீழ்க்கண்டவர்களுள் 'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் யார்?

I. நா. கதிரைவேற்பிள்ளை

II. செய்குதம்பிப் பாவலர்

III. சாரண பாஸ்கரன்

IV. கவி. கா. மு. ஷெரீப்



winmeen.com

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

D) I, II, III, IV அனைத்தும் சரி

41. செய்குதம்பிப் பாவலர் அவர்களின் காலம்?

**A) 1874– 1950**

B) 1884– 1960

C) 1894– 1970

D) 1904– 1980

42. கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?

கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர். பதினைந்து வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர்; சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர்.

**A) செய்குதம்பிப் பாவலர்**

B) தனிநாயக அடிகள்

C) திரு.வி.க

D) உ.வே.சாமிநாதர்

43. ________________ ஆம் நாளில் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்று பாராட்டுப் பெற்றார், செய்குதம்பிப் பாவலர்.

A) 1905 மார்ச் 05

B) 1906 மார்ச் 08

**C) 1907 மார்ச் 10**

D) 1908 மார்ச் 12

44. கீழ்க்கண்டவற்றுள் யாருடைய நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டபமும் பள்ளியும் உள்ளன?

A) நா. கதிரைவேற்பிள்ளை

**B) செய்குதம்பிப் பாவலர்**

C) சாரண பாஸ்கரன்

D) கவி. கா. மு. ஷெரீப்

45. கீழ்க்கண்டவற்றுள் யாருடைய அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன?

A) சுஜாதா

B) கல்கி

C) சாரண பாஸ்கரன்

**D) செய்குதம்பிப் பாவலர்**

46. சதாவதானி என்பது ________________?

**A) நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டுவது**

B) ஆயிரம் யானைகளைப் போரில் கொல்வது

C) நூறு படைவீரர்களை கொன்று குவிப்பது

D) ஆயிரம் பேருக்கு உணவிடுவது

47. செய்குதம்பிப் பாவலர் சதாவதானி என்று பாராட்டுப் பெற்ற இடம் ________________ நாள் ________________?

**A) சென்னை விக்டோரியா அரங்கம், 1907 மார்ச் 10**

B) சென்னை தீவுத் திடல், 1909 மார்ச் 8

C) தஞ்சாவூர் திலகர் திடல், 1908 பிப்ரவரி 8

D) திருச்சி அண்ணா மைதானம், 1906 மார்ச் 6

48. செய்குதம்பிப் பாவலரின் நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் கீழ்க்கண்டவற்றுள் எவை உள்ளன?

A) தெரு, நீர்தொட்டி

B) திருமண மண்டபம், கோவில்

C) பள்ளிவாசல், நூலகம்

**D) மணிமண்டபம், பள்ளி**

49. திருவிளையாடற் புராணம் நூலின் ஆசிரியர் யார்?

**A) பரஞ்சோதி முனிவர்**

B) சயம் கொண்டார்

C) சேக்கிழார்

D) நாகுத்தனார்

50. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் – பற்றிய சரியான கூற்று எது?

I. பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த குலேசபாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான்.

II. கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட, அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான்.

III. மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிரு ஆலவாயில் சென்று தங்கினார்.

IV. இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான். இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

51. கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட் டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல் மொழிந்து அரசன் தனைக் காண்டும் எனத் தொடுத்த பனுவலொடு மூரித் தீம் தேன் வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு தொடுத்து உரைப்பனுவல் வாசித்தான் ஆல் – இந்த பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) திருவிளையாடற் புராணம்**

B) பாஞ்சாலி சபதம்

C) மணிமேகலை

D) சிலப்பதிகாரம்

52. சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே தன்னைச் சார்ந்தோர் நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார் வேம்பன் பொன் நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன் என்று புகலக் கேட்டுச் சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தான் சிறிது முடி துளக்கான் ஆகி – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) சயம் கொண்டார்

**B) பரஞ்சோதி முனிவர்**

C) சேக்கிழார்

D) நாகுத்தனார்

53. என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின்இடம் பிரியா இமையப் பாவை தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் என் தனக்கு யாது என்னா முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான் அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி – கீழ்க்கண்டவற்றுள் இந்த பாடல் வரியுடன் தொடர்புடைய ஒன்று உள்ளது. அது எது?

A) அரிமர்த்தன பாண்டியன், மாணிக்கவாசகர்

B) சுந்தர பாண்டியன், இறைவன்

**C) குலேசபாண்டியன், இடைக்காடனார்**

D) இவற்றில் ஏதுமில்லை

54. போனஇடைக் காடனுக்கும் கபிலனுக்கும் அகத்துவகை பொலியுமாற்றான் ஞானமய மாகியதன் இலிங்கவுரு மறைத்துஉமையாம் நங்கை யோடும் வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன் கோவிலின்நேர் வடபால் வையை ஆனநதித் தென்பாலோர் ஆலயங்கண்டு அங்கு இனிதின் அமர்ந்தான் மன்னோ – இந்த பாடல்வரியுடன் தொடர்புடைய கூற்றைத் தேர்ந்தெடுக்க.

**A) இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல்**

B) இறைவனின் பதில்

C) மன்னன், புலவருக்கு மரியாதை செய்தல்

D) மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

55. அல்லதை என் தமரால் என் பகைஞரால் கள்வரால் அரிய கானத்து எல்லை விலங்கு ஆதிகளால் இடையூறு இன் தமிழ் நாட்டில் எய்திற்றாலோ தொல்லை மறையவர் ஒழுக்கம் குன்றினரோ தவம் தருமம் சுருங்கிற்றாலோ இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்! எந்தாய்! – இந்த பாடல்வரியுடன் தொடர்புடைய கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல்

**B) கோவிலைவிட்டு நீங்கிய காரணம் அறியாது மன்னன் இறைவனை வேண்டுதல்**

C) மன்னன், புலவருக்கு மரியாதை செய்தல்

D) மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

56. ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும் நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா – இந்தப் பாடலில் "இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" – என்று மன்னனிடம் கூறுபவர் யார்?

A) வாயிற்காவலன்

B) மன்னர்

C) அமைச்சர்

**D) இறைவன்**

57. பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரமயோகி விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர் புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சினானே – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) திருவிளையாடற் புராணம்**

B) பாஞ்சாலி சபதம்

C) சீறாப்புராணம்

D) கலிங்கத்துப்பரணி

58. விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம் புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல் கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி – கீழ்க்கண்டவற்றுள் இந்தப் பாடல் வரியுடன் தொடர்புடையது எது?

A) 5 காண்டங்கள், 100 படலங்கள்

B) 133 காண்டங்கள், 8 படலங்கள்

C) 30 காண்டங்கள், 112 படலங்கள்

**D) 3 காண்டங்கள், 64 படலங்கள்**

59. புண்ணியப் புலவீர்யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப் பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான் நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம் தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா – இந்த பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) சயம் கொண்டார்

**B) பரஞ்சோதி முனிவர்**

C) சேக்கிழார்

D) நாகுத்தனார்

60. 'குலேசபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மிகுந்த கல்வியறிவு மிக்கவன்' எனக் கற்றோர் கூறக் கேட்டார் இடைக்காடனார் என்னும் புலவர். கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் ________________ மேல் அன்புகொண்ட அப்புலவர், மிகவும் இனிய தேன் ஒழுகும் ________________ யினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.

A) காக்கைப் பாடியனார், மல்லிகைப்பூ மாலை

B) பிசிராந்தையார், ஆத்தி பூ மாலை

C) ஔவையார், பனம் பூ மாலை

**D) கபிலர், வேப்பமாலை**

61. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல் நிதி போன்றவனே! ________________ இல் உறையும் இறைவனே! அழகிய வேப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.

A) திருவாரூர்

B) தஞ்சாவூர்

**C) திருஆலவாய்**

D) திருநெல்வேலி

62. "பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" – என்று கூறியவர் யார்?

A) இறைவன்

**B) இடைக்காடனார்**

C) மன்னன்

D) அமைச்சர்

63. கோவிலை விட்டு வெளியேறிய இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார் இறைவன். ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலைவிட்டு வெளியேறி நேர் ________________ ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று இருந்தார்.

**A) வடக்கே வைகை**

B) தெற்கே காவிரி

C) கிழக்கே அர்ச்சுனா

D) மேற்கே தாமிரபரணி

64. "உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா" – என்று கூறியவர் யார்?

A) அமைச்சர்

B) புலவர்

**C) மன்னன்**

D) இவர்களில் யாருமில்லை

65. கேள்வியினான் – இலக்கணக்குறிப்பு தருக?

**A) வினையாலணையும் பெயர்**

B) வினையெச்சம்

C) வினைமுற்று

D) வினைத்தொகை

66. காடனுக்கும் கபிலனுக்கும் – இலக்கணக்குறிப்பு தருக?

A) முற்றும்மை

**B) எண்ணும்மை**

C) உம்மைத்தொகை

D) உவமைத்தொகை

67. தணிந்தது – பகுபத உறுப்பிலக்கணம் சரியானது எது?

I. தணிந்தது – தணி + த்(ந்) + த் + அ + து

II. தணி – பகுதி; த் – சந்தி;

III. த் (ந்) – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை

IV. அ – சாரியை; து – படர்க்கை வினைமுற்று விகுதி

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

68. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் – சரியான கூற்று எது?

I. ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார்.

II. களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார்;

III. அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர்.

IV. உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பா மழை பொழிந்தார்.

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

69. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் – என்பதைப் பற்றிய பாடல் இது. "மாசற விசித்த வார்புறு வள்பின் …" – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நற்றிணை

B) குறுந்தொகை

C) அகநானூறு

**D) புறநானூறு**

70. திருவிளையாடற் கதைகள் சிலப்பதிகாரம் முதற்கொண்டு கூறப்பட்டு வந்தாலும் ________________ என்பவர் இயற்றிய திருவிளையாடற்புராணமே விரிவும் சிறப்பும் கொண்டது.

A) பெருஞ்சித்திரனார்

**B) பரஞ்சோதி முனிவர்**

C) ஔவையார்

D) ஆறுமுக நாவலர்

71. திருவிளையாடற்புராணம் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், ________________ காண்டம் என்ற மூன்று காண்டங்களும், ________________ படலங்களும் உடையது;

A) திருக்கழுக்குன்றம், 105

B) திருமறைக்காடு, 55

C) திருவாவடுதுறை, 100

**D) திருவாலவாய், 64**

72. பரஞ்சோதி முனிவர் ________________ (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தவர்.

A) திருக்கழுக்குன்றம்

**B) திருமறைக்காடு**

C) திருவாவடுதுறை

D) திருவாலவாய்

73. பரஞ்சோதி முனிவர் ________________ நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

A) பதினாறாம்

**B) பதினேழாம்**

C) பதினெட்டாம்

D) பத்தொன்பதாம்

74. இவர் சிவபக்தி மிக்கவர். வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலியன இவர் இயற்றிய வேறு நூல்களாகும் – இந்த கூற்றுடன் தொடர்புடையவர் யார்?

A) பெருஞ்சித்திரனார்

**B) பரஞ்சோதி முனிவர்**

C) ஔவையார்

D) ஆறுமுக நாவலர்

75. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. நுவன்ற – சொல்லிய

II. என்னா – அசைச் சொல்

III. கவரி – சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)

IV. மீனவன் – பாண்டிய மன்னன்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

76. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. நீபவனம் – கடம்பவனம்

II. தமர் – உறவினர்

III. முனிவு – சினம்

IV. நவ்வி – கரடி

**A) I, II, III மட்டும் சரி**

B) II, III, IV மட்டும் சரி

C) I, II, III, IV அனைத்தும் சரி

D) III, IV மட்டும் சரி

77. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. அகத்து உவகை – மனமகிழ்ச்சி

II. தார் – மாலை

III. முடி – தலை

IV. கேள்வியினான் – நூல் வல்லான்

V. கேண்மையினான் – நட்பினன்

A) I, II, III, V மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, II, III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV, V அனைத்தும் சரி**

78. வேப்ப மாலை அணிந்த மன்னன்?

A) சேரன்

B) சோழன்

**C) பாண்டியன்**

D) பல்லவன்

79. இடைக்காடனார் பிணக்குத் தீர்த்த படலம் இடம் பெறும் காண்டம் ________________?

A) மதுரைக் காண்டம்

B) கூடற் காண்டம்

**C) திரு ஆலவாய்க் காண்டம்**

D) சுந்தர காண்டம்

80. இடைக்காடனார் பிணக்குத் தீர்த்த படலம் திருவிளையாடற்புராணத்தில் எத்தனையாவது படலம்?

A) 64

**B) 56**

C) 46

D) 48

81. சொல்லின் வடிவாக இறைவனின் இடப்புறம் வீற்றிருப்பவள் ________________?

**A) பார்வதி**

B) திருமகள்

C) கலைமகள்

D) அலைமகள்

82. வினா எத்தனை வகைப்படும்?

**A) 6**

B) 7

C) 8

D) 9

83. சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்ப வனத்தை விட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம், என்று கூறியவர் _______________?

A) குலேச பாண்டியன்

**B) இறைவன்**

C) இடைக்காடனார்

D) கபிலர்

84. மன்னன் இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து ________________ இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்?

அ) மரகத

**ஆ) பொன்**

இ) தன்

ஈ) வைர

85. 'மாசற விசித்த வார்புறு வள்பின்' என்று ________________ புலவர் ________________ மன்னனைப் பாடினார்.

**அ) மோசிகீரனார், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை.**

ஆ) ஔவையார், அதியமான்

இ) பரணர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

ஈ) கபிலர், வல்வில் ஓரி

86. இலக்கணக் குறிப்பு தருக? சரியானது எது?

I. கற்றோர் – வினையாலணையும் பெயர்

II. உணர்ந்த கபிலன் – பெயரெச்சம்

III. தீம்தேன், நல்நிதி, பெருந்தகை – பண்புத்தொகை

IV. ஒழுகுதார் – வினைத்தொகை

V. மீனவன் – ஆகுபெயர்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) III, IV, V மட்டும் சரி

**D) I, II, III, IV, V அனைத்தும் சரி**

87. மேரிஜேன் (மேரி மெக்லியோட் பெத்யூன்) – அவர்களைப் பற்றிய சரியானவற்றைத் தேர்ந்தெடு.

I. மேரிஜேன் (மேரி மெக்லியோட் பெத்யூன்) அவர்கள் சாமுவேல் (சாம் மெக்லியோட்) – பார்ட்சி(பாட்ஸி) என்ற 'அமெரிக்க வாழ் ஆப்பிரிக்க' தம்பதிக்கு 15வது குழந்தையாகப் பிறந்தார்.

II. உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். உன்னுடைய இந்தப் பருத்தி எடுப்பு வேலைகள் முடிந்த உடனேயே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக மேயெஸ் வில்லிக்கு வரவேண்டும், என்று மேரிஜேன் (மேரி மெக்லியோட் பெத்யூன்) கல்வி கற்க உதவியவர் மிஸ் வில்ஸன்.

III. ஒரு புத்தகம், மேலட்டை ஓவியத்தையும் அச்சிடப்பட்ட புத்தகத் தலைப்பையும் பார்த்து ஆர்வமுற்ற மேரி அதைத் தன் கையில் எடுத்துக்கொண்டாள். அதைப் புரட்டத் துவங்கிய போது வில்ஸனின் இரு பெண் குழந்தைகளுள் சிறுமியாக இருந்தவள், "புத்தகத்தை என்னிடம் கொடு! நீ இதை எடுக்கக்கூடாது! உன்னால் படிக்க முடியாது!" என்று மேரியிடமிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள். "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற வார்த்தை மேரிஜேன் (மேரி மெக்லியோட் பெத்யூன்) உள்ளத்தில் பொதிந்து பள்ளி செல்ல உந்தியது.

IV. மேரிஜேன் (மேரி மெக்லியோட் பெத்யூன்) பள்ளியில் சேருவதற்கு முன், தன் தந்தையுடன் சேர்ந்து பருத்தி வயல்களில் வேலை செய்தார்.

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) III, IV, V மட்டும் சரி

**D) I, II, III, IV, V அனைத்தும் சரி**

88. மேரி மெக்லியோட் பெத்யூன் – பற்றிய சரியான கூற்று எது?

I. புத்தகம் ஒன்று ஒரு சிறு பெண்ணுடன் வாழ்க்கை நெடுகப் பேசிக்கொண்டே வருகிறது. "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற கூற்றால் உள்ளத்தில் பெற்ற அடி, பிற்காலத்தில் சமையல் செய்தும் தோட்டமிட்டும் பொது இடங்களில் பாட்டுப்பாடியும் சிறுகச்சிறுகப் பணம் சேர்த்துக் குப்பை கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை உருவாக்கிடக் காரணமானது.

II. உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர் அமெரிக்க கறுப்பினப் பெண்மணி மேரி மெக்லியோட் பெத்யூன். இம் மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கை "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற தலைப்பில் நூலாக வந்துள்ளது.

III. "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற நூலின் ஆசிரியர் கருணாகரன். இவரின் இயற்பெயர் வே. குணசேகரன்.

**A) I, II மட்டும் சரி**

B) I, II, III மட்டும் சரி

C) III மட்டும் சரி

D) I, II, III அனைத்தும் சரி

89. "கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை" (தூத்துக்குடி மாவட்டத்தின் கொற்கை) – இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) கலித்தொகை

B) பதிற்றுப்பத்து

**C) ஐங்குறுநூறு**

D) புறநானூறு

90. கல்விக்கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் யார்?

A) சாரதா அம்மையார்

**B) முத்துலெட்சுமி**

C) அம்புஜத்தம்மாள்

D) இவர்களில் யாருமில்லை

91. "உனக்குப் படிக்கத் தெரியாது" – என்ற நூலின் ஆசிரியர் இவர். வயதுவந்தோர் கல்வித்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியுள்ளார். இவரின் இயற்பெயர் வே. குணசேகரன். – இவர் யார்?

**A) கமலாலயன்**

B) சுஜாதா

C) ராஜம் கிருஷ்ணன்

D) பிச்சமூர்த்தி

92. மொழியின் வளர்ச்சி என்பது வினவுவதிலும் விடையளிப்பதிலும் கூட இருக்கிறது. அவற்றைப் பற்றி ________________ விளக்கியிருக்கிறார்.

A) திருவள்ளுவர்

B) ஆறுமுக நாவலர்

C) தொல்காப்பியர்

**D) நன்னூலார்**

93. இடைக்காடனாரின் சொல் ________________ போல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

A) கூரிய அம்பு

**B) வேற்படை**

C) தீ

D) விடமுள்

94. வினா பற்றிய சரியான கூற்று எது?

I. வினா எட்டு வகைப்படும்.

II. அறிவினா, தெரி வினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா, சுட்டு வினா என்று வினா எட்டு வகைப்படும்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II இரண்டுமே சரி

**D) I, II இரண்டுமே தவறு**

95. வினா பற்றிய சரியான கூற்று எது?

I. வினா ஆறு வகைப்படும்.

II. அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்று வினா எட்டு வகைப்படும்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

96. தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது. மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்டல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) கொளல் வினா

B) ஐயவினா

C) அறியா வினா

**D) அறிவினா**

97. தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது. ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்டல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) கொளல் வினா

B) ஐயவினா

**C) அறியா வினா**

D) அறிவினா

98. ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது. 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) கொளல் வினா

**B) ஐயவினா**

C) அறியா வினா

D) அறிவினா

99. தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது. 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

**A) கொளல் வினா**

B) ஐயவினா

C) அறியா வினா

D) அறிவினா

100. பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது. 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?' என்று கொடுப்பதற்காக வினவுதல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) கொளல் வினா

**B) கொடை வினா**

C) அறியா வினா

D) அறி வினா

101. ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது. "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) கொளல் வினா

B) கொடை வினா

**C) ஏவல் வினா**

D) அறி வினா

102. அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார் – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) நன்னூல்**

B) தொல்காப்பியம்

C) பரிபாடல்

D) கலித்தொகை

103. "சுட்டு மறைநேர் ஏவல் வினாதல் உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல் இனமொழி எனும்எண் இறையுள் இறுதி நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப" – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) நன்னூல்**

B) தொல்காப்பியம்

C) பரிபாடல்

D) கலித்தொகை

104. விடை வகை – பற்றிய சரியான கூற்று எது?

I. சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்று விடை எட்டு வகைப்படும்.

II. முதல் மூன்று வகையும் (சுட்டு விடை, மறை விடை, நேர் விடை) நேரடி விடைகளாக இருப்பதால் வெளிப்படை விடைகள் எனவும் அடுத்த ஐந்து விடைகளும் (ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை) குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் எனவும் கொள்ளலாம்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II இரண்டுமே தவறு

**D) I, II இரண்டுமே சரி**

105. 'கடைத்தெரு எங்குள்ளது?' என்ற வினாவிற்கு, 'வலப்பக்கத்தில் உள்ளது' எனக் கூறல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஏவல் விடை

B) நேர் விடை

C) மறை விடை

**D) சுட்டு விடை**

106. 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் போகமாட்டேன்' என மறுத்துக் கூறல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஏவல் விடை

B) நேர் விடை

**C) மறை விடை**

D) சுட்டு விடை

107. உடன்பட்டுக் கூறும் விடை. 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் போவேன்' என்று உடன்பட்டுக் கூறல் – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஏவல் விடை

**B) நேர் விடை**

C) மறை விடை

D) சுட்டு விடை

108. மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை. இது செய்வாயா?" என்று வினவியபோது, "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

**A) ஏவல் விடை**

B) நேர் விடை

C) மறை விடை

D) சுட்டு விடை

109. வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது. 'என்னுடன் ஊருக்கு வருவாயா?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஏவல் விடை

B) நேர் விடை

C) மறை விடை

**D) வினா எதிர் வினாதல் விடை**

110. வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல். 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கிறது' என்று உற்றதை உரைப்பது – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஏவல் விடை

B) நேர் விடை

**C) உற்றது உரைத்தல் விடை**

D) சுட்டு விடை

111. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல். 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று உறுவதை உரைப்பது – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

A) ஏவல் விடை

**B) உறுவது கூறல் விடை**

C) மறை விடை

D) சுட்டு விடை

112. வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல். "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது – கீழ்க்கண்டவற்றுள், இந்த கூற்றுடன் தொடர்புடையது எது?

**A) இனமொழி விடை**

B) நேர் விடை

C) மறை விடை

D) சுட்டு விடை

113. சொல்லரும் சூல் பசும் பாம்பின் தோற்றம் போல் மெல்லவே கரு இருந்து ஈன்று மேலலார் செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல் கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே – இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) சீவகசிந்தாமணி**

B) புறநானூறு

C) தொல்காப்பியம்

D) மணிமேகலை

114. மற்றைய நோக்காது அடிதொறும் வான் பொருள் அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே.' – இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) சீவகசிந்தாமணி

B) புறநானூறு

**C) நன்னூல்**

D) மணிமேகலை

115. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே – இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) சீவகசிந்தாமணி

**B) நன்னூல்**

C) புறநானூறு

D) மணிமேகலை

116. ஆலத்து மேல குவளை குளத்துள வாலின் நெடிய குரங்கு – என்ற பாடலுடன் தொடர்புடையதைத் தேர்ந்தெடு.

A) ஆறுமுக நாவலர் உரை

**B) மயிலைநாதர் உரை**

C) திரு.வி.க உரை

D) உ.வே. சாமிநாதர் உரை

117. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர் – இக்குறளில் முதல் அடியில் விலங்கு, மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளாகக் கற்றார், கல்லாதார் (ஏனையவர்) என வரிசைப்படுத்தியுள்ளார். அவற்றைக் கற்றார் மக்கள் என்றும், கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகக் கொண்டு பொருள்கொள்ள வேண்டும். எனவே, இக்குறள் எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும் – என்று விளக்கம் தரும் நூல் எது?

A) கலிங்கத்துப்பரணி

B) குறுந்தொகை

C) நற்றிணை

**D) நன்னூல்**

118. வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி யாரம் படை த்த தமிழ்நாடு (செந்தமிழ்) – என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) வாணிதாசன்

D) நாமக்கல் கவிஞர்

119. அறைக்குள் யாழிசை ஏதென்று சென்று எட்டிப் பார்த்தேன்; பேத்தி, நெட்டுருப் பண்ணினாள் நீதிநூல் திரட்டையே – என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) பாரதியார்

**B) பாரதிதாசன்**

C) வாணிதாசன்

D) நாமக்கல் கவிஞர்

120. It gave Valluva the Great For all the world to have; And the fame rose sky high Of our Tamil – Land It made a necklace of gems, Named 'The Lay of the Anklet' Which grips enraptured hearts In our Tamil – Land – என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) வாணிதாசன்

D) நாமக்கல் கவிஞர்

121. Wondering at the lute music Coming from the chamber Entered I to look up to in still My grand–daughter Learning by rote the verses Of a didactic compilation – என்ற பாரதிதாசன் அவர்கள் தமிழில் எழுதிய "அறைக்குள் யாழிசை ஏதென்று சென்று எட்டிப் பார்த்தேன்; பேத்தி, நெட்டுருப் பண்ணினாள் நீதிநூல் திரட்டையே" – இந்தப்பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

A) திரு.வி.க

B) கமலாலயன்

C) வாணிதாசன்

**D) கவிஞர் தேசினி**

122. யாழிசை – என்பதன் ஆங்கில வார்த்தை என்ன?

A) GUITAR MUSIC

**B) LUTE MUSIC**

C) LIGHT MUSIC

D) BRIGHT MUSIC

123. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. Emblem – சின்னம்

II. Intellectual – அறிவாளர்

III. Thesis – ஆய்வேடு

IV. Symbolism – குறியீட்டியல்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

124. நூல்கள் மற்றும் நூல்களின் ஆசிரியர் சரியானது எது?

I. சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று – தமிழில் வல்லிக்க ண்ணன்

II. குட்டி இளவரசன் – தமிழில் வெ.ஸ்ரீராம்

III. அக்னிச் சிறகுகள் – பாரதியார்

IV. ஆசிரியரின் டைரி – தமிழில் எம்.பி. அகிலா

A) I, II மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

**C) I, II, IV மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

125. கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே – என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) வெற்றி வேக்கை**

B) புதிய ஆத்திச்சூடி

C) கொன்றை வேந்தன்

D) ஆத்திச்சூடி

126. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு – சரியான கூற்று எது?

I. ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது;

II. ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார்.

III. ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக்கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) I, II, III அனைத்தும் தவறு

**D) I, II, III அனைத்தும் சரி**

127. அருந்துணை என்பதைப் பிரித்தால் _________________?

**A) அருமை + துணை**

B) அரு + துணை

C) அருமை + இணை

D) அரு + இணை

128. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது _________________ வினா. "அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது _________________ விடை.

A) ஐயவினா, வினா எதிர் வினாதல்

B) அறிவினா, மறை விடை

**C) அறியா வினா, சுட்டு விடை**

D) கொளல் வினா, இனமொழி விடை

129. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

A) தமிழ்

B) அறிவியல்

**C) கல்வி**

D) இலக்கியம்

130. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் _________________. இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் _________________?

A) அமைச்சர், மன்னன்

B) அமைச்சர், இறைவன்

C) இறைவன், மன்னன்

**D) மன்னன், இறைவன்**

131. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது?" "இந்த வழியாகச் செல்லுங்கள்." – என்று விடையளிப்பது – சுட்டுவிடை

II. "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது – வினா எதிர்வினாதல் விடை.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

132. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது _________________?

**A) உறுவது கூறல் விடை**

B) உற்றது உறைத்தல் விடை

C) இனமொழி விடை

D) வினா எதிர் வினாதல் விடை

133. உடன்பட்டுக் கூறும் விடை _________________?

A) சுட்டுவிடை

B) மறைவிடை

**C) நேர்விடை**

D) ஏவல்விடை

134. வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது ________________?

அ) ஏவல் விடை

**ஆ) வினா எதிர்வினாதல் விடை**

இ) மறைவிடை

ஈ) நேர்வினா

135. ஆடத்தெரியுமா என்ற வினாவிற்குப் பாடத்தெரியும் என்று கூறுவது ________________?

அ) வினாஎதிர் வினாதல்

ஆ) உற்றது உரைத்தல்

இ) உறுவது கூறல்

**ஈ) இனமொழி விடை**

winmeen.com

# 10th Tamil Questions - Unit 6

1. இசைக்கலைஞர்கள், 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் – கீழ்க்கண்டவற்றுள் எங்கு உள்ளது?

A) தஞ்சாவூர்

B) கழுகு மலை

**C) திருப்புடை மருதூர்**

D) ஆதிச்சநல்லூர்

2. நிகழ்கலை பற்றிய சரியான கூற்று எது?

I. கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன; கருத்துடன் கலைத்திறனை நோக்காகக் கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன;

II. ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் வழியாக மக்களை மகிழ்வடையச் செய்வன; சமூகப் பண்பாட்டுத்தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன; நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக இருப்பன. அவைதாம் மக்கள் பண்பாட்டின் பதிவுகளான நிகழ்கலைகள்.

III. நிகழ்கலைகள் ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றன. இவை கற்றோராலும் மற்றோராலும் விரும்பப்படும் கலைகளாக உள்ளன; உழைப்பாளிகளின் உணர்வுகளாக உள்ளன; மக்களின் எண்ண வெளிப்பாடாக, வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியாக, மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன.

IV. சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

3. கரகாட்டம் பற்றிய சரியான கூற்று எது?

I. பன்னெடுங் காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டம். 'கரகம்' என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது, கரகாட்டம். இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

II. கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படியும் படி செய்கின்றனர்.

III. தலையில் செம்பு நிற்கும் அளவு எடையை ஏற்றுவதற்குச் செம்பில் மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர். கண்ணாடியாலும் பூக்களாலும் அழகூட்டிய கரகக் கூட்டின் நடுவில், கிளி பொம்மை பொருத்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர். இதற்கு நையாண்டி மேள இசையும் நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன.

IV. ஆணும் பெண்ணும் சேர்ந்து நிகழ்த்தும் கரகாட்டத்தில் சில நேரங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு. கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனை பேர் தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை உண்டு.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

4. "நீரற வறியாக் கரகத்து" – என்ற ________________ நூலின் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறுகிறது.

A) அகநானூறு

**B) புறநானூறு**

C) கலித்தொகை

D) திருக்குறள்

5. சிலப்பதிகாரத்தில் ________________ ஆடிய ________________ வகை ஆடல்களில் 'குடக்கூத்து' என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது. இதுவே கரகாட்டத்திற்கு அடிப்படை என்றும் கருதப்படுகிறது. இது தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.

**A) மாதவி, பதினொரு**

B) ஆதிரை, நூறு

C) கண்ணகி, ஐம்பது

D) அறவண அடிகள், முப்பது

6. மயிலாட்டம் பற்றிய சரியான கூற்று எது?

I. மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும். நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.

II. மயிலாட்டம் பற்றி திருவள்ளுவர் ஒரு அதிகாரத்தில் விளக்கிக் கூறுகிறார்.

III. ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக்காட்டுவர்.

IV. கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது.

A) I, II, III மட்டும் சரி

**B) I, III, IV மட்டும் சரி**

C) I, III மட்டும் சரி

D) I, II, III, IV அனைத்தும் சரி

7. காவடியாட்டம் பற்றிய சரியான கூற்று எது?

I. கா – என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்.

II. மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர். அந்த அரைவட்டப் பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர். மேலும் மயிலிறகுக் கற்றைகளை இரு புறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர்.

III. காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர். இலங்கை, மலேசியா உட்பட, புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

IV. காவடியாட்டம் தமிழ்நாட்டை விட, ஜப்பானில் மிகப் பிரபலமானதாக விழாக்களில் ஆடப்படுகிறது.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

8. ஒயிலாட்டம் பற்றிய சரியான கூற்று எது?

I. ஒயிலாட்டம் – ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம்.

II. உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறிமாறி, மனத்தை ஈர்க்கும். இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.

III. ஒயிலாட்டத்தை இரு வரிசையாக நின்றும் ஆடுகின்றனர். ஒருவருக்கொருவர் இடம் விட்டு விலகி நின்று ஆடும் இந்த ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் ஆண்கள் ஆடுவதே வழக்கில் உள்ளது. ஒரே குழுவில் வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு.

IV. இந்த ஆட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

9. தேவராட்டம், சேர்வையாட்டம் – பற்றிய சரியான கூற்று எது?

I. தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி', தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி.

II. இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாட்டத்தில் பெரும்பான்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது.

III. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றது.

IV. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை, சேர்வையாட்டம். ஆட்டக் கலைஞர்கள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டே ஆடுகின்றனர். இதனை இசைச்சார்புக் கலையாகவும் வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) I, IV மட்டும் சரி

10. பொய்க்கால் குதிரையாட்டம் – பற்றிய சரியான கூற்று எது?

I. பொய்க்கால் குதிரையாட்டம் கரகாட்டத்தின் தாய் ஆட்டமாகக் கருதப்படுகிறது.

II. "போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.

III. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

IV. கலைஞர்கள் தங்கள் கால்களை மறைக்கும் உயரத்திற்குத் துணியைக் கட்டிக் கொள்கின்றனர். காலில் சலங்கை அணிந்தும் அரசன் அரசி உடையணிந்தும் கிரீடம் அணிந்தும் ஆடுகின்றனர். குதிரைமேல் ஏறிப் பயணம் செய்வது போன்று கடிவாளத்தை ஆட்டியும் காலை உயர்த்தியும் நான்கு புறமும் ஓடியும் ஆடுகின்றனர்.

A) I, II, III, IV அனைத்தும் சரி

B) I, II, III மட்டும் சரி

**C) II, III, IV மட்டும் சரி**

D) I, IV மட்டும் சரி

11. பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை. நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகின்றன. பொய்க்கால் குதிரையாட்டம் ________________ மாநிலத்தில் கச்சிகொடி என்றும் ________________ மாநிலத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகின்றது.

A) பீகார், ஒடிசா

**B) இராஜஸ்தான், கேரளம்**

C) பஞ்சாப், கர்நாடகம்

D) ஆந்திரா, குஜராத்

12. தப்பு ஆட்டம் பற்றிய சரியான கூற்று எது?

I. 'தப்பு' என்ற தோற் கருவியை இசைத்துக்கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது.

II. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி. கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது.

III. 'தப் தப்' என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

IV. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப அதன் இசைப்பு முறைகளும் ஆட்ட முறைகளும் வேறுபடுகின்றன. வட்டமாக ஆடுதல், இரண்டு வரிசையாக எதிர் எதிர்த் திசையில் நின்று ஆடுதல், அனைவரும் நேர் வரிசையில் நின்று ஆடுதல், குதித்துக் குதித்து ஆடுதல், உட்கார்ந்து எழுதல், நடையாட்டம் ஆகிய ஆட்டக் கூறுகளை இன்றைய கலைஞர்களிடம் காணமுடிகின்றது. தப்பாட்டத்தில் கலைஞர்கள் குழுவாகப் பங்கேற்கின்றனர்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) I, IV மட்டும் சரி

13. "தகக தகதகக தந்தத்த தந்தகக என்று தாளம் பதலை திமிலைதுடி தம்பட்டமும் பெருக" என்று, தப்பாட்ட இசை குறித்து ________________ நூலில் ________________ ஆசிரியர் கூறியுள்ளார். இதனைப் 'பறை' என்றும் அழைப்பர்.

A) கலிங்கத்துப்பரணி, செயங்கொண்டார்

B) சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

C) திருவாசகம், மாணிக்கவாசகர்

**D) திருப்புகழ், அருணகிரிநாதர்**

14. ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக்கருவி பறை. ________________ நூல் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம் பெறுகிறது. மேலும் பறையாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

A) திருக்குறள்

**B) தொல்காப்பியம்**

C) புறநானூறு

D) அகநானூறு

15. புலி ஆட்டம் பற்றிய சரியான கூற்று எது?

I. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.

II. விழாக்களில் புலிவேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ ஆடுவர்.

III. புலியைப் போன்று நடந்தும் பதுங்கியும் பாய்ந்தும் எம்பிக்குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப்பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

IV. பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று.

V. புலி ஆட்டம் என்பது ஒரு வளையைச் சுற்றி ஆடக்கூடிய ஆட்டம் ஆகும்.

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV, V மட்டும் சரி

**C) I, II, III, IV மட்டும் சரி**

D) III, IV, V மட்டும் சரி

16. தெருக்கூத்து சரியானது எது?

I. நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து. இப்பெயர், அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.

II. திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது. களத்து மேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது; பின்னர்க் கோவில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது.

III. இதில் ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர். திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.

IV. தெருக்கூத்து, வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது. அருச்சுனன் தபசு என்பது மழை வேண்டி நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது. கூத்துக்கலைஞர், கூத்தைக் கற்றுக் கொடுப்பவர் ஆகியோரின் அடிப்படையிலும் காலம், இடம் போன்றவற்றின் அடிப்படையிலும் கூத்து நிகழ்த்தப்படுவதில் சிறுசிறு மாறுபாடுகள் உள்ளன. தெருக்கூத்து, பொழுதுபோக்குக் கூறுகளைப் பெற்று நாடகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதனைக் கதகளி போன்று செவ்வியல் கலையாக ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) I, IV மட்டும் சரி

17. யார் இவர்? தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர். "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர். இவர் தமிழ்நாட்டின் வழிவழி நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக்கொண்டு புது விதமான நாடகங்களை உருவாக்கியவர். அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம் செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர். அவர்தான் கூத்துப்பட்டறை ________________. இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின.

**A) ந. முத்துசாமி**

B) நா. பிச்சமூர்த்தி

C) சி.சு. செல்லப்பா

D) ராஜம் கிருஷ்ணன்

18. கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது? கலைஞாயிறு என்று இவர் அழைக்கப்படுகிறார். இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன. இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றவர், இவர்.

A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

B) நா. பிச்சமூர்த்தி

C) சி.சு. செல்லப்பா

**D) ந. முத்துசாமி**

19. தோற்பாவைக் கூத்து சரியான கூற்று எது?

I. தோலில் செய்த வெட்டு வரைபடங்களை, விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைத்துக்காட்டி, உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து.

II. தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவை என்னும் பெயர் பெற்றது. இதில் இசை, ஓவியம், நடனம், நாடகம், பலகுரலில் பேசுதல் ஆகியவை இணைந்துள்ளன. ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக்குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

III. கூத்து நிகழ்த்தும் திரைச்சீலையின் நீளம், அகலம் ஆகியன பாவையின் அமைப்பையும் எண்ணிக்கையையும் பொறுத்து வேறுபடுகின்றன. இந்நிகழ்ச்சியில் பாவையின் அசைவு, உரையாடல், இசை ஆகியனவற்றோடு ஒளியும் முதன்மை பெறுகின்றது.

IV. தோற்பாவைக் கூத்து பற்றி கம்பர் ஒரு பாடலில் முழுமையாக விவரிக்கிறார்.

A) I, II மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

20. பாவை குறித்த செய்திகள் சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. ________________ நூலில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

A) வளையாபதி

B) மணிமேகலை

C) நாலடியார்

**D) திருக்குறள்**

21. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் ________________ பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.

A) ஒயிலாட்டம்

B) மயிலாட்டம்

**C) தோற்பாவைக் கூத்து**

D) கரகாட்டம்

22. கீழ்க்கண்ட கூற்றுடன் தொடர்புடையது எது? மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க பகுதியில், 'இராச சோழன் தெரு' என்பது இன்றும் உள்ளது. இது மாமன்னன் இராசராச சோழன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட சிறப்பினை உணர்த்துகின்றது.

A) இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர்

B) மூன்றாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர்

C) நான்காம் உலகத்தமிழ் மாநாட்டு மலர்

**D) ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர்**

23. பொருத்தமானதைத் தேர்ந்தெடு – ஆட்டம் மற்றும் இசைக்கருவிகள்.

I. கரகாட்டம் – 1. உறுமி எனப்படும் தேவதுந்துபி

II. மயிலாட்டம் – 2. தோலால் கட்டப்பட்ட குடம், தவில் சிங்கி, டோலக், தப்பு

III. ஒயிலாட்டம் – 3. நையாண்டி மேளம்

IV. தேவராட்டம் – 4. நையாண்டி மேள இசை, நாகசுரம், தவில், பம்பை

**A) 4, 3, 2, 1**

B) 1, 2, 3, 4

C) 3, 4, 1, 2

D) 2, 1, 4, 3

24. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

I. மயிலாட்டம் – 1. கரகாட்டத்தின் துணை ஆட்டம்

II. ஒயிலாட்டம் – 2. கம்பீரத்துடன் ஆடுதல்

III. புலியாட்டம் – 3. வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது.

IV. தெருக்கூத்து – 4. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலை

A) 4, 1, 3, 2

B) 3, 4, 2, 1

**C) 1, 2, 4, 3**

D) 4, 3, 1, 2

25. தேவராட்டத்தில் எத்தனை கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பது பொது மரபு?

A) மூன்று முதல் பதின்மூன்று

B) எட்டு முதல் பத்து

C) பத்து முதல் பதின்மூன்று

**D) எட்டு முதல் பதின்மூன்று**

26. கரகாட்டத்தை வேறு எவ்வாறு அழைக்கலாம்?

A) தலை ஆட்டம்

**B) கும்பாட்டம்**

C) சதுராட்டம்

D) சாமியாட்டம்

27. கரகாட்டம் நிகழ்த்துதலில் எத்தனை பேர் நிகழ்த்த வேண்டும்?

A) 12

B) 2

C) 24

**D) வரையறை இல்லை**

28. கரகாட்டத்தின் துணையாட்டம் ________________?

**A) மயிலாட்டம்**

B) ஒயிலாட்டம்

C) காவடியாட்டம்

D) தேவராட்டம்

29. காவடியாட்டம் – இச்சொல்லில் 'கா' என்பதன் பொருள் ________________?

A) சோலை

**B) பாரந்தாங்கும் கோல்**

C) கால்

D) காவல்

30. இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது ________________?

A) கரகாட்டம்

B) மயிலாட்டம்

**C) காவடியாட்டம்**

D) ஒயிலாட்டம்

31. ஒயிலாட்டத்தை இரு வரிசையாக நின்றும் ஆடுகின்றனர்.

**A) இரண்டு**

B) நான்கு

C) ஆறு

D) எட்டு

32. தேவராட்டம் என்பது யார் மட்டுமே ஆடும் ஆட்டம்?

**A) ஆண்கள்**

B) பெண்கள்

C) சிறுவர்கள்

D) முதியவர்கள்

33. தேவராட்டம், ________________ ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

A) அரசர்கள்

B) புலவர்கள்

C) பாணர்கள்

**D) வானத்துத் தேவர்கள்**

34. உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படுவது ________________?

A) டோலக்

B) சிங்கி

**C) தேவதுந்துபி**

D) தப்பு

35. தேவதுந்துபி என்னும் இசைக்கருவி பயன்படுத்தும் ஆட்ட வகை ________________?

A) கரகாட்டம்

B) மயிலாட்டம்

C) சேர்வையாட்டம்

**D) தேவராட்டம்**

36. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை ________________?

A) கரகாட்டம்

B) மயிலாட்டம்

**C) சேர்வையாட்டம்**

D) பொம்மலாட்டம்

37. சேர்வையாட்டக் கலைஞர்கள் இசைத்துக்கொண்டே ஆடும் இசைக்கருவிகளைக் கண்டறிக.

I. சேவைப்பலகை

II. சேமக்கலம்

III. ஜால்ரா

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

38. ________________ பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.

**A) போலச் செய்தல்**

B) இருப்பதைச் செய்தல்

C) மெய்யியல்

D) நடப்பியல்

39. புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களில் அழைக்கப்படும் ஆட்டம்?

A) மயிலாட்டம்

B) ஒயிலாட்டம்

**C) பொய்க்கால் குதிரையாட்டம்**

D) காவடியாட்டம்

40. கீழ்க்கண்டவற்றுள், மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படும் ஆட்டம் எது?

A) காவடியாட்டம்

B) மயிலாட்டம்

C) ஒயிலாட்டம்

**D) பொய்க்கால் குதிரையாட்டம்**

41. ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக்கருவி ________________?

**A) பறை**

B) தவில்

C) டோலக்

D) உறுமி

42. ________________ அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் தெருக்கூத்து இருக்கிறது.

A) புலி ஆட்டம்

B) காவடியாட்டம்

**C) தெருக்கூத்து**

D) குடக்கூத்து

43. திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் ________________ வெளிப்படுத்தப்படுகிறது?

A) புலி ஆட்டம்

B) காவடியாட்டம்

**C) தெருக்கூத்து**

D) ஒயிலாட்டம்

44. அருச்சுனன் தபசு என்பது ________________?

A) பொருள் வேண்டி நிகழ்த்தப்படுவது

**B) மழை வேண்டி நிகழ்த்தப்படுவது**

C) அருள் வேண்டி நிகழ்த்தப்படுவது

D) அமைதி வேண்டி நிகழ்த்தப்படுவது

45. இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி? சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள். இறுக்கி முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறியும், தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும், வாசலில் மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூவை எப்படித் தொடுக்க நான் – ஒருவேளை, என் மனமே நூலாகும் நுண்மையுற்றாலொழிய – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

**A) உமா மகேஸ்வரி. (பூத்தொடுத்தல்)**

B) சுஜாதா (வண்ணத்துப்பூச்சி வேட்டை)

C) ராஜம் கிருஷ்ணன் (கூடுகள்)

D) வை.மு. கோதைநாயகி (புதுமைக் கோலம்)

46. கவிஞர் உமா மகேஸ்வரி ________________ மாவட்டத்தில் பிறந்தவர். தற்போது _______________ யில் வாழ்ந்து வருகிறார்.

A) தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி

**B) மதுரை, தேனி மாவட்டம் ஆண்டிபட்டி**

C) இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை

D) திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி

47. கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது? இவர், நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைந்துள்ளார்; கவிதை, சிறுகதை புதினம் என்று பல தளங்களில் படைத்து வருகிறார்.

A) அநுத்தமா

B) கலை இலக்கியா

C) தாமரை

**D) உமா மகேஸ்வரி**

48. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் – என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) ஆறுமுக நாவலர்

B) தாயுமானவர்

C) மனோன்மணியம்

**D) குமரகுருபரர்**

49. சந்தத்துடன் உள்ள பாடலில் உயிர்ப்பு அதிகம் இருக்கும்; கேட்போருக்கு ஈர்ப்பும் இருக்கும். தொடக்கம் முதல் தமிழிலக்கியத்தில் சந்தத்தை ஊட்டிய, இசை நாட்டியப் பாடல்கள் மொழிக்குப் பெருமை சேர்த்தன. ஏற்றம் இறைத்தலுக்கு ஏற்ற சந்தத்தை கொண்டிருக்கிறது _________________! குழந்தையின் தலை அசைத்தலுக்கும் சந்தம் அமைத்துத் தருகிறது _________________!

**A) நாட்டுப்புறத்தமிழ், பிள்ளைத்தமிழ்**

B) சிற்றிலக்கியம், சங்க இலக்கியம்

C) அற இலக்கியங்கள், நீதி நூல்கள்

D) இவற்றில் ஏதுமில்லை

50. செம்பொனடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத் திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப் பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப் பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக் – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) குற்றாலக் குறவஞ்சி

**B) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்**

C) தாயுமானவர் பாடல்கள்

D) திருவாசகம்

51. கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக் கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை – இப்பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) மாணிக்கவாசகர்

B) கம்பர்

**C) குமரகுருபரர்**

D) ஒட்டக்கூத்தர்

52. செம்பொனடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத் திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப் பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப் பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக் கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக் கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக – இப்பாடல் வரியுடன் தொடர்புடைய பருவம் எது?

A) சப்பாணி

B) தால்

C) காப்பு

**D) செங்கீரை**

53. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. பண்டி – வயிறு

II. அசும்பிய – ஒளிவீசுகிற

III. முச்சி – தலையுச்சிக் கொண்டை

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

54. திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும். இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும். பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும். பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்ட வடிவான சுட்டி பதிந்தாடட்டும் – இந்த கூற்றில் கூறப்படும் பருவம் எது?

**A) செங்கீரை**

B) வருகை

C) அம்புலி

D) முத்தம்

55. கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடட்டும். உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளிமிக்க முத்துகளோடு ஆடட்டும். தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க! இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக – இப்பாடல் வரிகளை ஆராய்ந்து, கீழ்க்கண்டவற்றுள் எதனுடன் தொடர்புடையது எனச் சரியாகப் பொருத்துக.

A) அற நூல்கள்

B) நீதி நூல்கள்

**C) சிற்றிலக்கியம்**

D) சங்க இலக்கியம்

56. இலக்கணக்குறிப்பு தருக? குண்டலமும் குழைகாதும்.

A) உவமைத்தொகை

B) உம்மைத்தொகை

C) முற்றும்மை

**D) எண்ணும்மை**

57. இலக்கணக்குறிப்பு தருக? ஆடுக.

A) வினைத்தொகை

**B) வியங்கோள் வினைமுற்று**

C) வினையெச்சம்

D) தொழிற்பெயர்

58. பகுபத உறுப்பிலக்கணம் – சரியானது எது?

I. பதிந்து – பதி + த் (ந்) + த் + உ

II. பதி – பகுதி; த் – சந்தி (ந் – ஆனது விகாரம்)

III. த் – இறந்தகால இடைநிலை

IV. உ – வினையெச்ச விகுதி

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

59. செங்கீரைப்பருவம் பிள்ளைத்தமிழில் எத்தனையாவது பருவம்?

**A) இரண்டு**

B) நான்கு

C) ஐந்து

D) ஒன்று

60. செங்கீரைப் பருவம்: செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை ________________ ஆம் மாதங்களில் மென்மையாக அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர். இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.

A) 2–3

B) 4–5

**C) 5–6**

D) 6–7

61. அணிகலன்கள் – சரியாகப் பொருந்தியது எது?

I. சிலம்பு, கிண்கிணி – காலில் அணிவது

II. அரைநாண் – இடையில் அணிவது

III. சுட்டி – நெற்றியில் அணிவது

IV. குண்டலம், குழை – காதில் அணிவது

V. சூழி – தலையில் அணிவது

**A) I, II, III, IV, V அனைத்தும் சரி**

B) I, II, IV மட்டும் சரி

C) III, V மட்டும் சரி

D) II, III, V மட்டும் சரி

62. ________________ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ்.

A) 50

B) 63

**C) 96**

D) 100

63. கீழ்க்கண்ட கூற்றுடன் தொடர்புடையது எது? இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது ________________? பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும்.

**A) பிள்ளைத்தமிழ்**

B) உலா

C) தூது

D) பரணி

64. குமரகுருபரரின் காலம் ________________ ஆம் நூற்றாண்டு.

A) 14

B) 15

C) 16

**D) 17**

65. குமரகுருபரர் எம்மொழிகளில் புலமை மிக்கவர்?

**A) தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்**

B) தமிழ், அரேபிக், மலையாளம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்

C) தமிழ், மராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்

D) தமிழ், வங்காள, தெலுங்கு ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்

66. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் எவை?

I. கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்

II. மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை

III. நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை

IV. சிலையெழுபது, ஆசாரக்கோவை

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

67. பிள்ளைத்தமிழில் இடம் பெறும் பருவங்கள் ________________?

A) 8

**B) 10**

C) 12

D) 7

68. ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குப் பொருந்தாத பருவத்தைக் கண்டறிக.

A) சிற்றில்

B) சிறுபறை

C) சிறுதேர்

**D) கழங்கு**

69. பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குப் பொருந்தாத பருவத்தைக் கண்டறிக.

A) கழங்கு

B) அம்மானை

C) ஊசல்

**D) சிறுபறை**

70. பிள்ளைத்தமிழில் இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் ________________?

A) 6

**B) 7**

C) 8

D) 10

71. பிள்ளைத் தமிழில் இருபாலருக்கும் இடையே வேறுபடும் பருவங்கள் ________________?

A) 6

B) 9

C) 7

**D) 3**

72. ஆண்பாற் பிள்ளைத்தமிழ் – கடைசி மூன்று பருவம் கூறுக?

A) கழங்கு, அம்மானை, ஊசல்

B) சப்பாணி, முத்தம், வருகை

**C) சிற்றில், சிறுபறை, சிறுதேர்**

D) செங்கீரை, தால், சப்பாணி

73. பெண்பாற் பிள்ளைத்தமிழ் – கடைசி மூன்று பருவம் கூறுக?

**A) கழங்கு, அம்மானை, ஊசல்**

B) சப்பாணி, முத்தம், வருகை

C) சிற்றில், சிறுபறை, சிறுதேர்

D) செங்கீரை, தால், சப்பாணி

74. குமரகுருபரர் எவ்விறைவனைச் செங்கீரை ஆடி அருள்க என வேண்டுகிறார்?

A) சுவாமிமலையில் எழுந்தருளிய முருகன்

**B) வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகன்**

C) திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளிய முருகன்

D) திருச்செந்தூரில் எழுந்தருளிய முருகன்

75. 'சிறு பண்டி சரிந்தாடப்' என்பதில் 'பண்டி' என்பதன் பொருள் ________________?

**A) வயிறு**

B) பெருக்கம்

C) தலை

D) சுருக்கம்

76. பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்?

A) 1

**B) 2**

C) 3

D) 4

77. 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பெருமைப்படுகிறவர் யார்?

A) ஆறுமுக நாவலர்

B) திரு.வி.க

C) பாரதிதாசன்

**D) பாரதியார்**

78. தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும் போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும் மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும் ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே – இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**B) கம்பராமாயணம், கம்பர்**

C) நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

D) மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

79. மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவிப் பாய்கிறது _________________ ஆறு. அது, ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

A) கங்கை

B) மகாநதி

**C) சரயு**

D) காவிரி

80. தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக் கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத் தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின் வண்டுகளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ – கீழ்க்கண்டவற்றுள், இந்த பாடல் வரிகளுடன் தொடர்புடையது எது?

A) பாலகாண்டம் – ஆற்றுப்படலம்

**B) பாலகாண்டம் – நாட்டுப்படலம்**

C) பாலகாண்டம் – கங்கைப்படலம்

D) அயோத்தியா காண்டம் – கங்கை காண் படலம்

81. _________________, கவிஞன் மூலம் தன்னையே வெளிப்படுத்திக் கொள்கிறது. அது எப்படி வருகின்றதோ அதை மாற்றினால் அழகு குன்றும் மீண்டும் மீண்டும் மறிதரும் சந்தம் உணர்வுகளை நம்முள் செலுத்துகிறது. உள்ளம் சூறையாடப்படுகிறது.

A) உரைநடை

B) இலக்கணம்

C) இலக்கியம்

**D) கவிதை**

82. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

A) பாலகாண்டம் – ஆற்றுப்படலம், நாட்டுப்படலம்

B) அயோத்தியா காண்டம் – கங்கைப் படலம், கங்கை காண் படலம்

C) யுத்தகாண்டம் – கும்பகருணன் வதைப் படலம்

**D) சுந்தர காண்டம் – குகப் படலம்**

83. உறங்குகின்ற கும்பகன்ன வுங் கண்! என்னும் பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள காண்டம் ________________ படலம் ________________?

**A) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப் படலம்**

B) பாலகாண்டம், நாட்டுப்படலம்

C) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

D) அயோத்தியா காண்டம், கங்கைப் படலம்

84. 'தாதுகு சோலைதோறுஞ் சண்பகக் காடு தோறும்' – என்று ஆற்றின் அழகை வர்ணிக்கும் கம்பராமாயணத்தின் காண்டம் எது? படலம் எது?

A) பாலகாண்டம், நாட்டுப்படலம்

**B) பாலகாண்டம், ஆற்றுப்படலம்**

C) அயோத்தியா காண்டம், கங்கைப் படலம்

D) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப்படலம்

85. சரியாகப் பொருந்தியவற்றை வரிசைப்படுத்துக?

I. தாதுகு சோலை – 1. ஆற்றுப்படலம்

II. தண்டலை மயில்களாட – 2. நாட்டுப்படலம்

III. வெய்யோன் ஒளி – 3. கங்கைப்படலம்

IV. ஆழ நெடுந்திரை – 4. கங்கை காண் படலம்

**A) 1, 2, 3, 4**

B) 2, 3, 4, 1

C) 4, 3, 2, 1

D) 1, 4, 3, 2

86. சரியாகப் பொருந்தியது எது?

I. விரிதாமரை மலர்கள் – எற்றிய விளக்குகள்

II. சூழும் மேகங்கள் – மத்தள ஒலி

III. மலரும் குவளை மலர்கள் – கண்கள் விழித்துப் பார்ப்பது

IV. நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் – திரைச்சீலை

V. மகர யாழின் தேனிசை – வண்டுகளின் ரீங்காரம்

**A) I, II, III, IV, V அனைத்தும் சரி**

B) I, II, III மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

D) III, IV, V மட்டும் சரி

87. கோசல நாட்டில் கொடைக்கு அங்கே இடமில்லை? காரணம் என்ன?

**A) வறுமை சிறிதும் இல்லாததால்**

B) நேருக்குநேர் போர் புரிபவர் இல்லாததால்

C) உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை, ஆதலால்

D) பொய்மொழி இல்லாமையால்

88. வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற் றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால் உண்மை யில்லை பொய் யுரையி லாமையால் வெண்மை யில்லை பல் கேள்வி மேவலால் – என்ற பாடல்வரி எந்தக் காண்டம் மற்றும் படலத்துடன் தொடர்புடையது?

**A) பாலகாண்டம், நாட்டுப்படலம்**

B) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

C) அயோத்தியா காண்டம், கங்கைப் படலம்

D) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப்படலம்

89. இராமனுடைய மாநிற மேனியை வருணிக்கும் கம்பன், ________________, ________________ என்றெல்லாம் உவமை சொல்லி, நிறைவாகச் சொல்ல இயலவில்லை என்பதை '________________' என்ற சொல்லில் வைப்பதன் வாயிலாக அதை இயன்றதாக்குகிறான்.

A) இளஞ்சிவப்பு, மாணிக்கம், ஆஹா

B) வெண்மை, வைடூரியம், அருமை

**C) மை, மரகதம், ஐயோ**

D) இவற்றில் ஏதுமில்லை

90. வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப் பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான் மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ ஐயோவிவன் வடிவென் பதொ ரழியாவழ குடையான் – என்ற பாடல்வரி எந்தக் காண்டம் மற்றும் படலத்துடன் தொடர்புடையது?

A) பாலகாண்டம், நாட்டுப்படலம்

B) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

**C) அயோத்தியா காண்டம், கங்கைப் படலம்**

D) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப்படலம்

91. 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) நாமக்கல் கவிஞர்

**B) பாரதியார்**

C) பாரதிதாசன்

D) திரு.வி.க

92. கவிதைகள் மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ! அதில் ஒன்று ________________. பொருள் புரியாவிடினும் இது மகிழ்ச்சியூட்டுகிறது.

A) உவமை

B) சாரியை

**C) சந்த இன்பம்**

D) உவமேயம்

93. ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்அன்றோ ஏழமை வேடனிறந்தில னென்றெனை யேசாரோ – என்ற பாடல்வரி எந்தக் காண்டம் மற்றும் படலத்துடன் தொடர்புடையது?

A) பாலகாண்டம், நாட்டுப்படலம்

B) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

**C) அயோத்தியா காண்டம், கங்கை காண் படலம்**

D) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப்படலம்

94. உறங்குகின்ற கும்பகன்ன உங்கள்மாய வாழ்வெல்லாம் இறங்குகின்றது இன்றுகாண் எழுந்திராய் எழுந்திராய் கறங்குபோல வில்பிடித்த காலதூதர் கையிலே உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்து உறங்குவாய் – என்ற பாடல்வரி எந்தக் காண்டம் மற்றும் படலத்துடன் தொடர்புடையது?

A) பாலகாண்டம், நாட்டுப்படலம்

B) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

C) அயோத்தியா காண்டம், கங்கை காண் படலம்

**D) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப்படலம்**

95. கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி இராமாவதாரம் எனப் பெயரிட்டார். இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது. இது _________________ காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை.

A) நான்கு

B) ஐந்து

**C) ஆறு**

D) ஏழு

96. "கல்வியில் பெரியவர் இவர்" "இவர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் யார்?

A) ஒட்டக்கூத்தர்

B) ஔவையார்

C) பாரதியார்

**D) கம்பர்**

97. கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது? சோழ நாட்டுத் திருவழுந்தூரைச் சார்ந்தவர். திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்.

**A) கம்பர்**

B) ஔவையார்

C) பாரதியார்

D) ஒட்டக்கூத்தர்

98. "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் ________________" என்று புகழ்பெற்றவர் யார்?

A) ஔவையார்

**B) கம்பர்**

C) பாரதியார்

D) ஒட்டக்கூத்தர்

99. கீழ்க்கண்டவற்றுள் கம்பர் எழுதிய நூல்கள் எவை?

I. சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி

II. திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலை எழுபது

III. ஈட்டியெழுபது, அரும்பைத் தொள்ளாயிரம்

IV. தக்கயாகப் பரணி, நாலாயிரக் கோவை

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

D) I, II, III, IV அனைத்தும் சரி

100. "________________" என்ற சிறுகதை தொகுப்பில் பாய்ச்சல் என்னும் கதை இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் சா.கந்தசாமி.

A) கிழித்த கோடு

B) ஒளியிலே தெரிவது

**C) தக்கையின் மீது நான்கு கண்கள்**

D) பள்ளியில் ஒரு நாய்க்குட்டி

101. சா.கந்தசாமி அவர்கள் பற்றிய சரியான கூற்று எது?

I. மயிலாடுதுறை நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

II. இவர் எழுதிய சாயாவனம் புதினத்தால் எழுத்துலகில் புகழ்பெற்றார். விசாரணைக் கமிஷன் என்னும் புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார்.

III. சுடுமண் சிலைகள் என்ற குறும்படத்திற்கு அனைத்துலக விருதையும் பெற்றுள்ளார். நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினொன்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும் எழுதியுள்ளார்.

IV. தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்களுள் சில.

V. இவர் இந்திய அரசின் பத்ம ஸ்ரீ விருதைப் பெற்றுள்ளார்.

A) I, II மட்டும் சரி

B) I, II, III மட்டும் சரி

**C) I, II, III, IV மட்டும் சரி**

D) I, II, III, IV, V அனைத்தும் சரி

102. "ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்டத்து தொண்டியோர்" – (இராமநாதபுரம் மாவட்டத்தின் தொண்டி) என்று கூறும் நூல்?

**A) சிலப்பதிகாரம், ஊர்காண்காதை**

B) நன்னூல்

C) கலித்தொகை

D) புறநானூறு

103. அகப்பொருள் இலக்கணம் – கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. பொருள் என்பது ஒழுக்கமுறை. நம் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வியலை அகம், புறம் என வகுத்தார்கள். இதனைப் பொருள் இலக்கணம் விளக்குகிறது.

II. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஏழும் அகத்திணைகள் ஆகும். இவற்றுள் முதல் ஐந்தும் அன்பின் ஐந்திணைகள்.

III. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன ஐந்திணைகளுக்கு உரியன.

IV. நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும். இதில் நிலம் ஐந்து வகைப்படும் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை). பொழுது, பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

104. ஐவகை நிலங்கள் – சரியாகப் பொருந்தியது எது?

I. குறிஞ்சி – 1. வயலும் வயல் சார்ந்த இடமும்

II. முல்லை – 2. சுரமும் சுரம் சார்ந்த இடமும்

III. மருதம் – 3. மலையும் மலைசார்ந்த இடமும்

IV. நெய்தல் – 4. கடலும் கடல்சார்ந்த இடமும்

V. பாலை – 5. காடும் காடு சார்ந்த இடமும்

**A) I – 3, II – 5, III – 1, IV – 4, V – 2**

B) I – 2, II – 4, III – 1, IV – 5, V – 3

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 1, II – 5, III – 2, IV – 3, V – 4

105. ஓராண்டின் ஆறு கூறுகளைப் பெரும்பொழுது என்று நம் முன்னோர் பிரித்துள்ளனர். பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்) – சரியாகப் பொருந்தியது எது?

I. கார்காலம் – 1. ஐப்பசி, கார்த்திகை

II. குளிர்காலம் – 2. ஆவணி, புரட்டாசி

III. முன்பனிக் காலம் – 3. மார்கழி, தை

IV. பின்பனிக் காலம் – 4. சித்திரை, வைகாசி

V. இளவேனிற் காலம் – 5. மாசி, பங்குனி

VI. முதுவேனிற் காலம் – 6. ஆனி, ஆடி

A) I – 3, II – 5, III – 1, IV – 4, V – 2, VI – 6

**B) I – 2, II – 1, III – 3, IV – 5, V – 4, VI – 6**

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5, VI – 6

D) I – 1, II – 5, III – 2, IV – 3, V – 4. VI – 6

106. ஒரு நாளின் ஆறு கூறுகளைச் சிறு பொழுது என்று பிரித்துள்ளனர். சிறுபொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்) – சரியாகப் பொருந்தியது எது?

I. காலை – 1. காலை 6 மணி முதல் 10 மணி வரை

II. நண்பகல் – 2. காலை 10 மணி முதல் 2 மணி வரை

III. எற்பாடு – 3. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை

IV. மாலை – 4. மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

V. யாமம் – 5. இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை

VI. வைகறை – 6. இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை

A) I – 3, II – 5, III – 1, IV – 4, V – 2, VI – 6

B) I – 2, II – 1, III – 3, IV – 5, V – 4, VI – 6

**C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5, VI – 6**

D) I – 1, II – 5, III – 2, IV – 3, V – 4. VI – 6

107. எற்பாடு என்றால் என்ன? சரியான கூற்று எது?

I. 'எல்' என்றால் ஞாயிறு

II. 'பாடு' என்றால் மறையும் நேரம்

III. எல் + பாடு = எற்பாடு

IV. எற்பாடு – பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

108. குறிஞ்சி திணைக்குரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது யாது?

**A) குளிர்காலம், முன்பனிக்காலம், யாமம்**

B) கார்காலம், மாலை

C) ஆறு பெரும்பொழுதுகள், வைகறை

D) ஆறு பெரும்பொழுதுகள், எற்பாடு

109. முல்லை திணைக்குரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது யாது?

A) குளிர்காலம், முன்பனிக்காலம், யாமம்

**B) கார்காலம், மாலை**

C) ஆறு பெரும்பொழுதுகள், வைகறை

D) ஆறு பெரும்பொழுதுகள், எற்பாடு

110. மருதம் திணைக்குரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது யாது?

A) குளிர்காலம், முன்பனிக்காலம், யாமம்

B) கார்காலம், மாலை

**C) ஆறு பெரும்பொழுதுகள், வைகறை**

D) ஆறு பெரும்பொழுதுகள், எற்பாடு

111. நெய்தல் திணைக்குரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது யாது?

A) குளிர்காலம், முன்பனிக்காலம், யாமம்

B) கார்காலம், மாலை

C) ஆறு பெரும்பொழுதுகள், வைகறை

**D) ஆறு பெரும்பொழுதுகள், எற்பாடு**

112. பாலை திணைக்குரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது யாது?

**A) இளவேனில், முதுவேனில், பின்பனி, நண்பகல்**

B) கார்காலம், மாலை

C) ஆறு பெரும்பொழுதுகள், வைகறை

D) ஆறு பெரும்பொழுதுகள், எற்பாடு

113. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. ஒவ்வொரு நிலத்திற்கும், பெரும்பொழுதும் சிறுபொழுதும் ஒன்றுபோல வாரா.

II. ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு இவையெல்லாம் கருப்பொருள்கள்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

114. கருப்பொருள் (தெய்வம்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. திருமால்

II. முல்லை – 2. இந்திரன்

III. மருதம் – 3. வருணன்

IV. நெய்தல் – 4. கொற்றவை

V. பாலை – 5. முருகன்

**A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4**

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

115. கருப்பொருள் (மக்கள்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. எயினர், எயிற்றியர்

II. முல்லை – 2. சேர்ப்பன், பரதன், பரத்தியர்

III. மருதம் – 3. ஊரன், உழவர், உழத்தியர்

IV. நெய்தல் – 4. தோன்றல், ஆயர், ஆய்ச்சியர்

V. பாலை – 5. வெற்பன், குறவர், குறத்தியர்

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

**B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1**

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

116. கருப்பொருள் (உணவு), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. மலைநெல், தினை

II. முல்லை – 2. வரகு, சாமை

III. மருதம் – 3. செந்நெல், வெண்ணெல்

IV. நெய்தல் – 4. மீன், உப்புக்குப் பெற்ற பொருள்

V. பாலை – 5. சூறையாடலால் வரும் பொருள்

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

**C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5**

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

117. கருப்பொருள் (விலங்கு), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. முயல், மான், புலி

II. முல்லை – 2. புலி, கரடி, சிங்கம்

III. மருதம் – 3. வலியிழந்த யானை

IV. நெய்தல் – 4. முதலை, சுறா

V. பாலை – 5. எருமை, நீர்நாய்

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

**D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3**

118. கருப்பொருள் (பூ), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. முல்லை, தோன்றி

II. முல்லை – 2. செங்கழுநீர், தாமரை

III. மருதம் – 3. தாழை, நெய்தல்

IV. நெய்தல் – 4. குரவம், பாதிரி

V. பாலை – 5. குறிஞ்சி, காந்தள்

**A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4**

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

119. கருப்பொருள் (மரம்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. இலுப்பை, பாலை

II. முல்லை – 2. புன்னை, ஞாழல்

III. மருதம் – 3. காஞ்சி, மருதம்

IV. நெய்தல் – 4. கொன்றை, காயா

V. பாலை – 5. அகில், வேங்கை

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

**B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1**

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

120. கருப்பொருள் (பறவை), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. கிளி, மயில்

II. முல்லை – 2. காட்டுக்கோழி, மயில்

III. மருதம் – 3. நாரை, நீர்க்கோழி, அன்னம்

IV. நெய்தல் – 4. கடற்காகம்

V. பாலை – 5. புறா, பருந்து

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

**C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5**

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

121. கருப்பொருள் (ஊர்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. பாடி, சேரி

II. முல்லை – 2. சிறுகுடி

III. மருதம் – 3. குறும்பு

IV. நெய்தல் – 4. பட்டினம், பாக்கம்

V. பாலை – 5. பேரூர், மூதூர்

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

**D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3**

122. கருப்பொருள் (நீர்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. காட்டாறு

II. முல்லை – 2. மனைக்கிணறு, பொய்கை

III. மருதம் – 3. மணற்கிணறு, உவர்க்கழி

IV. நெய்தல் – 4. வற்றிய சுனை, கிணறு

V. பாலை – 5. அருவி நீர், சுனைநீர்

**A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4**

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

123. கருப்பொருள் (பறை), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. துடி

II. முல்லை – 2. மீன் கோட்பறை

III. மருதம் – 3. மணமுழா, நெல்லரிகிணை

IV. நெய்தல் – 4. ஏறு கோட்பறை

V. பாலை – 5. தொண்டகம்

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

**B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1**

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

124. கருப்பொருள் (யாழ்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. குறிஞ்சி யாழ்

II. முல்லை – 2. முல்லை யாழ்

III. மருதம் – 3. மருத யாழ்

IV. நெய்தல் – 4. விளரி யாழ்

V. பாலை – 5. பாலை யாழ்

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

**C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5**

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

125. கருப்பொருள் (பண்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. முல்லைப்பண்

II. முல்லை – 2. குறிஞ்சிப்பண்

III. மருதம் – 3. பஞ்சுரப்பண்

IV. நெய்தல் – 4. செவ்வழிப்பண்

V. பாலை – 5. மருதப்பண்

A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

**D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3**

126. கருப்பொருள் (தொழில்), திணை தொடர்பானவற்றை சரியாகப் பொருத்துக.

I. குறிஞ்சி – 1. ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல்

II. முல்லை – 2. நெல்லரிதல், களை பறித்தல்

III. மருதம் – 3. மீன் பிடித்தல், உப்பு விளைத்தல்

IV. நெய்தல் – 4. வழிப்பறி, நிரை கவர்தல்

V. பாலை – 5. தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்

**A) I – 5, II – 1, III – 2, IV – 3, V – 4**

B) I – 5, II – 4, III – 3, IV – 2, V – 1

C) I – 1, II – 2, III – 3, IV – 4, V – 5

D) I – 2, II – 1, III – 5, IV – 4, V – 3

127. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ________________?

A) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

B) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

**C) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**

D) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

128. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?

A) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

B) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

**C) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது**

D) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்

129. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

A) அள்ளி முகர்ந்தால்

**B) தளரப் பிணைத்தால்**

C) இறுக்கி முடிச்சிட்டால்

D) காம்பு முறிந்தால்

130. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

A) கரகாட்டம் என்றால் என்ன?

B) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

C) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?

**D) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

131. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

A) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

B) ஊரில் விளைச்சல் இல்லாததால்

C) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

**D) அங்கு வறுமை இல்லாததால்**

132. சிறு நண்டு மணல்மீது படமொன்று கீறும் சிலவேளை அதைவந்து அலை கொண்டு போகும் கறிசோறு பொதியோடு தருகின்ற போதும் கடல்மீது இவள் கொண்ட பயமொன்று காணும், வெறுவான வெளி மீது முகில் வந்து சூழும் வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும் நெறிமாறு பட நூறு சுழிவந்து சூழும் நிலையான கரை நீரில் அலைபோய் உலைந்தாடும் – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

**A) மகாகவி (இலங்கை)**

B) ராஜு சுந்தரம்

C) சி. சு. செல்லப்பா

D) சூரியன்

133. கலைச்சொல் அறிவோம் சரியானது எது?

I. Aesthetics – அழகியல், முருகியல்

II. Terminology – கலைச்சொல்

III. Artifacts – கலைப் படைப்புகள்

IV. Myth – தொன்மம்

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

134. நூல் மற்றும் ஆசிரியர் சரியானது எது?

I. தேன்மழை – சுரதா

II. திருக்குறள் நீதி இலக்கியம் – க.த.திருநாவுக்கரசு

III. நாட்டார் கலைகள் – அ.கா.பெருமாள்

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

135. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.

(எ.கா.) அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தார். ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

II. தொடர்சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டிருக்கும்.

(எ.கா.) அ) இனியநிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார். ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்.

III. கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வரும்.

(எ.கா.) அ) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான். பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான் – முதன்மைத் தொடர்; மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் – துணைத் தொடர்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II, III அனைத்தும் தவறு

136. சந்தக் கவிதையில் சிறக்கும் ________________?

A) ஆறுமுக நாவலர்

B) பெருஞ்சித்திரனார்

**C) கம்பன்**

D) ஔவையார்

137. விடுபட்டதை நிரப்புக.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும் ________________ ________________ ________________?

**A) அருவினையும் மாண்ட தமைச்சு**

B) டைந்துடன் மாண்ட தமைச்சு

C) யாவுள முன்நிற் பவை

D) தியற்கை அறிந்து செயல்

138. விடுபட்டதை நிரப்புக.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ ________________ ________________ ________________?

A) அருவினையும் மாண்ட தமைச்சு

**B) டைந்துடன் மாண்ட தமைச்சு**

C) யாவுள முன்நிற் பவை

D) தியற்கை அறிந்து செயல்

139. விடுபட்டதை நிரப்புக.

மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம் ________________ ________________ ________________?

A) அருவினையும் மாண்ட தமைச்சு

B) டைந்துடன் மாண்ட தமைச்சு

**C) யாவுள முன்நிற் பவை**

D) தியற்கை அறிந்து செயல்

140. விடுபட்டதை நிரப்புக.

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத் ________________ ________________ ________________?

A) அருவினையும் மாண்ட தமைச்சு

B) டைந்துடன் மாண்ட தமைச்சு

C) யாவுள முன்நிற் பவை

**D) தியற்கை அறிந்து செயல்**

141. விடுபட்டதை நிரப்புக.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் ________________ ________________ ________________?

**A) பொருளல்ல தில்லை பொருள்**

B) தீதின்றி வந்த பொருள்

C) புல்லார் புரள விடல்

D) றுண்டாகச் செய்வான் வினை

142. விடுபட்டதை நிரப்புக.

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து ________________ ________________ ________________?

A) பொருளல்ல தில்லை பொருள்

**B) தீதின்றி வந்த பொருள்**

C) புல்லார் புரள விடல்

D) றுண்டாகச் செய்வான் வினை

143. விடுபட்டதை நிரப்புக.

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் ________________ ________________ ________________?

A) பொருளல்ல தில்லை பொருள்

B) தீதின்றி வந்த பொருள்

**C) புல்லார் புரள விடல்**

D) றுண்டாகச் செய்வான் வினை

144. விடுபட்டதை நிரப்புக.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் ________________ ________________ ________________?

A) பொருளல்ள தில்லை பொருள்

B) தீதின்றி வந்த பொருள்

C) புல்லார் புரள விடல்

**D) றுண்டாகச் செய்வான் வினை**

145. விடுபட்டதை நிரப்புக.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் ________________ ________________ ________________?

**A) எஃகதனிற் கூரிய தில்**

B) அழுதகண் ணீரும் அனைத்து

C) என்பரியும் ஏதிலான் துப்பு

D) தஞ்சம் எளியன் பகைக்கு

146. விடுபட்டதை நிரப்புக.

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் ________________ ________________ ________________?

A) எஃகதனிற் கூறிய தில்

**B) அழுதகண் ணீரும் அனைத்து**

C) என்பரியும் ஏதிலான் துப்பு

D) தஞ்சம் எளியன் பகைக்கு

147. விடுபட்டதை நிரப்புக.

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான் ________________ ________________ ________________?

A) எஃகதனிற் கூறிய தில்

B) அழுதகண் ணீரும் அனைத்து

**C) என்பரியும் ஏதிலான் துப்பு**

D) தஞ்சம் எளியன் பகைக்கு

148. விடுபட்டதை நிரப்புக.

அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான் ________________ ________________ ________________?

A) எஃகதனிற் கூறிய தில்

B) அழுதகண் ணீரும் அனைத்து

C) என்பரியும் ஏதிலான் துப்பு

**D) தஞ்சம் எளியன் பகைக்கு**

149. விடுபட்டதை நிரப்புக.

ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனவிரண்டின் ________________ ________________ ________________?

**A) நீள்வினையால் நீளும் குடி**

B) சுற்றமாச் சுற்றும் உலகு

C) இன்மையே இன்னா தது

D) எல்லாம் ஒருங்கு கெடும்

150. விடுபட்டதை நிரப்புக.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் ________________ ________________ ________________?

A) நீள்வினையால் நீளும் குடி

**B) சுற்றமாச் சுற்றும் உலகு**

C) இன்மையே இன்னா தது

D) எல்லாம் ஒருங்கு கெடும்

151. விடுபட்டதை நிரப்புக.

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் ________________ ________________ ________________?

A) நீள்வினையால் நீளும் குடி

B) சுற்றமாச் சுற்றும் உலகு

**C) இன்மையே இன்னா தது**

D) எல்லாம் ஒருங்கு கெடும்

152. விடுபட்டதை நிரப்புக.

கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை ________________ ________________ ________________?

A) நீள்வினையால் நீளும் குடி

B) சுற்றமாச் சுற்றும் உலகு

C) இன்மையே இன்னா தது

**D) எல்லாம் ஒருங்கு கெடும்**

153. விடுபட்டதை நிரப்புக.

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம் ________________ ________________ ________________?

**A) உள்ளுள் உவப்ப துடைத்து**

B) ஒப்பாரி யாம்கண்ட தில்

C) மேவன செய்தொழுக லான்

D) கொல்லப் பயன்படும் கீழ்

154. விடுபட்டதை நிரப்புக.

மக்களே போல்வர் கயவர்; அவரன்ன ________________ ________________ ________________?

A) உள்ளுள் உவப்ப துடைத்து

**B) ஒப்பாரி யாம்கண்ட தில்**

C) மேவன செய்தொழுக லான்

D) கொல்லப் பயன்படும் கீழ்

155. விடுபட்டதை நிரப்புக.

தேவர் அனையர் கயவர் அவரும்தாம் ________________ ________________ ________________?

A) உள்ளுள் உவப்ப துடைத்து

B) ஒப்பாரி யாம்கண்ட தில்

**C) மேவன செய்தொழுக லான்**

D) கொல்லப் பயன்படும் கீழ்

156. விடுபட்டதை நிரப்புக.

சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல் ________________ ________________ ________________?

A) உள்ளுள் உவப்ப துடைத்து

B) ஒப்பாரி யாம்கண்ட தில்

C) மேவன செய்தொழுக லான்

**D) கொல்லப் பயன்படும் கீழ்**

157. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள் – இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

A) உவமையணி

B) பொருள் பின்வருநிலையணி

**C) சொல் பின்வருநிலை அணி**

D) சொற்பொருள் பின் வருநிலையணி

158. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை – இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

**A) உவமை அணி**

B) உருவக அணி

C) வேற்றுமை அணி

D) பிறிது மொழிதல் அணி

159. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் இன்மையே இன்னாதது – இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

A) சொல்பின்வருநிலையணி

**B) சொற்பொருள் பின்வருநிலையணி**

C) உவமையணி

D) உருவக அணி

160. மக்களே போல்வர் கயவர்; அவரன்ன ஒப்பாரி யாம்கண்ட தில் – இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

**A) உவமையணி**

B) உருவக அணி

C) வேற்றுமை அணி

D) பிறிதுமொழிதல் அணி

161. தேவர் அனையர் கயவர் அவரும்தாம் மேவன செய்தொழு கலான் – இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

A) தற்குறிப்பேற்ற அணி

B) உவமை அணி

**C) வஞ்சப்புகழ்ச்சி அணி**

D) உருவக அணி

162. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ் – இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

A) வேற்றுமை அணி

B) உருவக அணி

C) பிறிதுமொழிதல் அணி

**D) உவமையணி**

163. எவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்?

A) ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருத்தல்

B) இயற்கையான நுண்ணறிவும், நூலறிவும்

C) மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி

**D) தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை**

164. திருவள்ளுவர் கூறும் எந்த ஐந்து, சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்?

A) செயற்கையறிவு, இயற்கையறிவு, நுண்ணறிவு, அன்பு, ஆற்றல்

B) இயற்கையான நுண்ணறிவு, நூலறிவு, அன்பு, ஆற்றல், கோபம்

**C) மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி**

D) தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை, இரக்க குணம்

165. __________________ உடைய அமைச்சர்களுக்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகள் நிற்க முடியும்? (எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது).

A) ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருத்தல்

**B) இயற்கையான நுண்ணறிவும், நூலறிவும்**

C) மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி

D) தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை

166. எவ்வாறு சேர்த்த பொருள் ஒருவருக்கு அறத்தையும் தரும்; இன்பத்தையும் தரும்?

A) அன்பினால் சேர்த்த பொருள்

B) அறிவினால் சேர்த்த பொருள்

**C) முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள்**

D) இவற்றில் ஏதுமில்லை

167. எந்த பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிட வேண்டும், என்று வள்ளுவர் கூறுகிறார்?

A) அன்பினால் சேர்த்த பொருள்

**B) மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருள்**

C) முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள்

D) அறிவினால் சேர்த்த பொருள்

168. மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு, யானைப்போரைக் காண்பது போன்றது எது?

**A) தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது**

B) மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருள்

C) முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள்

D) அறிவினால் சேர்த்த பொருள்

169. கீழ்க்கண்டவற்றுள் திருவள்ளுவர் கூறிய கூற்றுகளில் சரியானது எது?

I. ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும்; அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை

II. பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளும், கொலைக்கருவி மறைந்து இருக்கும். அது போல் அவர் அழுத கண்ணீரின் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும் என்பதை உணர வேண்டும்.

III. சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும், வலிமையில்லாமலும் இருந்தால் அவர் எப்படிப் பகைவரின் வலிமையை எதிர்கொள்வார்?

IV. மனத்தில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய், பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

170. எவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்?

A) சுற்றத்தாரிடம் அன்புடன் இருப்போர், வஞ்சகர்

B) இரக்ககுணம், செல்வம்

**C) விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல்**

D) இவற்றில் ஏதுமில்லை

171. உலகத்தார் யாரை, உறவாகக் கொண்டு போற்றுவர்?

A) விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் உடையவரை

**B) குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை**

C) அன்பு மற்றும் செல்வம் மிக்கவரை

D) இவற்றில் ஏதுமில்லை

172. கீழ்க்கண்ட கூற்றுகளுள் திருக்குறள் கூறும் சரியனான கூற்று எது?

I. கயவர் மக்களைப் போலவே இருப்பர்; கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் நாம் கண்டதில்லை.

II. இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

III. தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

IV. ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

173. கீழ்க்கண்ட கூற்றுகளுள் திருக்குறள் கூறும் சரியனான கூற்று எது?

I. ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவி செய்வர் சான்றோர்; கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் கயவர்.

II. தேவரும் கயவரும் ஒரு தன்மையர்; எவ்வாறு எனில் தேவர்களைப் போலக் கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

winmeen.com

# 10th Tamil Questions - Unit 7

1. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் _____________ ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் _____________ ல் தொடங்கி வைத்தார்.

**A) 1906, தென்னாப்பிரிக்கா**

B) 1910, இந்தியா

C) 1915, இங்கிலாந்து

D) 1920, ரஷ்யா

2. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய ஆண்டு?

A) 1900

**B) 1906**

C) 1910

D) 1925

3. 1906 ஆம் ஆண்டில் ஜூன் 26 ஆம் நாள், சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன் குப்பம் என்னும் பகுதியில் பிறந்த தலைவர் யார்?

A) சுத்தானந்த பாரதியார்

B) உ.வே. சாமிநாதர்

**C) ம.பொ.சிவஞானம்**

D) ஆனந்தரங்கர்

4. கீழ்க்கண்ட கூற்றுடன் தொடர்புடையவர் யார்? தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் இட்ட பெயர் ஞானப்பிரகாசம்.

A) சுத்தானந்த பாரதியார்

B) உ.வே. சாமிநாதர்

**C) ம.பொ.சிவஞானம்**

D) ஆனந்தரங்கர்

5. "ஏர் புதிதா" எனும் கவிதை _______________ என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

A) பாரதியார் கவிதைகள்

B) தாயுமானவர் பாடல்கள்

**C) கு.ப.ரா. படைப்புகள். (கு.ப.ராஜகோபாலன்)**

D) பாரதிதாசன் கவிதைகள்

6. கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி என்று பட்டங்கள் கொண்ட மன்னன் யார்?

A) கணைக்கால் இரும்பொறை

**B) இரண்டாம் இராசராச சோழன்**

C) சுந்தர பாண்டியன்

D) கரிகாலன்

7. "மெய்க்கீர்த்திகள்" பற்றிய சரியான கூற்று எது?

I. மெய்க்கீர்த்தி பகுதியின் இலக்கிய நயம் நாட்டின் வளத்தையும் ஆட்சி சிறப்பையும் ஒருசேர உணர்த்துவதாக உள்ளது.

II. இரண்டாம் இராசராச சோழனுடைய மெய்க்கீர்த்திகள் இரண்டு. அதில் ஒன்று 91 அடிகளைக் கொண்டது. அதில் 16–33 வரையான அடிகள் பாடப்பகுதியில் தரப்பட்டுள்ளன.

III. முதலாம் இராசராசன் காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன. மெய்க்கீர்த்திகளே கல்வெட்டின் முதல்பகுதியில் மன்னரைப் பற்றிப் புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்படும் வரிகள்.

IV. மெய்க்கீர்த்திகள் புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

8. ம.பொ. சிவஞானம் பற்றிய சரியான கூற்று எது?

I. சரபையர் என்ற முதியவர் ஒருவர் "ம.பொ. சிவஞானம்" அவர்களின் பெயரை மாற்றி 'சிவஞானி' என்றே அழைத்தார். பின்னாளில் அவர் எனக்கிட்டு அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

II. நான் பள்ளியில், மூன்றாம் வகுப்பில் நுழைந்த ஏழாம் நாளில், பகல் நேரத்தில் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் பள்ளிக்குப் போனேன். காலையிலேயே பாடப் புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னைக் கண்டித்தார். அன்றோடு என் கல்வி முற்றுப் பெற்றது.

III. அன்னையார் இளமையிலே எனக்குப் பயிற்றுவித்த பாக்கள் எனது இலக்கியப் பயிற்சிக்கான பாலபாடங்களாக அமைந்தன. அல்லி அரசாணி மாலை, பவளக் கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பாடுவார். அந்த நேரத்தில் என்னையும் சிறிது நேரம் அந்த நூல்களைப் படிக்க வைப்பார். அதனால், சந்த நயத்தோடும் எதுகை மோனையோடும் உள்ள அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடிப் பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்து வந்தேன். சித்தர் பாடல்களை நானாகவே விரும்பிப் படித்து மனனம் செய்வேன்.

IV. சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன். ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி. யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமையிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே மிகுந்த பங்குண்டு.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

9. கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?

இவர் ஒரு புத்தகப்பித்தன். நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத குறையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று, தமக்கு விருப்பமான புத்தகங்களை, மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார். குறைந்த விலைக்கு நல்ல நூலொன்று கிடைத்துவிட்டால் பேரானந்தம் அடைவார். அவர் வாழ்நாளில் அவராக முயன்று சேர்த்துவைத்துள்ள சொத்துகள் அவரிடமுள்ள பல்லாயிரக்கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

A) சுத்தானந்த பாரதியார்

B) உ.வே. சாமிநாதர்

**C) ம.பொ.சிவஞானம்**

D) ஆனந்தரங்கர்

10. காந்தி – இர்வின் ஒப்பந்தம் எந்த ஆண்டு நடைபெற்றது?

A) 1929

B) 1930

**C) 1931**

D) 1932

11. 30.09.1932இல் 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக, சிறையிலிடப்பட்டவர் யார்?

A) பாரதியார்

B) சத்திய மூர்த்தி

C) பெரியார்

**D) ம.பொ. சிவஞானம்**

12. _________________ ஆம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாளாகும். அன்றுதான் 'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தை _________________ இல் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி (காங்கிரஸ் கட்சி) ஒரு மனதாக நிறைவேற்றியது.

**A) 1942 ஆகஸ்டு 8, பம்பாய்**

B) 1940 ஆகஸ்டு 8, கொல்கத்தா

C) 1938 ஆகஸ்டு 8, சென்னை

D) 1936 ஆகஸ்டு 8, பஞ்சாப்

13. ம.பொ.சிவஞானம் அவர்கள் ஆகஸ்டு 13 ஆம் நாள் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அப்போது அந்த சிறையில் அவர் சந்தித்த தென்னகத்தின் முன்னணித் தலைவர்கள் யார்?

A) வ.உ.சி, சுப்ரமணிய சிவா, பாரதியார்

**B) காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம்**

C) பெரியார், அயோத்திதாச பண்டிதர்

D) திரு.வி.க, ராஜாஜி

14. ம.பொ.சிவஞானம் அவர்கள் ஆகஸ்டு 13 ஆம் நாள் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். சில நாள்களுக்குப் பின் அங்கிருந்து _________________ சிறைக்கு மாற்றப்பட்டார்.

A) சென்னை

B) வேலூர்

**C) அமராவதி**

D) அந்தமான்

15. 1947, ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும் மறுநாள் காலை ம.பொ. சிவஞானம் அவர்கள் ஒரு குழுவாக வடக்கெல்லைக்குச் சென்றார்கள். இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது. ஆசிரியர் _________________ என்ற சுமார் 55 வயதுடைய பெரியாரின் அழைப்பின் மீதே நாங்கள் வடக்கெல்லைக்குச் சென்றார்கள். அவர் சிறந்த தமிழறிஞர்.

A) சுத்தானந்த பாரதியார்

B) ஈசான தேசிகர்

C) மீனாட்சி சுந்தரனார்

**D) மங்கலங்கிழார்**

16. இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தனர் – இதனைப் பற்றிய சரியான காற்று எது?

I. ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ்மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச்

செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார். அவருடன் இணைந்து, தமிழரசுக் கழகம் சென்னையிலும் திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது.

II. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது. போராட்டத்தில் ஈடுபட்ட ம.பொ.சிவஞானம், மங்கலங்கிழார், விநாயகம், ஈ.எஸ். தியாகராஜன், ரஷீத் என ஏராளமானோர் சிறைப்பட்டார்கள்.

III. போராட்டத்தில் ஈடுபட்டு இராஜமுந்திரி சிறையிலிருந்த திருவாலங்காடு கோவிந்தராசன், பழநி சிறையிலிருந்த மாணிக்கம் ஆகிய இருவரும் சிறையிலேயே உயிர் துறந்தனர். சர்தார் கே.எம். பணிக்கர் தலைமையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட மொழிவாரி ஆணையம், சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திராவிற்குக் கொடுத்துவிட்டது. அதனை எங்களால் ஏற்க முடியவில்லை. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' என்று முழங்கினோம்.

IV. மீண்டும் பெரும் போராட்டம் தொடங்கியது. அதன் விளைவாக, படாஸ்கர் ஆணையம் அமைக்கப்பட்டு, திருத்தணிவரையுள்ள தமிழ் நிலங்கள் மீட்கப்பட்டன.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

17. நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டுசெல்ல விரும்பியதற்குக் காரணமுண்டு; திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன்; ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறில்லையென்று உறுதியாகக் கூறுவேன். இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து. எனவேதான் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம் – என்று கூறியவர் யார்?

**A) சிலம்புச் செல்வர் ம.பொ.சி**

B) மு. வரதராசனார்

C) காமராஜர்

D) சத்தியமூர்த்தி

18. ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அந்நாள் முதல்வர் ________________ அவர்களுக்கு நிலைமையின் தீவிரத்தை உணர்த்திய போது, தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் முன்வந்தார். சென்னை மாகாணத்திலிருந்து பிரித்து ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி ________________ தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற இடைக்கால ஏற்பாட்டினைப் பரிந்துரைத்திருப்பதாக அதிகாரப்பூர்வமற்ற கருத்துகள் நிலவின.

A) ஏ. சுப்பராயலு, கோகா சுப்பாராவ்

B) பனகல் ராஜா, வெங்கடாசலய்யா

**C) சி. இராஜகோபாலாச்சாரி, வாஞ்சு**

D) காமராஜர், கமல்நாராயண் சிங்

19. ஆந்திர மாநிலம் பிரியும் போது சென்னை தான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். இதையொட்டி, சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை ________________ என்பவரின் தலைமையில் கூட்டி, சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, அப்போது "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கியவர் ________________?

A) பனகல் ராஜா, மு.வரதராசனார்

B) பி. முனுசுவாமி நாயுடு, பெரியார்

C) பி. டி. இராஜன், காமராஜர்

**D) செங்கல்வராயன், ம.பொ.சிவஞானம்**

20. ________________ அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு நடுவணரசின் சார்பில் அதிகாரப்பூர்வமான உறுதிமொழியொன்றை வெளியிட்டார். அதன்படி ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயே அமையும் என்று உறுதியளிக்கப்பட்டது. சென்னை தமிழருக்கே என்பதும் உறுதியானது.

**A) 25.03.1953**

B) 25.03.1952

C) 25.03.1951

D) 25.03.1950

21. தாய்த்தமிழக மக்களில் பலர் தெற்கெல்லைக் கிளர்ச்சியோடு எனக்குள்ள தொடர்பை அறியமாட்டார்கள். நான் முதன்முதலில் ஈடுபட்டது தெற்கெல்லைக் கிளர்ச்சியில்தான். ________________ இல் ________________ நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசினேன். அதுதான் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய எனது முதல் பேச்சு. அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் தனி அரசாக இருந்தது, என்று ம.பொ.சிவஞானம் அவர்கள் கூறினார்.

A) 1945 ஆகஸ்டு 25, திருப்பூர்

**B) 1946 அக்டோபர் 25, நாகர்கோயில்**

C) 1947 மே 25, செங்கல்பட்டு

D) 1948 ஜூன் 25, சாத்தூர்

22. தமிழக வடக்கு – தெற்கு எல்லைக் கிளர்ச்சிகள், தொடர்பாக ம.பொ.சிவஞானம் அவர்கள் கூறியவற்றுள் சரியானது எது?

I. 1953–54ஆம் ஆண்டுகளில் தெற்கெல்லைப் பகுதிகளைக் கேரள (திருவிதாங்கூர்) முடியாட்சியிலிருந்து மீட்கவும் போராடினோம்.

II. தமிழக வடக்கு – தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளைத் தமிழகம் தழுவிய அளவில் தொடங்கிவைத்தது தமிழரசுக் கழகம்தான் என்றாலும் அதனை நடத்துகின்ற பொறுப்பை எல்லைப்பகுதி மக்களிடமே விட்டுவைத்திருந்தேன். அவர்களுள் பி.எஸ்.மணி, ம.சங்கரலிங்கம், நாஞ்சில் மணிவர்மன், பி.ஜே.பொன்னையா ஆகியோர் முதன்மையானவர்கள்.

III. தெற்கெல்லைக் கிளர்ச்சியில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர்நீத்த தமிழரசுக் கழகத் தோழர்களான தேவசகாயம், செல்லையா ஆகிய இருவரையும் நாம் மறந்துவிடக் கூடாது.

IV. நதானியல், தாணுலிங்கம், காந்திராமன் போன்ற முதியவர்களும் என்பால் நம்பிக்கை வைத்திருந்தனர். இயற்கையாகவே போர்க்குணம்கொண்ட நேசமணி, தென் திருவிதாங்கூரில் மிகுந்த செல்வாக்குடையவர். அவருடைய வருகைக்குப் பிறகு போராட்டம் மேலும் வலுப்பெற்றது.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

23. கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?

இளம்வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர்; வழக்கறிஞர். நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்; 1956 நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன்

இணைந்து, தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது. இவருடைய நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ளது.

**A) மார்ஷல் நேசமணி**

B) ம.சங்கரலிங்கம்

C) நாஞ்சில் மணிவர்மன்

D) பி.ஜே.பொன்னையா

24. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியனது எது?

I. திருவிதாங்கூர் ஆட்சி அகன்று, கேரள மாநிலம் உருவானது.

II. அப்போது தமிழர்கள் மிகுதியாக வாழக்கூடிய தேவிகுளம், பீர்மேடு, தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, நாகர்கோவில் ஆகிய பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று தமிழரசுக் கழகம் போராட்டத்தைத் தொடங்கியது.

III. ஆனால் மேற்சொன்ன பகுதிகளோடு தமிழகத்திலிருந்த கோவை மாவட்டத்தின் மேற்குப்பகுதி, நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், உதகமண்டலம் ஆகியவற்றையும் பிரித்தெடுத்துக் கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று கேரளத்தவர், பசல் அலி ஆணையத்திடம் விண்ணப்பித்தனர்.

A) I, III மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

25. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியனது எது?

I. பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை 1955 அக்டோபர் 10 ஆம் நாள் வெளியானது.

II. அந்தப் பரிந்துரையில், மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்து அமைக்கும் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டதோடு சென்னை மாநிலத்தில் உள்ள மலபார் மாவட்டத்தைக் கேரளத்தோடும் திருவிதாங்கூர் – கொச்சி இராஜ்யத்திலிருந்த கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம், செங்கோட்டை ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டோடும் இணைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

III. தேவிகுளம், பீர்மேடு நம் கைவிட்டுப் போயின.

IV. புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலையாகவும் தெற்கெல்லை குமரிமுனையாகவும் கூறப்படுவதனைப் படித்தபோது எனது நெஞ்சம் இறும்பூது எய்தியது. மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும். அந்தத் தெய்வீக எல்லைகளை ஓரளவேனும் தமிழகம் திரும்பப் பெற்றது என்பதே என் வாழ்நாள் மகிழ்ச்சியாகும், என்று ம.பொ.சிவஞானம் கூறினார்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

26. ________________ நாட்டுத் தலைநகரமான ________________ இல் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இது கி.பி. ________________ நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

**A) ஆஸ்டிரியா, வியன்னா, 2 ஆம்**

B) ரஷ்யா, மாஸ்கோ, 3 ஆம்

C) தென் ஆப்பிரிக்கா,கேப்டவுன், 4 ஆம்

D) இங்கிலாந்து, லண்டன், 5 ஆம்

27. ம.பொ.சிவஞானத்தின் '________________' என்னும் தன்வரலாற்று நூலில் இருந்து இக்கட்டுரை (பாடப்பகுதி) தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

A) மக்கள் போராட்டம்

**B) எனது போராட்டம்**

C) நம் போராட்டம்

D) மாநிலப் போராட்டம்

28. ________________ செல்வர் என்று போற்றப்படும் ம.பொ.சிவஞானம் அவர்களின் காலம் ________________. இவர் ஒரு விடுதலைப் போராட்ட வீரர்;

A) இசைச், 1904 – 1993

B) போராட்ட, 1905 – 1994

**C) சிலம்பு, 1906 – 1995**

D) கவி, 1907 – 1996

29. ம.பொ.சிவஞானம் அவர்கள் ________________ வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் ________________ வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்;

A) 1949 முதல் 1951; 1969 முதல் 1975

B) 1950 முதல் 1952; 1970 முதல் 1976

C) 1951 முதல் 1953; 1971 முதல் 1977

**D) 1952 முதல் 1954; 1972 முதல் 1978**

30. ம.பொ.சிவஞானம் அவர்கள், தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியவர். 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் இவருடைய நூலுக்காக ________________ ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றார். தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை ________________ லும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது.

**A) 1966, தியாகராய நகர்**

B) 1970, எழும்பூர்

C) 1972, ராயபுரம்

D) 1974, அண்ணா நகர்

31. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ________________?

**A) திருப்பதியும் திருத்தணியும்**

B) திருத்தணியும் திருப்பதியும்

C) திருப்பதியும் திருச்செந்தூரும்

D) திருப்பரங்குன்றமும் பழனியும்

32. ம.பொ.சி.க்கு பெற்றோர் இட்ட பெயர் ________________?

A) சிவஞானம்

**B) ஞானப்பிரகாசம்**

C) பிரகாசம்

D) பொன்னுசாமி

33. சிவஞானி என்ற பெயரே ________________ என நிலைத்தது.

**A) சிவஞானம்**

B) சிவப்பிரகாசம்

C) ஞானப்பிரகாசம்

D) பிரகாசம்

34. ம.பொ.சியின் இயற்பெயரை மாற்றிய முதியவர் ________________?

A) பொன்னுசாமி

B) சரவணன்

**C) சரபையர்**

D) சிவஞானி

35. ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டு வழிகள் ________________?

**A) கல்வி, கேள்வி**

B) கல்வி, ஓவியம்

C) கலை, பண்பாடு

D) கலை, மேடைப்பேச்சு

36. பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை வெளியான நாள் ________________?

**A) 1955 அக்டோபர் 10**

B) 1957 ஆகஸ்டு 10

C) 1957 ஆகஸ்டு 10

D) 1949 அக்டோபர் 15

37. 'சிற்றகல் ஒளி' இடம் பெற்ற நூல் ________________?

A) என் பாதை

B) என் பயணம்

C) என் விருப்பம்

**D) எனது போராட்டம்**

38. சாகித்திய அகாதெமி விருது பெற்ற ம.பொ.சியின் நூல் ________________?

**A) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு**

B) வள்ளலாரும் பாரதியும்

C) வள்ளலார் வகுத்த வழி

D) வள்ளலார் கண்ட சாகாக் கலை

39. மா.பொ.சி பள்ளியில் படிக்கும் போது ஆசிரியர் கண்டிக்க காரணம் ________________?

A) தாமதமாக வந்தது

**B) பாடப் புத்தகம் கொண்டுவராமை**

C) படிக்காமை

D) வீட்டுப் பாடம் எழுதாமை

40. மா.பொ.சியின் பள்ளி வாழ்க்கை முடிவுற்ற வகுப்பு ________________?

A) ஐந்தாம் வகுப்பு

B) இரண்டாம் வகுப்பு

C) ஆறாம் வகுப்பு

**D) மூன்றாம் வகுப்பு**

41. மா.பொ.சிக்குக் கேள்வி ஞானம் பெருக்கியவர் ________________?

winmeen.com

A) அன்னை

**B) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்**

C) மங்கலங்கிழார்

D) மார்சல் ஏ.நேசமணி

42. தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியவர் ________________?

**A) மா.பொ .சி**

B) செங்கல்வராயன்

C) மங்கலங்கிழார்

D) மார்சல் ஏ.நேசமணி

43. சரியானதைத் தேர்ந்தெடு.

I. வாஞ்சு – 1. மாநகரத் தந்தை

II. செங்கல்வராயன் – 2. நீதிபதி

III. தேவசகாயம், செல்லையா – 3. மொழிவாரி ஆணையத் தலைமை

IV. சர்தார் கே.எம்.பணிக்கர் – 4. தமிழரசுக் கழகத் தோழர்கள்

A) I – 1; II – 2; III – 3; IV – 4

B) I – 3; II – 1; III – 4; IV – 2

**C) I – 2; II – 1; III – 4; IV – 3**

D) I – 4; II – 3; III – 2; IV – 1

44. முதல்மழை விழுந்ததும் மேல்மண் பதமாகிவிட்டது. வெள்ளி முளைத்திடுது, விரைந்துபோ நண்பா! காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு! பொன் ஏர் தொழுது, புலன் வழிபட்டு மாட்டைப் பூட்டி காட்டைக் கீறுவோம். ஏர் புதிதன்று, ஏறும் நுகத்தடி கண்டது, காடு புதிதன்று, கரையும் பிடித்ததுதான் கை புதிதா, கார் புதிதா? இல்லை. நாள்தான் புதிது, நட்சத்திரம் புதிது! ஊக்கம் புதிது, உரம் புதிது! – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) வாணிதாசன்

**D) கு.ப.ராஜகோபாலன்**

45. மாட்டைத் தூண்டி, கொழுவை அமுத்து மண்புரளும், மழை பொழியும், நிலம் சிலிர்க்கும், பிறகு நாற்று நிமிரும். எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்; கவலையில்லை! கிழக்கு வெளுக்குது பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில் நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை – என்ற பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) ஏர் புதிதா, கு.ப.ராஜகோபாலன் படைப்புகள்**

B) வாணிதாசன் கவிதைகள்–முதல் தொகுதி

C) அழகின் சிரிப்பு, பாரதிதாசன்

D) குயில், பாரதியார் கவிதைகள்

46. கு.ப.ராஜகோபாலன் ________________ ஆம் ஆண்டில் பிறந்தார்?

A) 1901

**B) 1902**

C) 1903

D) 1904

47. கு.ப.ராஜகோபாலன் ________________ என்ற ஊரில் பிறந்தார்?

A) கோவில்பட்டி

B) மன்னார்குடி

**C) கும்பகோணம்**

D) மானாமதுரை

48. கு.ப.ராஜகோபாலன் அவர்கள் பற்றிய சரியான கூற்று எது?

I. மிகச்சிறந்த சிறுகதை ஆசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்டவர்.

II. தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரின் மறைவுக்குப் பின்னர் இவரது படைப்புகளுள் அகலிகை, ஆத்மசிந்தனை ஆகியன நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

III. இந்திய அரசு பத்ம ஸ்ரீ விருது கொடுத்து, கு.ப.ராஜகோபாலன் அவர்களைச் சிறப்பித்துள்ளது.

A) I மட்டும் சரி

**B) I, II மட்டும் சரி**

C) I, III மட்டும் சரி

D) II, III மட்டும் சரி

49. சங்கத்தமிழரின் திணை வாழ்வு எதை அடிப்படையாகக் கொண்டது?

A) நெசவை

B) போரினை

**C) வேளாண்மையை**

D) கால்நடையை

50. தமிழரின் தலையான தொழிலாகவும், பண்பாடாகவும் திகழ்வது ________________?

A) கல்வி

**B) உழவு**

C) நெசவு

D) போர்

51. தமிழர் பண்பாட்டின் மகுடமாகத் திகழ்வது ________________?

A) நாகரிகம்

B) கலை

C) உழுதல்

**D) பொன் ஏர் பூட்டுதல்**

52. பொன்ஏர் பூட்டுதல் நடத்தப்படும் மாதம் ________________?

**A) சித்திரை**

B) ஆனி

C) ஆடி

D) தை

53. 'கடுகி செல்' – இதில் 'கடுகி' என்பதன் பொருள் ________________?

A) செல்லுதல்

B) மெதுவாக

**C) விரைவாக**

D) இயல்பாக

54. ஊக்கம் புதிது, உரம் புதிது – இதில் உரம் என்ற சொல் குறிப்பது ________________?

**A) வலிமை**

B) பயிர் உரம்

C) சத்து

D) வித்து

55. மெய்க்கீர்த்தி – சரியான கூற்று எது?

I. அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்; அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள்.

II. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள் இதற்கு முன்னோடி! பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் முளைவிட்ட இவ்வழக்கம், சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி எனப் பெயர் பெற்றது.

III. செப்பமான வடிவம் பெற்றது; கல் இலக்கியமாய் அமைந்தது.

IV. தமிழ் கல்வெட்டுகள் பெரும்பாலும், தென் இந்தியாவை விட வட இந்தியாவிலேயே அதிகம் காணப்படுகிறது.

A) I, II, III, IV அனைத்தும் சரி

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) I, II, III மட்டும் சரி**

56. இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும் ஒரு வடிவாகி வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய படியானையே பிணிப்புண்பன வடிமணிச்சிலம்பே யரற்றுவன செல்லோடையே கலக்குண்பன வருபுனலே சிறைப்படுவன மாவே வடுப்படுவன மாமலரே கடியவாயின காவுகளே கொடியவாயின கள்ளுண்பன வண்டுகளே பொய்யுடையன வரைவேயே போர்மலைவன எழுகழனியே மையுடையன நெடுவரையே மருளுடையன இளமான்களே கயற்குலமே பிறழ்ந்தொழுகும் – இந்தப் பாடல்வரிகள் யாருடன் தொடர்புடையது?

A) முதலாம் இராசராசன்

**B) இரண்டாம் இராசராசன்**

C) நன்னன்

D) கரிகாலன்

57. கைத்தாயரே கடிந்தொறுப்பார் இயற்புலவரே பொருள்வைப்பார் இசைப் பாணரே கூடஞ்செய்வார் என்று கூறி இவன்காக்கும் திருநாட்டி னியல் இதுவென நின்றுகாவல் நெறிபூண்டு நெறியல்லது நினையாது தந்தையில்லோர் தந்தையாகியுந் தாயரில்லோர் தாயராகியும் மைந்தரில்லொரு மைந்தராகியும் மன்னுயிர்கட்குயிராகியும் விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற அருளென்னவும் மொழிபெற்ற பொருளென்னவும் முகம்பெற்ற பனுவலென்னவும் எத்துறைக்கும் இறைவனென்னவும் யாஞ்செய் – இந்தப் பாடல்வரிகளுடன் தொடர்புடைய மன்னனின் சிறப்புப் பெயரைத் தேர்வு செய்க?

**A) கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி**

B) சிங்களாந்தகன், பாண்டிய குலசனி

C) சுங்கம் தவிர்த்த சோழன்

D) இவற்றில் ஏதுமில்லை

58. ________________ இந்திரன் முதலாகத் திசைபாலர் எட்டு பேரும் ஒருவரும் பெற்றதுபோல் ஆட்சி செய்தவன்.

A) இளஞ்சேரலாதன்

**B) இரண்டாம் இராசராசன்**

C) இராஜேந்திர சோழன்

D) முதலாம் இராசராசன்

59. சங்க இலக்கியமான ________________ பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள், மெய்க்கீர்த்திகளுக்கு முன்னோடி.

A) குறுந்தொகை

B) பரிபாடல்

C) கலித்தொகை

**D) பதிற்றுப்பத்து**

60. பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் முளைவிட்ட இவ்வழக்கம், சோழர் காலத்தில் ________________ எனப் பெயர் பெற்றது.

**A) மெய்க்கீர்த்தி**

B) நூல்சாவடி

C) ஏடு

D) இவற்றில் ஏதுமில்லை

61. யாருடைய காலந்தொட்டு மெய்க்கீர்த்தி கல்லில் வடிக்கப்பட்டது?

A) பல்லவர்

B) பாண்டியர்

**C) முதலாம் இராசராசன்**

D) இராஜேந்திர சோழன்

62. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. யானைகள் – 1. புலம்புகின்றன

II. சிலம்புகள் – 2. பிணிக்கப்படுவன

III. ஓடைகள் – 3. அடைக்கப்படுகின்றது

IV. புனல் – 4. கலக்கமடைகின்றன

**A) I – 2; II – 1; III – 4; IV – 3**

B) I – 1; II – 2; III – 3; IV – 4

C) I – 3; II – 4; III – 1; IV – 2

D) I – 4; II – 3; III – 2; IV – 1

63. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. மாங்காய்கள் – 1. வடுப்படுகின்றன

II. மலர்கள் – 2. பறிக்கப்படுகின்றன

III. காடுகள் – 3. கொடி உடையனவாக உள்ளன

IV. வண்டுகள் – 4. கள் (தேன்) உண்ணுகின்றன

A) I – 2; II – 1; III – 4; IV – 3

**B) I – 1; II – 2; III – 3; IV – 4**

C) I – 3; II – 4; III – 1; IV – 2

D) I – 4; II – 3; III – 2; IV – 1

64. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. மலை மூங்கில் – 1. இருள் சூழ்ந்தவையாயிருக்கின்றன

II. நெற்கதிர்கள் – 2. மருள்கின்றன

III. நீண்ட மலைகள் – 3. வெறுமையாய் இருக்கின்றது

IV. இள மான்களின் கண்கள் – 4. போராக எழுகின்றன

A) I – 2; II – 1; III – 4; IV – 3

B) I – 1; II – 2; III – 3; IV – 4

**C) I – 3; II – 4; III – 1; IV – 2**

D) I – 4; II – 3; III – 2; IV – 1

65. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. குளத்து மீன்கள் – 1. ஆடிப்படுவர்

II. செவிலித்தாய் – 2. பொருள் (பொதிந்து) இருக்கின்றது

III. புலவர் பாட்டு – 3. சினங் காட்டுவர்

IV. இசைப்பாணர் – 4. பிறழ்ந்து செல்கின்றன

A) I – 2; II – 1; III – 4; IV – 3

B) I – 1; II – 2; III – 3; IV – 4

C) I – 3; II – 4; III – 1; IV – 2

**D) I – 4; II – 3; III – 2; IV – 1**

66. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. யானைகள் பிணிக்கப்படுவன – 1. மக்கள் புலம்புவதில்லை

II. சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன – 2. மக்கள் பிணிக்கப்படுவதில்லை

III. ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன – 3. மக்கள் அடைக்கப்படுவதில்லை

IV. புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றது – 4. மக்கள் கலக்கமடைவதில்லை

**A) I – 2; II – 1; III – 4; IV – 3**

B) I – 1; II – 2; III – 3; IV – 4

C) I – 3; II – 4; III – 1; IV – 2

D) I – 4; II – 3; III – 2; IV – 1

67. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன – 1. மக்கள் வடுப்படுவதில்லை

II. மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன – 2. மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை

III. காடுகள் மட்டுமே கொடியவனாய் (கொடி உடையனவாக) – 3. மக்கள் கொடியவராய் இல்லை

IV. வண்டுகள் மட்டுமே கள் (தேன்) உண்ணுகின்றன – 4. மக்கள் கள் உண்பதில்லை

A) I – 2; II – 1; III – 4; IV – 3

**B) I – 1; II – 2; III – 3; IV – 4**

C) I – 3; II – 4; III – 1; IV – 2

D) I – 4; II – 3; III – 2; IV – 1

68. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. மலை மூங்கில் வெறுமையாய் இருக்கின்றது – 1. நாட்டில் வறுமை இருள் இல்லை

II. வயலில் நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன – 2. மக்கள் கண்களில் மருட்சியில்லை

III. நீண்ட மலைகளே இருள் சூழ்ந்தவை – 3. மக்களிடையே வெறுமை இல்லை

IV. இளமான்களின் கண்களே மருள்கின்றன – 4. வேறு போர் இல்லை

A) I – 2; II – 1; III – 4; IV – 3

B) I – 1; II – 2; III – 3; IV – 4

**C) I – 3; II – 4; III – 1; IV – 2**

D) I – 4; II – 3; III – 2; IV – 1

69. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. குளத்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன – 1. வேறு யாரும் அவ்வாறு செய்வதில்லை

II. செவிலித்தாயரே சினங் காட்டுவர் – 2. யாரும் பொருளை மறைப்பதில்லை

III. புலவர் பாட்டில் பொருள் (பொதிந்து) இருக்கின்றது – 3. வேறு யாரும் சினம் கொள்வதில்லை

IV. இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் – 4. மக்கள் நிலை பிறழ்வதில்லை

A) I – 2; II – 1; III – 4; IV – 3

B) I – 1; II – 2; III – 3; IV – 4

C) I – 3; II – 4; III – 1; IV – 2

**D) I – 4; II – 3; III – 2; IV – 1**

70. அவன் நெறியோடு நின்று காவல் காக்கின்றான். தந்தையில்லாதோருக்குத் தந்தையாய் இருக்கின்றான். தாயில்லாதோருக்குத் தாயாய் இருக்கின்றான். மகனில்லாதோருக்கு மகனாக இருக்கின்றான். உலகில் உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருக்கின்றான். விழிபெற்ற பயனாகவும் மெய் பெற்ற அருளாகவும் மொழி பெற்ற பொருளாகவும் புகழ் பெற்ற நூல் போலவும் அவன் திகழ்கிறான்; புகழ் அனைத்திற்கும் தலைவனாகி யாதும் புரிகின்றான் – இந்த கூற்று யாரைப்பற்றியது?

A) இராசராச சோழன்

B) கரிகாலன்

C) கணைக்கால் இரும்பொறை

**D) இரண்டாம் இராசராச சோழன்**

71. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராசராசன் காலத் தமிழ் கல்வெட்டு, கீழ்க்கண்டவற்றுள் எங்கு உள்ளது?

A) கீழடி

B) மதுரை திருமலை நாயக்கர் மகால்

**C) பெரிய கோயில், தஞ்சாவூர்**

D) இவற்றில் ஏதுமில்லை

72. இந்திரன் முதலாகத் திசைபாலகர் ________________ பேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் ________________.

**A) எட்டு, சோழன்**

B) ஒன்பது, பாண்டியன்

C) பத்து, பல்லவ மன்னன்

D) ஆறு, சேரன்

73. சிலப்பதிகாரம் நூலின் ஆசிரியர் யார்?

A) ஒட்டக்கூத்தர்

B) சேக்கிழார்

**C) இளங்கோவடிகள்**

D) கம்பர்

74. இன்று 'எங்கும் வணிகம் எதிலும் வணிகம்'! பொருள்களை உற்பத்தி செய்வதைவிட சந்தைப்படுத்துவதில்தான் உலக நாடுகளும் தொழில் முனைவோரும் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். இன்று நேற்றல்ல; பண்டைக் காலந்தொட்டே வாணிகமும் தொழிலும் ஒழுங்கு முறையுடன் சிறந்திருந்ததை இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன! அவற்றுள் ஒன்றே ________________.

A) கடைதெருக் காட்சி

B) வணிகம்பூர் காட்சி

**C) மருவூர்ப்பாக்கக் காட்சி**

D) இவற்றில் ஏதுமில்லை

75. வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும் பூவும் புகையும் மேவிய விரையும் பகர்வனர் திரிதரு நகர வீதியும்; பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்; தூசும் துகிரும் ஆரமும் அகிலும் மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும் அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும் – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) ஒட்டக்கூத்தர்

B) சேக்கிழார்

C) கம்பர்

**D) இளங்கோவடிகள்**

76. பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு கூலம் குவித்த கூல வீதியும்; காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர், மீன்விலைப் பரதவர், வெள்உப்புப் பகருநர், பாசவர், வாசவர், பல்நிண விலைஞரோடு ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்; கஞ்ச காரரும் செம்புசெய் குநரும் மரம்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும் – இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) சிலப்பதிகாரம்**

B) பெரிய புராணம்

C) நாலடியார்

D) கலிங்கத்துப்பரணி

77. கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும் பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும் துன்ன காரரும் தோலின் துன்னரும் கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப் பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்; குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும் வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும் அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்; சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும் – இந்தப் பாடல் வரியுடன் தொடர்புடைய காதை எது?

A) வழக்குரை காதை

**B) இந்திரவிழா ஊரெடுத்த காதை**

C) வரம் தரு காதை

D) ஊர்காண் காதை

78. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. சுண்ணம் – நறுமணப்பொடி

II. காருகர் – நெய்பவர் (சாலியர்)

III. தூசு – பட்டு

IV. துகிர் – பவளம்

V. வெறுக்கை – செல்வம்

A) I, II, III மட்டும் சரி

B) I, II, III, IV மட்டும் சரி

**C) I, II, III, IV, V அனைத்தும் சரி**

D) I, II, V மட்டும் சரி

79. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. பாசவர் – வெற்றிலை விற்போர்

II. ஓசுநர் – எண்ணெய் விற்போர்

III. மண்ணுள் வினைஞர் – ஓவியர்

IV. மண்ணீட்டாளர் – சிற்பி

V. கிழி – துணி

VI. நொடை – விலை

**A) I, II, III, IV, V, VI அனைத்தும் சரி**

B) I, II, III, IV மட்டும் சரி

C) I, II, III, IV, V மட்டும் சரி

D) I, II, V, VI மட்டும் சரி

80. ________________ நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைப்பொருள்கள், அகில் முதலான மணப்பொருள்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்து கொண்டிருக்கின்றனர்.

A) மதுரை

**B) புகார்**

C) தஞ்சை

D) அயோத்தி

81. சரியாகப் பொருந்தியது எது?

I. கள் விற்கும் – 1. உமணர்

II. மீன் விற்கும் – 2. வலைச்சியர்

III. வெண்மையான உப்பு விற்கும் – 3. பரதவர்

IV. எண்ணெய் விற்போர் – 4. ஓசுநர்

**A) I – 2; II – 3; III – 1; IV – 4**

B) I – 4; II – 3; III – 2; IV – 1

C) I – 3; II – 4; III – 1; IV – 2

D) I – 1; II – 2; III – 3; IV – 4

82. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, ___________, ___________, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும் ________________ இருப்பிடங்களும் புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் உள்ளன.

A) சாகி, விது, வலைச்சியர்

B) வினி, யோகி, உமணர்

C) தவ, யாழி, செறுநர்

**D) இளி, விளரி, பாணர்கள்**

83. புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் ________________ வகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

**A) எட்டு**

B) ஏழு

C) ஆறு

D) ஐந்து

84. இலக்கணக் குறிப்பு தருக? வண்ணமும் சுண்ணமும்

A) உவமைத் தொகை

**B) எண்ணும்மை**

C) முற்றும்மை

D) உம்மைத்தொகை

85. இலக்கணக் குறிப்பு தருக? பயில்தொழில்

A) உவமைத் தொகை

B) எண்ணும்மை

**C) வினைத்தொகை**

D) உம்மைத்தொகை

86. பகுபத உறுப்பிலக்கணம் – சரியானது எது?

I. மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ

II. மயங்கு – பகுதி

III. இ(ன்) – இறந்தகால இடைநிலை; 'ன்' புணர்ந்து கெட்டது;

IV. ய் – உடம்படுமெய்; அ – பெயரெச்ச விகுதி;

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

87. "சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான் கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான் திளையாத குண்டலகே சிக்கும்" – ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு. இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

**A) திருத்தணிகையுலா, கந்தப்ப தேசிகர் (19 ஆம் நூற்றாண்டு)**

B) நல்லூர்ப் புராணம், வைத்திய நாத தேசிகர்

C) பிரயோக விவேகம், சுப்பிரமணிய தீட்சிதர்

D) இவற்றில் ஏதுமில்லை

88. பெருங்குணத்துக் காதலாள் நடந்த பெருவழி – பற்றிய சரியான கூற்று எது?

I. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியும் கோவலனும் உறையூர் மற்றும் திருவரங்கம் வழியாகக் கொடும்பாளூர் என்னும் இடத்தை அடைந்தனர். தென்னவன் சிறுமலையின் வலப்பக்கம் வழியாகச் சென்றால் மதுரையை அடையலாம்.

II. சிறுமலையின் இடப்பக்க வழியாகச் சென்றால் திருமால் குன்றம் (அழகர் மலை) வழியாக மதுரை செல்லலாம். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழியில், சோலைகள் மிகுந்த ஊர்களும் காடுகளும் உள்ளன.

III. அவ்வழியாகச் சென்றால் மூன்று வழிகளும் சந்திக்கும் மதுரைப் பெருவழியை அடைந்து, மதுரை செல்லலாம். கோவலனையும் கண்ணகியையும் கவுந்தியடிகள் இடைப்பட்ட வழியிலேயே அழைத்துச் சென்றார்.

IV. மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாக நெடுவேள் குன்றம் (சுருளி மலை) சென்று வேங்கைக் கானல் என்னுமிடத்தை அடைந்தாள்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

89. உரைப்பாட்டு மடை (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்). உரைப்பாட்டு மடை என்பது ________________ நூலில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம், இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

A) பெரிய புராணம்

B) திருக்குறள்

**C) சிலப்பதிகாரம்**

D) மணிமேகலை

90. சிலப்பதிகாரத்தில் ________________ காண்டத்தில் இந்திரவிழா ஊரெடுத்த காதை உள்ளது.

A) மதுரை காண்டம்

**B) புகார் காண்டம்**

C) வஞ்சிக் காண்டம்

D) யுத்த காண்டம்

91. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது. ________________ பற்றிய செய்திகளைக் கூறுகிறது. இது புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களையும், ________________ காதைகளையும் உடையது; கோவலன், கண்ணகி, மாதவி வாழ்க்கையைப் பாடுவது. ________________ காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால் இவையிரண்டும் இரட்டைக்காப்பியங்கள் எனவும் அழைக்கப்பெறுகின்றன.

**A) மூவேந்தர், முப்பது, மணிமேகலை**

B) தேவர்கள், ஐம்பது, வளையாபதி

C) முனிவர்கள், நூறு, குண்டலகேசி

D) இயற்கை, அறுபது, கலிங்கத்துப்பரணி

92. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள். ________________ மரபைச் சேர்ந்தவர். மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார், ________________ கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றதால் இளங்கோவடிகளும் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என இக்காப்பியம் படைத்தார் என்பர்.

A) சோழ, மாதவி

**B) சேர, கோவலன் கண்ணகி**

C) பாண்டிய, ஆதிரை

D) பல்லவ, கவுந்தியடிகள்

93. தமிழரின் பெருமையை உலக அரங்கான ஐ.நா. அவையில் பரப்பும் வகையில் அங்குத் தமிழ்நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர், 'காற்றினிலே வரும் கீதமாய்' மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றவர். இசைப்பேரரசி என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்டவர் யார்?

**A) எம். எஸ். சுப்புலட்சுமி**

B) சித்ரா

C) லதா மங்கேஷ்கர்

D) ஜானகி

94. பொது வெளியில் ஆடுவது தண்டனைக்குரிய குற்றம் எனும் சட்டம் இயற்றப்பட்டிருந்த காலத்தில் நடன வாழ்வைத் தொடங்கியவர்; நாட்டியம் ஆடுவது கீழ்மையானது என்ற எண்ணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பரவலாக இருந்து வந்த நிலையை மாற்றியவர்; இவர் இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றவர்; இவர் யார்?

A) பத்மினி

**B) பாலசரசுவதி**

C) மோகனாம்பாள்

D) ராஜலட்சுமி

95. தமிழில் எழுதிய பெண்களில் முதன்முதலில் களத்திற்குச் சென்று மக்களிடம் செய்திகளைத் திரட்டிக் கதைகள் எழுதியவர்; புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், குறுநாவல், குழந்தை இலக்கியம், வரலாற்று நூல் என எழுத்துலகின் எல்லாத் தளங்களிலும் தடம் பதித்தவர்; வேருக்கு நீர் என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர். இவர் யார்?

A) அநுத்தமா

B) முத்துலட்சுமி ரெட்டி

**C) ராஜம் கிருஷ்ணன்**

D) கிருத்திகா

96. மதுரையின் முதல் பட்டதாரிப் பெண்; இந்திய அரசின் தாமரைத்திரு விருது, சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது எனப் பல உயரிய விருதுகளைப் பெற்றுப் பெண்குலத்திற்குப் பெருமை சேர்த்தவர் – இவர் யார்?

A) அநுத்தமா

B) முத்துலட்சுமி ரெட்டி

C) விஜயதாரணி

**D) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

97. நம் இந்திய நாட்டு நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு. வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றதோடு தமிழக அரசின் "ஔவை விருதையும்" தூர்தர்ஷனின் "பொதிகை விருதையும்" பெற்றுள்ளார். அண்மையில் "தாமரைத்திரு விருதையும்" பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார் – இவர் யார்?

**A) சின்னப்பிள்ளை**

B) எம். சாரதா மேனன்

C) சாந்தி ரங்கநாதன்

D) திருமதி. ஒய். ஜி. பார்த்தசாரதி

98. நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள் என்றவர் ________________?

A) பாரதியார்

B) கம்பர்

**C) இளங்கோவடிகள்**

D) உமறுப்புலவர்

99. கண்ணகியும் கோவலனும் சென்று அடைந்த ஊர் ________________?

A) காவிரிப்பூம்பட்டினம்

B) திருவரங்கம்

C) உறையூர்

**D) கொடும்பாளூர்**

100. அழகர் மலை என்பது ________________?

A) திருவரங்கம்

**B) திருமால்குன்றம்**

C) திருப்பரங்குன்றம்

D) குன்றக்குடி

101. கோவலனையும் கண்ணகியையும் அழைத்துச் சென்றவர் ________________?

**A) கவுந்தியடிகள்**

B) மாதரி

C) மாதவி

D) ஆதிரை

102. பெருங்குணத்துக் காதலாள் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

**A) கண்ணகி**

B) மாதவி

C) ஆதிரை

D) மணிமேகலை

103. எம்.எஸ்.சுப்புலட்சுமி – என்பதன் விரிவாக்கம்?

**A) மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி**

B) மன்னார்குடி சண்முகி சுப்புலட்சுமி

C) மதுரை சந்தியா சுப்புலட்சுமி

D) மதுரை செல்லம்மாள் சுப்புலட்சுமி

104. நான் இசைச் சூழலில் வளர்ந்தேன். வீணைக் கலைஞரான என் தாயே எனக்கு முதல் குரு. பத்து வயதில் இசைத்தட்டுக்காகப் பாடலைப் பாடிப் பதிவு செய்தேன். இசை மேதைகளின் வழிகாட்டுதல்களில் என்னை வளர்த்துக்கொண்டேன் – இந்த கூற்றுடன் தொடர்புடையவர் யார்?

A) லதா மங்கேஷ்கர்

B) சித்ரா

**C) எம். எஸ். சுப்புலட்சுமி**

D) ஜானகி

105. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களுக்கு ________________ வகுப்பு வரைதான் கல்வி பயிலும் வாய்ப்புக் கிட்டியது.

A) பன்னிரண்டாம்

B) பத்தாம்

C) எட்டாம்

**D) ஐந்தாம்**

106. ________________ வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பாராட்டைப் பெற்றார், எம்.எஸ்.சுப்புலட்சுமி.

**A) பதினேழு**

B) பதினைந்து

C) பன்னிரண்டு

D) பத்து

107. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களுக்கு திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பு தேடி வந்தது. அவருக்கு ________________ திரைப்படம் மிகப்பெரிய வெற்றியைத் தந்தது. அதுவே அவரது கடைசித் திரைப்படமாகவும் அமைந்தது.

A) பராசக்தி

**B) மீரா**

C) சரஸ்வதி சபதம்

D) இவற்றில் ஏதுமில்லை

108. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் தில்லியில் யாரைச் சந்தித்தபோது, 'இரகுபதி இராகவ இராஜாராம்' என்ற பாடலைப் பாடினார்?

A) பெரியார்

B) நேரு

**C) காந்தியடிகள்**

D) அம்பேத்கர்

109. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களிடம், மீரா எழுதிய பாடல் ஒன்றைக் குறிப்பிட்டுப் பாடச் சொன்னவர் யார்?

A) பெரியார்

B) நேரு

C) அம்பேத்கர்

**D) காந்தியடிகள்**

110. ________________ வானொலி, _______________ இல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று, சிறிது நாள்களில் முனைந்து கற்று எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் பாடிய, 'ஹரி தும் ஹரோ' என்னும் மீரா பஜன் பாடலை ஒலிபரப்பியது.

**A) சென்னை, 1947**

B) தில்லி, 1946

C) கல்கத்தா, 1945

D) குஜராத், 1944

111. ________________ இல் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் ________________ விருது பெற்றபோது, அவரைத் தொட்டுத் தடவிப் பாராட்டிய பார்வையிழந்த ஹெலன் கெல்லரை அவரால் மறக்கமுடியவில்லை.

A) 1952, நோபல்

**B) 1954, தாமரையணி**

C) 1956, பாரத ரத்னா

D) 1958, பத்ம ஸ்ரீ

112. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் ________________ இல் இங்கிலாந்திலும் ________________ இல் ஐ.நா.அவையிலும் பாடியுள்ளார். இதே ஆண்டில் இவரின் குரலில் பதிவு செய்யப்பட்ட வெங்கடேச சுப்ரபாதம் திருப்பதியில் ஒலிக்கத்தொடங்கியது.

A) 1961, 1964

B) 1962, 1965

**C) 1963, 1966**

D) 1964, 1967

113. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் ________________ இல் நோபல் பரிசுக்கு இணையான ________________ விருது பெற்றார். இவரின் இசைக்குக் கிடைத்த மகுடம் அது. இவ்விருது பெறும் முதல் இசைக் கலைஞரும் இவரே.

A) 1971, அமெரிக்க அதிபர்

B) 1973, ஆஸ்கர்

C) 1975, மேன் புக்கர்

**D) 1974, மகசேசே**

114. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் பற்றிய சரியான கூற்று எது?

I. தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் கூடப் பாடியுள்ளார்.

II. இந்தியா, மிக உயரிய விருதான 'இந்திய மாமணி' விருதளித்து எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களைச் சிறப்பித்துள்ளது.

III. என்னுடைய பல இசைக் கச்சேரிகள் ஏதாவது ஒரு அமைப்பின் நன்கொடைக்காக நடந்தவை என்பது எனக்குப் பெரும் மகிழ்வை அளிக்கிறது. ஒரு பெண் நினைத்தால், முயன்றால், முன்னேறலாம், வெல்லலாம். நீங்களும் முயலுங்கள்; முன்னேறுங்கள்; வெல்லுங்கள்.

IV. குறையொன்று மில்லை மறை மூர்த்தி கண்ணா குறையொன்று மில்லை கோவிந்தா – இந்த பாடல் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் பாடிய பாடல்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

115. இந்தியா முழுவதிலும் உள்ள பலரின் பாராட்டுகளையும் பெற்றேன். காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன் முதலிய பாடல்களுக்கு மிகப்பெரிய வரவேற்புக் கிடைத்தது. ஜவகர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்ற பெரியோர் பாராட்டியதைப் பெருமையாகக் கருதுகிறேன் – என்று கூறியவர் யார்?

A) லதா மங்கேஷ்கர்

B) சித்ரா

**C) எம். எஸ். சுப்புலட்சுமி**

D) ஜானகி

116. பாலசரசுவதி அவர்கள் ________________ வயதாக இருக்கும்போது ________________ பரதநாட்டிய அரங்கேற்றத்திற்காக முதன்முதலில் மேடை ஏறினார்கள்.

A) பத்து, மதுரையில்

B) எட்டு, சென்னையில்

C) ஆறு, தஞ்சாவூரில்

**D) ஏழு, காஞ்சிபுரத்தில்**

117. பாலசரசுவதி அவர்களின் ________________ ஆம் வயதில் சென்னையில் உள்ள சங்கீத சமாஜம் என்னும் அரங்கில் நடன நிகழ்ச்சி நடந்தது. இவரின் நடனத்தைப் பார்த்த பிறகே மரபுசார் நாட்டியத்தைப் பலரும் தீவிரமாக வரவேற்கத் தொடங்கினர்.

**A) பதினைந்து**

B) பதினாறு

C) பதினேழு

D) பதினெட்டு

118. சென்னையில் பாலசரசுவதி அவர்களின் நாட்டியக் கச்சேரியைப் பார்த்த ________________ அவர்கள் மிகவும் பாராட்டினார். அவரது தம்பியின் மூலமாக வட இந்தியாவின் பல இடங்களில் நடனமாடும் வாய்ப்பு பாலசரசுவதி அவர்களுக்கு கிடைத்தது.

A) பங்கிம் சந்த்ர சட்டர்ஜி

**B) பண்டிட் இரவிசங்கர்**

C) அம்பேத்கர்

D) இரவீந்திரநாத் தாகூர்

119. பாலசரசுவதி அவர்கள் கல்கத்தாவிலும் காசியில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டிலும் ________________ யில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கண்காட்சியிலும் நம் நாட்டுப் பண்ணாகிய "ஜன கண மன" பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு ஆடினார்கள். நாட்டுப்பண்ணுக்கு நடனமாடியது அதுவே முதலும் இறுதியுமாகும்.

A) பஞ்சாப்

B) பனராசு (பனாரஸ்)

**C) சென்னை**

D) மும்பை

120. பாலசரசுவதி அவர்கள் ஐரோப்பா, ________________ முதலிய வெளிநாடுகளிலும் நடன நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். ________________ –ல் உள்ள 'கிழக்கு மேற்குச் சந்திப்பு' நிகழ்வில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டு சிறப்பாக நடனம் ஆடியுள்ளார். இந்நிகழ்வு பரதநாட்டியத்திற்கு உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. பரதநாட்டியக் கலையை முறையாக அணுகினால் ஆன்மிகப் பட்டறிவை நடனத்தால் வழங்க முடியும். இதை பாலசரசுவதி அவர்கள் உணர்ந்து உலகிற்கும் உணர்த்தியுள்ளார்.

A) ஆஸ்திரேலியா, சிட்னி

B) தென் கொரியா, சியோல்

C) மேற்கு இந்திய தீவுகள், கேப்டவுன்

**D) அமெரிக்கா, டோக்கியோ**

121. தமிழகத்தில் ஒரு காலத்தில் புறக்கணிக்கப்பட்ட கலைக்கு இந்திய அரங்கிலும் உலக அரங்கிலும் மதிப்பையும் ஏற்பையும் பெற்றுத் தந்தவர்; தமிழகத்தின் பெருமைக்குரிய கலைகளில் ஒன்றாகச் செவ்வியல் நடனம் திகழக் காரணமானவர் – இந்த கூற்று யாரைப்பற்றியது?

**A) பாலசரசுவதி**

B) பத்மினி

C) சரோஜா தேவி

D) மோகனாம்பாள்

122. பெண்கள் என்றால் குடும்பக்கதை எழுதவேண்டும் என்ற படிமத்தை உடைத்துச் சமூகச் சிக்கல்களைக் கதைகளாக எழுதியவர். இவர் கற்பனையாக எழுத விரும்பவில்லை. சமூகத்தில் இடர்ப்பட்ட மக்களைப் பற்றி எழுதும் முன்பு அந்த மக்கள் வாழும் பகுதிக்குள் சென்று களப்பணியாற்றிக் கதைகளாக உருவாக்கியவர் – இந்த கூற்று யாரைப்பற்றியது?

A) அநுத்தமா

**B) ராஜம் கிருஷ்ணன்**

C) லட்சுமி ஹோம்ஸ்ட்ராம்

D) குட்டி ரேவதி

123. கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது? இவர் எழுதிய 'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி' என்னும் பாரதியின் வரலாற்றுப் புதினம் அனைவராலும் பாராட்டப் பெற்ற ஒன்றாகும். தூத்துக்குடியில் பல மாதம் தங்கியிருந்து உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைக் "கரிப்பு மணிகள்" புதினமாக ஆக்கினார்.

A) சுஜாதா

B) சி.சு.செல்லப்பா

**C) ராஜம் கிருஷ்ணன்**

D) கி. வீரமணி

124. நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடிக் கற்றேன். கல்லூரிப் பருவத்தில் காந்தியச் சிந்தனையில் கவரப்பட்டேன். அவரது சர்வோதய இயக்கத்தில் களப்பணி ஆற்றினேன். ஒத்துழையாமை

இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றேன். நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து "பூதான" இயக்கத்தில் பணிபுரிந்தேன். நான் காந்தியடிகளுடனும், வினோபா பாவேயுடனும் பணியாற்றியுள்ளேன் – இந்த கூற்று யாருடையது?

A) அம்புஜத்தம்மாள்

B) கடலூர் அஞ்சலையம்மாள்

C) தில்லையாடி வள்ளியம்மை

**D) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

125. "உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" (LAND FOR THE TILLER'S FREEDOM – LAFTI) தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர் யார்?

**A) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

B) தாளமுத்து நடராசன்

C) வே.ஆனைமுத்து

D) பசும்பொன் முத்துராமலிங்கம்

126. "உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்" – என்று கூறியவர் யார்?

A) பெரியார்

**B) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

C) விவேகானந்தர்

D) காமராஜர்

127. ராஜம் கிருஷ்ணன் – அவர்களின் புதினங்கள். சரியாகப் பொருந்தியவை எவை?

I. அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவது – "குறிஞ்சித்தேன்"

II. கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்கள் – "கரிப்பு மணிகள்"

III. நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் – 3. "சேற்றில் மனிதர்கள்", "வேருக்கு நீர்"

IV. தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கை – 4. "அலைவாய்க் கரையில்"

A) I – 2; II – 1; III – 4; IV – 3

B) I – 1; II – 2; III – 3; IV – 4

**C) I – 3; II – 4; III – 1; IV – 2**

D) I – 4; II – 3; III – 2; IV – 1

128. உங்களைப் போன்ற குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலில் முடக்கி, தீக்குச்சிகளை அந்தப் பெட்டியில் அடைப்பதைப் போன்று, குழந்தைகளின் உடலையும் மனத்தையும் நொறுக்கும் அவல உலகைக் "கூட்டுக் குஞ்சுகள்" புதினமாக அளித்தேன். கூட்டுக் குஞ்சுகள் என்ற புதினத்தின் ஆசிரியர் யார்?

A) பூமணி

B) சுஜாதா

C) சி.சு. செல்லப்பா

**D) ராஜம் கிருஷ்ணன்**

129. பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியதே "மண்ணகத்துப் பூந்துளிகள்". இப்படிச் சமூக அவலங்களை உற்று நோக்கி எழுத்தின் வழியாகக் கட்டவிழ்த்து உலகிற்குக் காட்டியிருக்கிறேன். எழுத்துகளில் நேர்மையான சினம், அறச் சீற்றம் இருக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள். இந்த கூற்று யாருடையது?

**A) ராஜம் கிருஷ்ணன்**

B) சுஜாதா

C) சி.சு. செல்லப்பா

D) பூமணி

130. முதல்ல பெண்கள் எல்லாம் குழுவாச் சேர்ந்தோம். விவசாய நிலத்தக் குத்தகைக்கு எடுத்தோம். கூலி வேலைக்கு ஆளுகளைச் சேர்த்து, நடவு, களையெடுப்பு, அறுவடை போன்ற வேலைகளைச் செய்தோம். வர்ற கூலிய சரிசமமா பிரிச்சுக்கொடுத்தோம். இதுல வயசானவங்களையும் மாற்றுத் திறனாளிகளையும் சேர்த்து வேலை கொடுத்து அவங்க குடும்பத்துக்கும் உதவியா இருந்தோம். இதைப்பத்திக் கேள்விப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சியர் கண்மாய்ல மீன் பிடிக்கிற குத்தகைய எங்களுக்குக் கொடுத்தாரு – இந்த கூற்றுடன் தொடர்புடையவர் யார்?

A) மாதங்கி ராமகிருஷ்ணன்

**B) சின்னப் பிள்ளை**

C) வி. சாந்தா

D) விஜயதாரணி

131. காசு சேர்த்துக் குழு ஒண்ணு ஆரம்பிச்சு "களஞ்சியம்" னு பேர் வெச்சோம். பத்துப் பேரோட ஆரம்பிச்ச மகளிர் குழு இன்னக்கிப் பல மாநிலங்களுக்குப் போய் பல லட்சம் பேரோட வேலை செய்யுது. பொறப்புக்கு ஒரு பொருள் கிடைக்கிற மாதிரி வேலை செஞ்சாச்சு – இந்த கூற்றுடன் தொடர்புடையவர் யார்?

A) மாதங்கி ராமகிருஷ்ணன்

B) வி. சாந்தா

**C) சின்னப் பிள்ளை**

D) விஜயதாரணி

132. சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. எம்.எஸ்.சுப்புலட்சுமி – 1. மகசேசே விருது, தாமரையணி விருது, இந்திய மாமணி விருது

II. பாலசரசுவதி – 2. தாமரைத்திரு விருது, வாழ்வுரிமை விருது, காந்தி அமைதி விருது

III. ராஜம் கிருஷ்ணன் – 3. சாகித்திய அகாதெமி விருது

IV. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் – 4. தாமரைச் செவ்வணி விருது

V. சின்னப் பிள்ளை – 5. பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்), ஔவை விருது

A) I – 2; II – 1; III – 4; IV – 3; V – 5

B) I – 5; II – 4; III – 3; IV – 2; V – 1

**C) I – 1; II – 4; III – 3; IV – 2; V – 5**

D) I – 4; II – 3; III – 5; IV – 1; V – 2

133. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் – அவர்களுக்கு 'வாழ்வுரிமை விருது' வழங்கிய நாடு எது?

**A) சுவீடன் அரசு**

B) சுவிட்சர்லாந்து

C) அமெரிக்கா

D) இங்கிலாந்து

134. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் – அவர்களுக்கு 'காந்தி அமைதி விருது' வழங்கிய நாடு எது?

A) சுவீடன் அரசு

B) இங்கிலாந்து

C) அமெரிக்கா

**D) சுவிட்சர்லாந்து**

135. கீழ்க்கண்டவர்களுள், பூதான இயக்கத்தில் பணிபுரிந்தவர் யார்?

A) சின்னப்பிள்ளை

B) ராஜம் கிருஷ்ணன்

**C) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

D) பாலசரசுவதி

136. கீழ்க்கண்டவர்களுள், 'களஞ்சியம் மகளிர் குழுவை' தொடங்கியவர் யார்?

**A) சின்னப்பிள்ளை**

B) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

C) ராஜம் கிருஷ்ணன்

D) பாலசரசுவதி

137. கீழ்க்கண்டவர்களுள், "உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" தொடங்கியவர் யார்?

A) சின்னப்பிள்ளை

**B) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

C) ராஜம் கிருஷ்ணன்

D) பாலசரசுவதி

138. புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள், வெட்சி முதலாகப் ________________ வகைப்படும்.

A) ஐந்து

B) பத்து

**C) பன்னிரண்டு**

D) பதினைந்து

139. மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளைச் (மாடுகளை) சொத்தாகக் கருதினர். ஒரு குழுவினரிடமிருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது. ஆநிரைகளைக் கவர்ந்துவர ________________ பூவினைச் சூடிக்கொண்டு செல்வர்.

**A) வெட்சி**

B) காஞ்சி

C) வஞ்சி

D) நொச்சி

140. கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மக்கள் மீட்கச் செல்வர். அப்போது ________________ பூவைச் சூடிக்கொள்வர்.

A) வெட்சி

B) காஞ்சி

**C) கரந்தை**

D) நொச்சி

141. மண் (நாடு) சொத்தாக மாறிய காலத்தில் மண்ணைக் கவர்தல் போராயிற்று. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி ________________ பூவைச் சூடிப் போருக்குச் செல்வர்.

A) வெட்சி

B) காஞ்சி

C) கரந்தை

**D) வஞ்சி**

142. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, ________________ பூவைச் சூடி எதிர்த்துப் போரிடுவர்.

A) வெட்சி

**B) காஞ்சி**

C) கரந்தை

D) வஞ்சி

143. மண்ணைக் காக்கக் கோட்டைகள் கட்டப்பட்டன. கோட்டையைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு ________________ பூவைச் சூடிப் போரிடுவர்.

**A) நொச்சி**

B) காஞ்சி

C) கரந்தை

D) வஞ்சி

144. மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற ________________ பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைப்பர்.

A) வெட்சி

**B) உழிஞை**

C) கரந்தை

D) வஞ்சி

145. பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் ________________ பூவைச் சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவர். போரிடுகின்ற அரசர்கள் இருவரும் ________________ பூ மாலையையே சூடியிருப்பார்கள். போர்த்திணைகள் படிப்படியாக வளர்ந்த நிலையில், போரைத் தொடங்கும் நிகழ்வாக ஆநிரை கவர்தல் மேற்கொள்ளப்பட்டது.

A) வெட்சி, வெட்சி

**B) தும்பை, தும்பை**

C) கரந்தை, கரந்தை

D) வஞ்சி, வஞ்சி

146. போரிலே வெற்றிபெற்ற மன்னன் ________________ பூச் சூடி மகிழ்வர். ________________ என்றாலே வெற்றி என்று பொருள்.

A) வெட்சி, வெட்சி

B) தும்பை, தும்பை

**C) வாகை, வாகை**

D) வஞ்சி, வஞ்சி

147. பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, ________________ திணை. போரை மட்டும் சொல்லாது பிற மாண்புகளையும் பாடுகிறது இத்திணை.

A) பெருந்திணை

B) கைக்கிளை

C) பொதுவியல்

**D) பாடாண் (பாடு + ஆண் + திணை = பாடாண்திணை)**

148. வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது ________________ திணை.

A) பெருந்திணை

B) கைக்கிளை

**C) பொதுவியல்**

D) பாடாண் (பாடு + ஆண் + திணை = பாடாண்திணை)

149. அழகுச்செடியாக வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கப்படுகிற சிவந்த நிறமுடைய பூ ________________?

A) செவ்வந்தி

B) தும்பை

C) கரந்தை

**D) வெட்சி**

150. இட்லிப்பூ என்று அழைக்கப்படுகிற, பூ எது?

A) செவ்வந்தி

**B) வெட்சி**

C) கரந்தை

D) தும்பை

151. சிறிய முட்டை வடிவில் கொத்தாகப் பூக்கக் கூடிய ________________ ஒரு சிறிய செடி. நறுமணம் மிக்க இது செம்மை, நீலம், இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதனைக் '________________' என்றும் கூறுவர்.

**A) கரந்தை, கொட்டைக் கரந்தை**

B) வெட்சி, கழி வெட்சி

C) தும்பை, வெண் தும்பை

D) வாகை, கனி வாகை

152. பளபளப்பான, மெல்லிய பூவின் இதழ்களில் வெள்ளிய பஞ்சு போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது ________________.

**A) வஞ்சி**

B) தும்பை

C) கரந்தை

D) வெட்சி

153. கொத்துக் கொத்தாகப் பூக்கும் நீலநிற மலர்கள் கொண்ட அழகான மணமுள்ள ________________ என்பது ஒருவகைக் குறுமரம்.

A) வஞ்சி

**B) காஞ்சி**

C) கரந்தை

D) வெட்சி

154. மருத நிலத்துக்குரிய ________________, கொத்துக் கொத்தான நீலநிறப் பூக்கள் கொண்டது.

A) வஞ்சி

B) காஞ்சி

C) கரந்தை

**D) நொட்சி**

155. வேலிகளில் ஏறிப்படரும் நீண்ட கொடியே ________________ கொடி. இதன் கூட்டிலைகளும் மலர்களும் சிறியவை; மலர்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனை முடக்கத்தான் (முடக்கொற்றான்) எனக் கூறுகின்றனர்.

A) வஞ்சி

**B) உழிஞை**

C) கரந்தை

D) நொட்சி

156. எல்லா இடங்களிலும் வளரக் கூடிய தூய வெண்ணிற மலர்களைக் கொண்ட சிறிய செடி ________________?

A) வஞ்சி

B) உழிஞை

C) கரந்தை

**D) தும்பை**

157. மங்கிய வெண்ணிற நறுமணம் கொண்ட கொத்துக் கொத்தாக மலரும் ________________ பூ.

**A) வாகை**

B) உழிஞை

C) கரந்தை

D) தும்பை

158. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. கைக்கிளை என்பது ஒருதலைக் காமம்.

II. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.

III. மருத நிலத்துக்குரிய நொச்சி, கொத்துக் கொத்தான நீலநிறப் பூக்கள் கொண்டது. இதில் மணிநொச்சி, கருநொச்சி, மலைநொச்சி, வெண்ணொச்சி எனப் பலவகைகள் உள்ளன.

A) I மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II மட்டும் சரி

159. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

A) உழவு, மண், ஏர், மாடு

B) மண், மாடு, ஏர், உழவு

**C) உழவு, ஏர், மண், மாடு**

D) ஏர், உழவு, மாடு, மண்

160. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே –?

**A) திருப்பதியும் திருத்தணியும்**

B) திருத்தணியும் திருப்பதியும்

C) திருப்பதியும் திருச்செந்தூரும்

D) திருப்பரங்குன்றமும் பழனியும்

161. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் –?

A) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்

B) மிகுந்த செல்வம் உடையவர்

C) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்

**D) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

162. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ________________?

A) நாட்டைக் கைப்பற்றல்

B) ஆநிரை கவர்தல்

**C) வலிமையை நிலைநாட்டல்**

D) கோட்டையை முற்றுகையிடல்

163. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ________________?

A) திருக்குறள்

B) புறநானூறு

C) கம்பராமாயணம்

**D) சிலப்பதிகாரம்**

164. பழங்காலத்திலே, பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் – இந்த கூற்று யாருடையது?

A) பாரதியார்

B) பெரியார்

C) அண்ணா

**D) ம.பொ.சி**

165. மெய்க்கீர்த்தி – பற்றிய சரியான கூற்று எது?

I. பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும்.

II. சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

III. சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை.

IV. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியள்ளன.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II மட்டும்சரி

C) II, III மட்டும் சரி

D) I, III, IV மட்டும் சரி

166. ஏர்பிடிக்கும் கைகளுக்கே வாழ்த்துக் கூறுவோம் – வறுமை ஏகும்வரை செய்பவர்க்கே வாழ்த்துக் கூறுவோம்! – என்றும் ஊர்செழிக்கத் தொழில் செய்யும் உழைப்பாளிகள் – வாழ்வு உயரும் வகை செய்பவர்க்கே வாழ்த்துக் கூறுவோம்! – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) ந. காமராசன்

**B) கவி கா.மு ஷெரீப்**

C) ரங்க பாஷ்யம்

D) சிற்பி

167. கலைச்சொல் அறிவோம் – சரியானது எது?

I. Consulate – துணைத்தூதரகம்

II. Patent – காப்புரிமை

III. Document – ஆவணம்

IV. Guild – வணிகக் குழு

V. Irrigation – பாசனம்

VI. Territory – நிலப்பகுதி

A) I, II, IV, V மட்டும் சரி

B) III, IV. V மட்டும் சரி

C) IV, V, VI மட்டும் சரி

**D) I, II, III, IV, V, VI அனைத்தும் சரி**

168. நூல்கள் மற்றும் ஆசிரியர் – சரியானது எது?

I. நாற்காலிக்காரர் – ந. முத்துசாமி

II. வேருக்கு நீர் – ராஜம் கிருஷ்ணன்

III. என் கதை – நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்

IV. அக்னி சிறகுகள் – நேரு

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

## 10th Tamil Questions - Unit 8

1. மன்னன் மக்களுக்குக் கொடை அளிப்பது போன்ற, 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் எங்கு உள்ளது?

A) ஆதிச்சநல்லூர்

B) கீழடி

C) கழுகுமலை

**D) சிதம்பரம்**

2. சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், ________________?

**A) சங்ககாலம்**

B) முகலாயர்கள் காலம்

C) நாயக்கர்களின் காலம்

D) இவற்றில் ஏதுமில்லை

3. சங்க காலத்தில் ________________ மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்.

A) புகழை

**B) அறத்தை**

C) அறிவை

D) செல்வத்தை

4. மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான ________________ மனிதன் ஏற்க வேண்டும்.

A) செல்வத்தை

B) அறிவை

**C) அறத்தை**

D) புகழை

5. சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க கால அறங்கள் இயல்பானவை. 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று திறனாய்வாளர் ________________ கூறுகிறார்.

A) வீரமாமுனிவர்

B) ஜி.யு.போப்

C) கால்டுவெல்

**D) ஆர்னால்டு**

6. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன.

II. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

A) I, II இரண்டுமே தவறு

**B) I, II இரண்டுமே சரி**

C) I மட்டும் சரி

D) II மட்டும் சரி

7. அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை – பற்றிய சரியான கூற்று எது?

I. அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.

II. சங்ககால மக்கள் அறம் செய்து, அதன்மூலம் வணிக நோக்கம் அடைவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

III. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, II, III அனைத்தும் சரி

**D) I, III மட்டும் சரி**

8. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – இந்தப் பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?

**A) புறநானூறு**

B) அகநானூறு

C) நற்றிணை

D) குறுந்தொகை

9. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – எனச் சங்ககால வள்ளல்களில் ஒருவரான ________________ பற்றி _________________ குறிப்பிட்டுள்ளார்.

**A) ஆய், ஏணிச்சேரி முடமோசியார்**

B) விச்சிக்கோ நன்னன், பரணர்

C) தொண்டைமான் இளந்திரையன், சயம் கொண்டார்

D) அதியமான் நெடுமான் அஞ்சி, ஔவையார்

10. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – இப்பாடலில் கூறப்படும் மையக்கருத்து என்ன?

I. வணிகம் செய்வதால் வரும் பயன்

II. வணிகத்தில் அதிக இலாபம் ஈட்டுபவர்க்கு மறுபிறப்பு என்ற ஒன்றில்லை

III. அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை

IV. நோக்கமின்றி அறம்செய்வதே மேன்மை தரும்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) III, IV மட்டும் சரி**

D) I, IV மட்டும் சரி

11. சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் _________________ முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

A) மக்களை

**B) அரசர்களை**

C) புலவர்களை

D) தேவர்களை

12. 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) கலித்தொகை, கபிலர்

B) மதுரைக் காஞ்சி, மாங்குடி மருதனார்

C) அகநானூறு, ஔவையார்

**D) புறநானூறு, மதுரை மருதன் இளநாகனார்**

13. 'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) கலித்தொகை

B) மதுரைக் காஞ்சி

**C) அகநானூறு**

D) புறநானூறு

14. நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார், _________________?

A) உருத்திர சன்மர்

**B) ஊன் பொதிப் பசுங்குடையார்**

C) புகழேந்திப் புலவர்

D) நச்சினார்க்கினியர்

15. அரசன் அறநெறியில் ஆட்சி செய்வதற்கு அமைச்சரும் உதவினர். "நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை" என்கிறது _________________?

**A) மதுரைக்காஞ்சி**

B) குறுந்தொகை

C) கலித்தொகை

D) ஐங்குறுநூறு

16. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை கூறும் நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) கலித்தொகை, கபிலர்

**B) மதுரைக் காஞ்சி, மாங்குடி மருதனார்.**

C) அகநானூறு, ஔவையார்

D) புறநானூறு, மதுரை மருதன் இளநாகனார்

17. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்று _________________ நூல் கூறுகிறது.

**A) புறநானூறு**

B) அகநானூறு

C) கலித்தொகை

D) ஐங்குறுநூறு

18. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி _________________ குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

A) பரிபாடல்

B) நற்றிணை

C) பட்டினப்பாலை

**D) மதுரைக்காஞ்சி**

19. தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை _________________ குறிப்பிட்டிருக்கிறார்.

A) ஔவையார்

**B) ஆவூர் மூலங்கிழார்**

C) சயம் கொண்டார்

D) சேக்கிழார்

20. எறியார் எறிதல் யாவணது எறிந்தோர் எதிர்சென்று எறிதலும் செல்லான் – இந்தப் பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) புறநானூறு**

B) அகநானூறு

C) கலித்தொகை

D) ஐங்குறுநூறு

21. வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி. "செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பலவே" – இந்தப் பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் மற்றும் இந்த பாடல்வரிகளில் எதைப்பற்றி குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது?

A) கலித்தொகை, மருதன் இளநாகன், அன்பு

B) ஐங்குறுநூறு, அம்மூவனார், செல்வம்

**C) புறநானூறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், கொடை**

D) அகநானூறு, ஔவையார், போர்

22. கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை ________________ மற்றும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

A) ஐங்குறுநூறு

B) பரிபாடல்

**C) சிறுபாணாற்றுப்படை**

D) நன்னூல்

23. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. ________________ நூல் சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

A) ஐங்குறுநூறு

B) பரிபாடல்

C) சிறுபாணாற்றுப்படை

**D) பதிற்றுப்பத்து**

24. "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டவர் யார்?

A) மருத்துவர்கள்

B) அமைச்சர்கள்

C) புலவர்கள்

**D) வள்ளல்கள்**

25. வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனை ________________ பாராட்டுகிறார்.

A) தொல்காப்பியர்

**B) நக்கீரர்**

C) சீத்தலைச் சாத்தனார்

D) கம்பர்

26. வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று ________________ குறிப்பிடுகிறார்.

**A) பெரும்பதுமனார்**

B) நக்கீரர்

C) ஔவையார்

D) கம்பர்

27. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார், ________________?

A) பெரும்பதுமனார்

B) நக்கீரர்

**C) ஔவையார்**

D) நச்செள்ளையார்

28. இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார், ________________?

A) பெரும்பதுமனார்

B) நக்கீரர்

C) ஔவையார்

**D) நச்செள்ளையார்**

29. பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார், ________________?

**A) பரணர்**

B) நக்கீரர்

C) பெருந்தலைச் சாத்தனார்

D) நச்செள்ளையார்

30. தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாக ________________ குறிப்பிட்டுள்ளார்.

A) பரணர்

B) நக்கீரர்

**C) பெருந்தலைச் சாத்தனார்**

D) கபிலர்

31. எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் ________________ பாராட்டுகிறார்.

A) பரணர்

B) நக்கீரர்

C) பெருந்தலைச் சாத்தனார்

**D) கபிலர்**

32. புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலை விட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் ________________ –இல் கூறப்பட்டுள்ளது.

A) குறுந்தொகை

B) பரிபாடல்

C) ஐங்குறுநூறு

**D) கலித்தொகை**

33. வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் _________________ நூலில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

A) குறுந்தொகை

**B) புறநானூறு**

C) ஐங்குறுநூறு

D) கலித்தொகை

34. பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் '_________________' என்று குறிப்பிடுகிறார்.

A) உதவியர்

B) உதவியாகினான்

C) உதவியல்

**D) உதவியாண்மை**

35. தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் _________________ எண்ணெய்யாக இருக்க முடியும்?

A) அறிவு

**B) தியாகம்**

C) அரவணைப்பு

D) நன்றி

36. "பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்" – என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி குறிப்பிடும் நூல் மற்றும் ஆசிரியர் யார்?

**A) கலித்தொகை, நல்லந்துவனார்**

B) ஐங்குறுநூறு, அம்மூவனார்

C) புறநானூறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

D) அகநானூறு, ஔவையார்

37. "சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே" – ' உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் _________________?

A) கலித்தொகை, நல்லந்துவனார்

B) ஐங்குறுநூறு, அம்மூவனார்

C) புறநானூறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

**D) நற்றிணை, நல்வேட்டனார்**

38. உறவினர் கெட, வாழ்பவனின் பொலிவு அழியும் என்று _________________ குறிப்பிடுகிறார். இதனால்தான் 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்கிறது தமிழ் இலக்கியம்.

A) நல்லாதனார்

**B) பெருங்கடுங்கோ**

C) ஔவையார்

D) முன்றுறை அரையனார்

39. 'நிறைவடைகிறவனே செல்வன்' என்கிறது _________________?

A) எகிப்து நாட்டு நூலகம்

B) தொல்காப்பியம்

**C) சீன நாட்டுத் தாவோயியம்**

D) திருக்குறள்

40. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

II. நாக்கு ஓர் அதிசயத் திறவு கோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

41. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை ________________ நூல் குறிப்பிடுகின்றது; இதற்கு மாறாகப் 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது. வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தழுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. பொய்ச்சான்று கூறாமையும் வலியுறுத்தப்பட்டது.

**A) நற்றிணை**

B) புறநானூறு

C) ஐங்குறுநூறு

D) கலித்தொகை

42. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம்.

II. தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது.

III. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம்.

A) I மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, II மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

43. கி.பி. (பொ.ஆ.) ________________ நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர் பூண்டு சீனாவுக்குச் சென்றார். ________________ சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார். அதிலிருந்து உருவானதே "ஜென்" தத்துவம். இது, பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பரவிச் செழித்து விளங்கியது. போதி தருமருக்குச் சீனர்கள் கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

A) முதலாம், சமண

**B) ஆறாம், பௌத்த**

C) நான்காம், இந்து

D) எட்டாம், யூதம்

44. கொன்றை வேந்தன் என்பது _______________ நூல்.

A) சிற்றிலக்கிய

B) முற்கால அற

C) சங்க இலக்கிய

**D) பிற்கால அற**

45. சங்க காலத்திற்குப் பிந்தையக் காலம் ________________?

**A) அறநெறிக் காலம்**

B) இருண்ட காலம்

C) பக்திக் காலம்

D) பொற் காலம்

46. போதி தருமருக்குச் ________________ கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

A) அரேபியர்கள்

B) எகிப்தியர்கள்

C) அமெரிக்கர்கள்

**D) சீனர்கள்**

47. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியது எது?

I. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் – 1. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

II. இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைப்பவன் – 2. பேகன்

III. மறுமை நோக்கிக் கொடுக்காதவன் – 3. மலையமான் திரு முடிக்காரி

IV. எல்லாவற்றையும் கொடுப்பவன் – 4. அதியன்

A) I – 1; II – 2; III – 3; IV – 4

**B) I – 4; II – 1; III – 2; IV – 3**

C) I – 4; II – 3; III – 2; IV – 1

D) I – 2; II – 4; III – 1; IV – 3

48. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியது எது?

I. வள்ளல் எழுவரின் கொடைப் பெருமை – 1. சிறுபாணாற்றுப்படை, பெருஞ்சித்திரனார்

II. ஆற்றுப்படை இலக்கியங்கள் – 2. கொடை இலக்கியங்கள்

III. சேர அரசர்களின் கொடைப் பதிவு – 3. பதிற்றுப்பத்து

IV. "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" – 4. வள்ளல்கள்

**A) I – 1; II – 2; III – 3; IV – 4**

B) I – 4; II – 1; III – 2; IV – 3

C) I – 4; II – 3; III – 2; IV – 1

D) I – 2; II – 4; III – 1; IV – 3

49. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. இயக்கமே உலகம் நிலைத்திருப்பதற்கான அடிப்படை. இயங்குதலின்றி உலகில்லை, உயர்வில்லை.

II. கடல் அலைகளைப்போல் பணிகளும் ஓய்வதில்லை. அலைகள் ஓய்ந்திடின் கடலுமில்லை.

III. பணிகள் ஓய்ந்திடின் உலகமுமில்லை. தனக்கான பணிகளோ உலகிற்கான பணிகளோ அவை அறம் சார்ந்து வளர வேண்டும்.

A) I மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, III அனைத்தும் சரி**

D) I, II மட்டும் சரி

50. சாளரத்தின் கதவுகள், சட்டம்; காற்றுடைக்கும், தெருப்புழுதி வந்தொட்டும். கரையான் மண் வீடு கட்டும். அன்று துடைத்தேன், சாயம் அடித்தேன், புதுக்கொக்கி பொருத்தினேன். காலக்கழுதை கட்டெறும்பான இன்றும் கையிலே வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை: அறப்பணி ஓய்வதில்லை ஓய்ந்திடில் உலகமில்லை! – இந்த கவிதை வரிகள் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

A) கொடி முல்லை, வாணிதாசன்

B) கொய்யாக் கனி, பெருஞ்சித்திரனார்

C) குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

**D) கோடை வயல் (ஞானம்), தி.சொ.வேணுகோபாலன்**

51. இவர் திருவையாற்றில் பிறந்தவர். மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்; 'எழுத்து' காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர். இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு "மீட்சி விண்ணப்பம்" – இந்த கூற்று யாரைப்பற்றியது?

A) சி.சு.செல்லப்பா

**B) தி.சொ.வேணுகோபாலன்**

C) ந. காமராசன்

D) அழ. வள்ளியப்பா

52. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

I. கவிஞன் என்பவன் யார்? அவன் குணம் என்ன? அவன் பணி என்ன? மனம் என்னும் வயலில், சொல்லேர் உழவனாக, சிந்தனை விதையைத் தூவி, மடமைக் களை பறித்து, தத்துவ நீர் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவன் கவிஞன்.

II. காலத்தைக் கணிப்பதால் காலத்தை வென்றவனாகிறான்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

53. கவிஞன் யானோர் காலக் கணிதம் கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்! புவியில் நானோர் புகழுடைத் தெய்வம் பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்! இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில் இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை! – இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) கண்ணதாசன் கவிதைத் தொகுப்பு (காலக்கணிதம்)**

B) பாரதியார் கவிதைகள்

C) இசையமுது (முதலாம் தொகுதி)

D) நாமக்கல் கவிஞர் பாடல்கள்

54. ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும் அவனும் யானுமே அறிந்தவை; அறிக! செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்; பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்! பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்! ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்! – இந்த பாடல்வரியின் ஆசிரியருடைய இயற்பெயர் என்ன?

A) துரை மாணிக்கம்

B) கண்ணபிரான்

C) பிச்சமுத்து

**D) முத்தையா**

55. உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்; இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன் வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன் வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்! பண்டோர் கம்பன், பாரதி, தாசன் சொல்லா தனசில சொல்லிட முனைவேன் – இந்தப்பாடல் வரியின் ஆசிரியர் பிறந்த ஊர் எது?

A) திருவாரூர் மாவட்டத்தின் மன்னார்குடி

**B) சிவகங்கை மாவட்டத்தின் சிறுகூடல்பட்டி**

C) தேனி மாவட்டத்தின் பட்டிவீரன் பட்டி

D) திண்டுக்கல் மாவட்டத்தின் விருவீடு

56. புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது! வளமார் கவிகள் வாக்குமூலங்கள் இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு! கல்லாய் மரமாய்க் காடுமே டாக மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்! – இந்த பாடல் வரியின் ஆசிரியருடைய பெற்றோர் பெயர் என்ன?

**A) சாத்தப்பன் – விசாலாட்சி**

B) வெங்கட்ராமன் – அம்மணியம்மாள்

C) முருகானந்தம் – சுவர்ணம்மாள்

D) சுப்பையா – செல்லம்மாள்

57. மாற்றம் எனது மானிடத் தத்துவம்; மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்! எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை என்ப தறிந்து ஏகுமென் சாலை! தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்; தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்! – இந்த பாடல் வரியின் ஆசிரியர், கீழ்க்கண்ட எந்த விருதைப் பெற்றுள்ளார்?

A) பாரத ரத்னா

B) பத்ம ஸ்ரீ

**C) சாகித்திய அகாதெமி**

D) நோபல் பரிசு

58. கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க! உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது; நானே தொடக்கம்; நானே முடிவு; நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம் – இந்த பாடல் வரியின் ஆசிரியர், தமிழக அரசின் ________________ ஆக சிறப்பிக்கப்பட்டிருந்தார்.

A) சட்டமன்ற மேலவை உறுப்பினர்

B) சட்டமன்ற கீழவை உறுப்பினர்

C) ஆளுநர்

**D) அரசவைக் கவிஞர்**

59. ________________ ஆம் ஆண்டு "கலங்காதிரு மனமே" என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானார், கண்ணதாசன்.

A) 1945

B) 1947

**C) 1949**

D) 1951

60. கீழ்க்கண்ட கூற்றுகளுள் கண்ணதாசன் அவர்களைப் பற்றிய சரியான கூற்று எது?

I. திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர் கண்ணதாசன். இவர் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர்.

II. தன் திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர்.

III. சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டிருந்தார்.

IV. கண்ணதாசன் அவர்களுக்கு 1960 ஆம் ஆண்டு பத்ம ஸ்ரீ விருது அளித்து இந்திய அரசு கௌரவப்படுத்தியுள்ளது.

A) I, II மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) I, II, III மட்டும் சரி**

61. நதியின் பிழையன்று நறும்புனலின்மை அன்றே பதியின் பிழையன்று பயந்த நம்மைப் புரந்தான் மதியின் பிழையன்று மகன் பிழையன்று மைந்த விதியின் பிழை நீ இதற்கென்னை வெகுண்டதென்றன் – இந்தப் பாடல்வரியின் ஆசிரியர் யார்?

**A) கம்பர்**

B) ஒட்டக்கூத்தர்

C) புகழேந்திப் புலவர்

D) ஔவையார்

62. நதிவெள்ளம் காய்ந்து விட்டால் நதிசெய்த குற்றம் இல்லை விதிசெய்த குற்றம் இன்றி வேறு யாரம்மா – இந்தப் பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) வாணிதாசன்

B) பாரதிதாசன்

**C) கண்ணதாசன்**

D) வாலி

63. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியது எது?

I. நாளுக்கு ஒருமுறை மலர்வது – 1. குறிஞ்சி

II. ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது – 2. சண்பகம்

III. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது – 3. மூங்கில்

IV. தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது – 4. பிரம்ம கமலம்

A) I – 1; II – 2; III – 3; IV – 4

B) I – 4; II – 1; III – 2; IV – 3

C) I – 4; II – 3; III – 2; IV – 1

**D) I – 2; II – 4; III – 1; IV – 3**

64. சுவாமிகள் என்மேல் கோபம் கொள்ளக் கூடாது. தங்கள் விருப்பப்படியே தான் வந்துள்ளேன். தாங்கள் கூறிய தண்டு, கொடிக்கு இணையானவர்கள் இவர்கள். எனவே அடியவர்களாகிய எங்கள்மேல் கோபம் கொள்ளாது பரிவு கொண்டு திருவருள் புரிய வேண்டும், என்று இராமானுசர் கூறினார். இதில் தண்டு, கொடி என குறிப்பிடப்பட்டுள்ளவர் யார்?

A) மக்கள், புலவர்

B) கையில் வைத்திருக்கும் தடி, கொடி

**C) கூரேசர், முதலியாண்டான்**

D) இவர்களில் யாருமில்லை

65. திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச் சொல்லுங்கள் என்னும் செய்தி, யாரால் திருவரங்கத்திற்கு அனுப்பப்பட்டது?

A) சௌம்ய நாராயணன்

**B) பூரணர்**

C) முதலியாண்டான்

D) கூரேசர்

66. புனித திருமந்திரத் திருவருள் வேண்டி இராமானுசர், கூரேசர், முதலியாண்டான் ஆகியோர் எத்தனை முறை சென்றுள்ளனர்?

**A) பதினெட்டு முறை**

B) பதினைந்து முறை

C) இருபது முறை

D) பத்து முறை

67. அடியவர்களே வணக்கம்! (இராமானுசரைப் பார்த்து) தண்டு, கொடியுடன் உங்களை மட்டும் தானே வரச் சொன்னேன்! – என்று கூறியவர் யார்?

A) சௌம்ய நாராயணன்

**B) பூரணர்**

C) முதலியாண்டான்

D) கூரேசர்

68. உடையவர்களே! நான் கூறும் மந்திர மறைபொருள் திருவரங்கனின் திருவருளால் கிடைக்கப் பெற்றது. இது நமது பரம ஆச்சாரியார் ஆளவந்தார் அவர்களால் எனக்கு மட்டுமே கிடைத்த அரிய பொக்கிசம். இதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதை நீங்கள் நாள்தோறும் தியானிப்பதால், பிறவித்தளை நீங்கும். இறைவனடி செல்ல இயலும். இளையாழ்வாரே! இவர்களை நீங்கள் தண்டு, கொடி எனக் கூறியதால் உங்கள் மூவருக்குமாகத் திருமந்திரத்தைக் கூறுகிறேன் – என்ற கூற்று யாருடையது? மற்றும் "இளையாழ்வாரே" – என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது?

A) முதலியாண்டான், கூரேசர்

B) கூரேசர், சௌம்ய நாராயணன்

C) சௌம்ய நாராயணன், முதலியாண்டான்

**D) பூரணர், இராமானுசர்**

69. ஆச்சாரிய நியமத்தை மீறிய பாவிகளாக நீங்கள் மாற மாட்டீர்கள் என்னும் நம்பிக்கையுடன் திருமந்திரத்தைக் கூறுகிறேன் – என்று கூறியவர் யார்?

A) சௌம்ய நாராயணன்

**B) பூரணர்**

C) முதலியாண்டான்

D) கூரேசர்

70. 'திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்' – இந்தத் திருமந்திரத்தை பூரணர் யாரிடம் கூறினார்?

I. முதலியாண்டான்

II. இராமானுசர்

III. சௌம்ய நாராயணன்

IV. கூரேசர்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, IV மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

71. எம் பெருமானே! உங்களுக்கு இருந்த பரந்த அருள் உள்ளம் இதுவரை எனக்கு இல்லாமல் போனதே! நம் பரமாச்சாரியார் ஆளவந்தாரின் திரு உள்ளத்தை அறிந்தவர் தாங்கள் மட்டுமே! இறைவனின் திருவருளை

உலகிற்கு உணர்த்தியவர் தாங்களே! நான் மகிழ்ச்சி பொங்கக் கூறிய 'எம்பெருமான்' என்னும் திருநாமம் என்றென்றும் உமக்கு நிலைத்து, நீங்கள் நீடூழி வாழ வேண்டும் – என்று கூறியவர் யார்?

A) இராமானுசர்

**B) பூரணர்**

C) முதலியாண்டான்

D) கூரேசர்

72. பூரணர் அவர்களின் மகன் பெயர் என்ன?

**A) சௌம்ய நாராயணன்**

B) முதலியாண்டான்

C) கூரேசர்

D) இவற்றில் ஏதுமில்லை

73. சௌம்ய நாராயணன் யாரிடம் அடைக்கலப்படுத்தப்பட்டார்?

**A) இராமானுசர்**

B) முதலியாண்டான்

C) கூரேசர்

D) இவற்றில் ஏதுமில்லை

74. பிறவிப் பிணியைத் தீர்க்கும் அருமருந்து ________________?

**A) திருமந்திரம்**

B) மாந்திரீகம்

C) யோக ஞானம்

D) தீட்சை விதி

75. கூர்வேல் குவைஇய மொய்ம்பின் தேர்வண் பாரிதண் பறம்பு நாடே! (சிவகங்கை மாவட்டத்தின் பிரான் மலை (பறம்பு மலை)) – இப்பாடல் வரி எந்நூலில் இடம்பெற்றுள்ளது?

A) அகநானூறு

**B) புறநானூறு**

C) நற்றிணை

D) கலித்தொகை

76. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்று ஆறு உறுப்புகளைக் கொண்டது யாப்பு.

II. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப் பாக்கள் உள்ளன.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) I, II இரண்டுமே சரி**

D) I, II இரண்டுமே தவறு

77. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. பாக்களை ஓசைகளைக் கொண்டே அறியலாம். ஒவ்வொரு பாவும் ஓசையால் வேறுபட்டது.

II. ஓசையானது செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்று நான்கு வகைப்படும்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II இரண்டுமே தவறு

**D) I, II இரண்டுமே சரி**

78. ________________ வெண்பாவிற்குரியது. அறம் கூறும், குறளும் நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளன.

**A) செப்பலோசை**

B) அகவல் ஓசை

C) துள்ளல் ஓசை

D) தூங்கல் ஓசை

79. ________________ ஆசிரியப்பாவுக்கு உரியது. இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா என்னும் ஆசிரியப்பா.

A) செப்பலோசை

**B) அகவல் ஓசை**

C) துள்ளல் ஓசை

D) தூங்கல் ஓசை

80. சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களும் ________________ இல் அமைந்தவை.

A) வெண்பா

B) வஞ்சிப்பா

C) கலிப்பா

**D) அகவற்பா**

81. செய்யுளில் இடையிடையே உயர்ந்து வருவது ________________ இது கலிப்பாவுக்கு உரியது.

A) செப்பலோசை

B) அகவல் ஓசை

**C) துள்ளல் ஓசை**

D) தூங்கல் ஓசை

82. ________________ வஞ்சிப்பாவுக்கு உரியது.

A) செப்பலோசை

**B) தூங்கல் ஓசை**

C) துள்ளல் ஓசை

D) அகவல் ஓசை

83. தளை எத்தனை வகைப்படும்?

A) 4

B) 5

C) 6

**D) 7**

84. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியது எது?

I. வெண்பா – 1. நான்கு வகை

II. ஆசிரியப்பா – 2. நான்கு வகை

III. கலிப்பா – 3. இரண்டு வகை

IV. வஞ்சிப்பா – 4. ஐந்து வகை

A) I – 1; II – 2; III – 3; IV – 4

**B) I – 4; II – 1; III – 2; IV – 3**

C) I – 4; II – 3; III – 2; IV – 1

D) I – 2; II – 4; III – 1; IV – 3

85. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியது எது?

I. வெண்பா – 1. தூங்கல் ஓசை

II. ஆசிரியப்பா – 2. துள்ளல் ஓசை

III. கலிப்பா – 3. அகவல் ஓசை

IV. வஞ்சிப்பா – 4. செப்பல் ஓசை

A) I – 1; II – 2; III – 3; IV – 4

B) I – 4; II – 1; III – 2; IV – 3

**C) I – 4; II – 3; III – 2; IV – 1**

D) I – 2; II – 4; III – 1; IV – 3

86. யாப்போசை தரும் பாவோசை (யாப்பதிகாரம், புலவர் குழந்தை) – சரியாகப் பொருந்தியது எது?

I. செப்பல் ஓசை – 1. கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை, அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது

II. அகவல் ஓசை – 2. இருவர் உரையாடுவது போன்ற ஓசை

III. துள்ளல் ஓசை – 3. சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரும் ஓசை, தாழ்ந்தே வருவது

IV. தூங்கல் ஓசை – 4. ஒருவர் பேசுதல் (சொற்பொழிவாற்றுவது) போன்ற ஓசை

A) I – 1; II – 2; III – 3; IV – 4

B) I – 4; II – 1; III – 2; IV – 3

C) I – 4; II – 3; III – 2; IV – 1

**D) I – 2; II – 4; III – 1; IV – 3**

87. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்று ஐந்துவகை வெண்பாக்கள் உள்ளன.

II. நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்று நான்கு வகை ஆசிரியப்பாக்கள் உள்ளன.

III. ஒத்தாழிசைக் கலிப்பா, வெண் கலிப்பா, கொச்சகக் கலிப்பா என அடிப்படையில் கலிப்பா என மூவகைப்படும்.

IV. குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என வஞ்சிப்பா இரண்டு வகைப்படும்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II, III மட்டும் சரி

C) I, II, IV மட்டும் சரி

D) III, IV மட்டும் சரி

88. வெண்பா பொது இலக்கணம் – சரியானவற்றைத் தேர்ந்தெடு.

I. ஓசை: செப்பல் ஓசை பெற்று வரும்.

II. சீர்: ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.

III. தளை: இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும்.

IV. அடி: இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்.)

V. முடிப்பு: ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

A) I, II, III மட்டும் சரி

**B) I, II, III, IV, V அனைத்தும் சரி**

C) II, IV, V மட்டும் சரி

D) IV, V மட்டும் சரி

89. ஆசிரியப்பா (அகவற்பா) பொது இலக்கணம் – சரியானவற்றைத் தேர்ந்தெடு.

I. ஓசை: அகவல் ஓசை பெற்று வரும்.

II. சீர்: ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.

III. தளை: ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.

IV. அடி: மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.

V. முடிப்பு: ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

A) I, II, III மட்டும் சரி

B) II, IV, V மட்டும் சரி

**C) I, II, III, IV, V அனைத்தும் சரி**

D) IV, V மட்டும் சரி

90. சீர் கொடுக்கப்பட்டுள்ளது. அசை மற்றும் வாய்ப்பாடு முறையே சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. சீர் (உல/கத்/தோ) – அசை (நிரை நேர்); வாய்ப்பாடு (புளிமா)

II. சீர் (டொட்/ட) – அசை (நிரை நேர் நேர்); வாய்ப்பாடு (புளிமாங்காய்)

III. சீர் (வொழு/கல்) – அசை (நிரை நேர் நேர்); வாய்ப்பாடு (புளிமாங்காய்)

IV. சீர் (பல/கற்/றும்) – அசை (நேர் நேர்); வாய்ப்பாடு (தேமா)

A) I – 1; II – 2; III – 3; IV – 4

B) I – 4; II – 1; III – 2; IV – 3

C) I – 4; II – 3; III – 2; IV – 1

**D) I – 2; II – 4; III – 1; IV – 3**

91. சீர் கொடுக்கப்பட்டுள்ளது. அசை மற்றும் வாய்ப்பாடு முறையே சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. சீர் (உல/கத்/தோ) – அசை (நேர் நேர்); வாய்ப்பாடு (தேமா)

II. சீர் (கல்/லார்) – அசை (நிரை நேர் நேர்); வாய்ப்பாடு (புளிமாங்காய்)

III. சீர் (அறி/விலா) – அசை (நிரை நிரை); வாய்ப்பாடு (கருவிளம்)

IV. சீர் (தார்) – அசை (நேர்); வாய்ப்பாடு (நாள்)

A) I – 1; II – 2; III – 3; IV – 4

**B) I – 2; II – 1; III – 3; IV – 4**

C) I – 4; II – 3; III – 2; IV – 1

D) I – 2; II – 4; III – 1; IV – 3

92. ஓரசைச் சீர் (அசை மற்றும் வாய்ப்பாடு) சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. நேர் – பிறப்பு

II. நிரை – காசு

III. நேர்பு – மலர்

IV. நிரைபு – நாள்

A) I – 1; II – 2; III – 3; IV – 4

B) I – 2; II – 1; III – 3; IV – 4

**C) I – 4; II – 3; III – 2; IV – 1**

D) I – 2; II – 4; III – 1; IV – 3

93. ஈரசைச் சீர் (அசை மற்றும் வாய்ப்பாடு) சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. நேர் நேர் – புளிமா

II. நிரை நேர் – தேமா

III. நிரை நிரை – கருவிளம்

IV. நேர் நிரை – கூவிளம்

A) I – 1; II – 2; III – 3; IV – 4

**B) I – 2; II – 1; III – 3; IV – 4**

C) I – 4; II – 3; III – 2; IV – 1

D) I – 2; II – 4; III – 1; IV – 3

94. மூவசைச் சீர் (அசை மற்றும் வாய்ப்பாடு) சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. நேர் நேர் நேர் – கருவிளங்காய்

II. நிரை நேர் நேர் – தேமாங்காய்

III. நிரை நிரை நேர் – கூவிளங்காய்

IV. நேர் நிரை நேர் – புளிமாங்காய்

A) I – 1; II – 2; III – 3; IV – 4

B) I – 2; II – 1; III – 3; IV – 4

C) I – 4; II – 3; III – 2; IV – 1

**D) I – 2; II – 4; III – 1; IV – 3**

95. மூவசைச் சீர் (அசை மற்றும் வாய்ப்பாடு) சரியாகப் பொருந்தியவற்றைத் தேர்ந்தெடு.

I. நேர் நேர் நிரை – தேமாங்கனி

II. நிரை நேர் நிரை – புளிமாங்கனி

III. நிரை நிரை நிரை – கருவிளங்கனி

IV. நேர் நிரை நிரை – கூவிளங்கனி

**A) I – 1; II – 2; III – 3; IV – 4**

B) I – 2; II – 1; III – 3; IV – 4

C) I – 4; II – 3; III – 2; IV – 1

D) I – 2; II – 4; III – 1; IV – 3

96. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

I. குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும். முதலடி நான்கு சீராகவும் (அளவடி), இரண்டாம் அடி மூன்று சீராகவும் (சிந்தடி) வரும்.

II. அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல் ஆகும்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) I, II இரண்டும் தவறு

**D) I, II இரண்டும் சரி**

97. மேன்மை தரும் அறம் என்பது ________________?

**A) கைமாறு கருதாமல் அறம் செய்வது**

B) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

C) புகழ் கருதி அறம் செய்வது

D) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

winmeen.com

98. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ________________?

A) காலம் மாறுவதை

B) வீட்டைத் துடைப்பதை

**C) இடையறாது அறப்பணி செய்தலை**

D) வண்ணம் பூசுவதை

99. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்?

A) உதியன்; சேரலாதன்

**B) அதியன்; பெருஞ்சாத்தன்**

C) பேகன்; கிள்ளிவளவன்

D) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

100. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ________________?

**A) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**

B) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

C) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

D) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

101. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ________________?

**A) அகவற்பா**

B) வெண்பா

C) வஞ்சிப்பா

D) கலிப்பா

102. இலக்கணக் குறிப்பு எழுதுக – கொள்க, குரைக்க

A) வினைத்தொகை

B) பண்புத்தொகை

**C) வியங்கோள் வினைமுற்று**

D) வினையெச்சசம்

103. மரம் தேடிய களைப்பு மின்கம்பியில் இளைப்பாறும் குருவி – இந்த பாடல்வரியின் ஆசிரியர் யார்?

**A) நாணற்காடன்**

B) ந. காமராசன்

C) சுஜாதா

D) அழ. வள்ளியப்பா

104. விற்பனையில் காற்றுப் பொட்டலம் சிக்கனமாய் மூச்சு விடவும் – இந்த பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) நாணற்காடன்

B) ந. காமராசன்

**C) புதுவைத் தமிழ் நெஞ்சன்**

D) அழ. வள்ளியப்பா

105. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில் ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே – இந்தப் பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) தாயுமானவர்

B) திரு.வி.க

C) உ.வே.சாமிநாதர்

**D) வள்ளலார்**

106. கலைச்சொல் அறிவோம் சரியானது எது?

I. Belief – நம்பிக்கை

II. Philosopher – மெய்யியலாளர்

III. Renaissance – மறுமலர்ச்சி

IV. Revivalism – மீட்டுருவாக்கம்

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

106. நூல்கள் மற்றும் ஆசிரியர் பெயர் – சரியானது எது?

I. அறமும் அரசியலும் – மு. வரதராசனார்

II. அபி கவிதைகள் – அபி

III. எண்ணங்கள் – எம்.எஸ்.உதயமூர்த்தி

IV. அக்னி சிறகுகள் – நேரு

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

winmeen.com

# 10th Tamil Questions - Unit 9

1. கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் யார்?

A) ராஜேஷ் குமார்

**B) ஜெயகாந்தன்**

C) ராஜம் கிருஷ்ணன்

D) சுஜாதா

2. சமகாலக் கருத்துகளையும் நிகழ்வுகளையும் சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர் யார்?

**A) ஜெயகாந்தன்**

B) ராஜேஷ் குமார்

C) ராஜம் கிருஷ்ணன்

D) சுஜாதா

3. சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என எதைத் தொட்டாலும் தனிமுத்திரை பதித்தவர்; இலக்கியத்திற்கான பெரும் விருதுகளை வென்றவர்; மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர் – இந்த கூற்று யாரைப்பற்றியது?

A) சுஜாதா

B) ராஜேஷ் குமார்

C) ராஜம் கிருஷ்ணன்

**D) ஜெயகாந்தன்**

4. கீழ்க்கண்டவற்றுள், ஜெயகாந்தன் அவர்களின் காலம் எது?

**A) 24.04.1934 முதல் 08.04.2015 வரை**

B) 24.04 1930 முதல் 08.04.2012 வரை

C) 24.04 1928 முதல் 08.04.2009 வரை

D) 24.04 1925 முதல் 08.04.2005 வரை

5. ஜெயகாந்தன் அவர்கள் பெற்ற விருதுகள் எவை?

I. மேன் புக்கர் பரிசு

II. ஞானபீட விருது, தாமரைத்திரு விருது

III. சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்)

IV. சாகித்திய அகாதெமி விருது – சில நேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)

V. குடியரசுத் தலைவர் விருது (உன்னைப் போல் ஒருவன் – திரைப்படம்)

A) I, II, III மட்டும் சரி

B) II, III, V மட்டும் சரி

C) I, II, III, IV, V அனைத்தும் சரி

**D) II, III, IV, V மட்டும் சரி**

6. சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர். நேர்முக எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர். தன்னையறிதல் என்பதிலும் தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர் – இந்த கூற்று யாரைப்பற்றியது?

**A) ஜெயகாந்தன்**

B) ராஜேஷ் குமார்

C) ராஜம் கிருஷ்ணன்

D) சுஜாதா

7. கீழ்க்கண்டவற்றுள், ஜெயகாந்தன் கூறிய கூற்றுகள் எது?

I. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு, என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு, நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும் எனது தனிமுயற்சியின் பயனுமாகும்.

II. இந்த நாட்டில், வியாசன் முதல் பாரதி வரை எதற்காக எழுதினார்கள்? இவர்களில் யாராவது கலையைத் தாங்கிப் பிடிக்க என்று சொல்லிக் கொண்டதுண்டா? இவர்களைவிட கலையைத் தாங்கியவர்களும், காலம் காலமாய் வாழும், வாழப்போகும் கலா சிருஷ்டிகளைத் தந்தவர்களும் உண்டா?

III. தர்மார்த்தங்களை உபதேசிக்கவே வியாஸர் பாரதத்தை எழுதினார்.

IV. தமிழ் நூல்களில் எனக்கு மிகவும் பிடித்த நூல், குற்றாலக் குறவஞ்சி.

A) I, II, III, IV அனைத்தும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) I, II மட்டும் சரி

D) I மட்டும் சரி

8. தமிழ் இலக்கணமே நூலினியல்பாவது என்னவென்று சொல்லும் போது, "நூலினியல்பே நுவலின் ஓரிரு பாயிரந்தோற்றி மும்மை யினொன்றாய் நாற்பொருட் பயத்தலொடு எழுமதந் தழுவி" என்று நூலின் பயன் ________________ என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும் என்று சொல்லி அதன் பின்னர்தான் விளக்கங்களைக் கூறிச் செல்கிறது, என்று ஜெயகாந்தன் கூறுகிறார். 'நாற்பொருட் பயத்தலொடு' – இதில் குறிப்பிடப்படுவது யாது?

A) கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு

**B) அறம், பொருள் இன்பம் வீடு**

C) ரிக், யஜூர், சாம, அதர்வணம்

D) மேல், கீழ், பள்ளம், மேடு

9. கீழ்க்கண்டவற்றுள், ஜெயகாந்தன் கூறிய கூற்றுகள் எது?

I. கலைத்தன்மைக்கு எந்தவிதக் குறையும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்துதான் நான் எழுதுகிறேன்.

II. அர்த்தமே வடிவத்தை வளமாக்குகிறது அல்லவா? வெறும் வடிவம் மரப்பாச்சிதான். ஆகையினால் இவற்றைப் பிரித்துக்கொண்டு அவஸ்தைக்கு உள்ளாகின்றார். நமது அறியாமையால் அவஸ்தைகளுக்குள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன்.

III. கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம். பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது;

IV. எதற்காக எழுதுகிறேன்? என்று நான் சொன்ன காரணங்களுக்குப் புறம்பாக நடத்தால் நான் கண்டிக்கப்படவும், திருத்தப்படவும் உட்பட்டிருக்கிறேன்.

A) I, II மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

10. "ஜெயகாந்தான், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்" என்று ஜெயகாந்தன் அவர்களைப் பற்றிக் கூறியவர் யார்?

**A) அசோகமித்திரன்**

B) கா. செல்லப்பன்

C) ந. காமராசன்

D) வாலி

11. கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புதுவிளக்கங்கள், ஆழம், கனம் இந்த அம்சங்களை இவருடைய சிறுகதைகளில் பூரணமாகக் காணலாம். அதுமட்டுமின்றிப் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை. என்று ஜெயகாந்தன் அவர்களைப் பற்றிக் கூறிய இதழ் எது?

A) தினமலர் (1972)

B) தினத்தந்தி (1970)

**C) வாசகர்களின் கருத்து – தீபம் இதழ் (1967)**

D) இந்தியன் டைம்ஸ் (2000)

12. நேர்கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் – இவைகள் தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். 'படிக்காத மேதை' என்று குறிப்பிடப்படும் அவர் முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர் – என்று ஜெயகாந்தன் அவர்களைப் பற்றிக் கூறியவர் யார்?

A) அசோகமித்திரன்

**B) கா. செல்லப்பன்**

C) ந. காமராசன்

D) வாலி

13. ஜெயகாந்தன் அவர்களின் சிறுகதைத் தொகுப்புகளுள், சரியானது எது?

I. அம்புப் படுக்கை, கண்ணாடி, பேசும் பூனை

II. குருபீடம், யுகசந்தி, ஒருபிடி சோறு

III. உண்மை சுடும், இனிப்பும் கரிப்பும்

IV. தேவன் வருவாரா, புதிய வார்ப்புகள்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) II, III, IV மட்டும் சரி**

14. ஜெயகாந்தன் அவர்களின் குறும்புதினங்களுள், சரியானது எது?

I. பிரளயம், கைவிலங்கு, ரிஷிமூலம்

II. பிரம்ம உபதேசம், யாருக்காக அழுதான்?

III. ஆயிரத்தொரு இரவுகள், சாரப்பள்ளம் சாமுண்டி

IV. கருணையினால் அல்ல, சினிமாவுக்குப் போன சித்தாளு

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, II, IV மட்டும் சரி**

D) II, III, IV மட்டும் சரி

15. ஜெயகாந்தன் அவர்களின் புதினங்களுள், சரியானது எது?

I. பாரீசுக்குப் போ, சுந்தர காண்டம், இன்னும் ஒரு பெண்ணின் கதை

II. பார்த்திபன் கனவு, அலை ஓசை

III. உன்னைப் போல் ஒருவன், கங்கை எங்கே போகிறாள்

IV. ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, III, IV மட்டும் சரி**

D) II, III, IV மட்டும் சரி

16. ஜெயகாந்தன் அவர்களின் திரைப்படமான படைப்புகளுள், சரியானது எது?

I. முள்ளும் மலரும்

II. சில நேரங்களில் சில மனிதர்கள், ஊருக்கு நூறுபேர்

III. உன்னைப்போல் ஒருவன், யாருக்காக அழுதான்

IV. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) II, III, IV மட்டும் சரி**

17. எழுத்தாளர், ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை. தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ________________, பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.

A) சி.சு.செல்லப்பா

B) சுஜாதா

C) ராஜம் கிருஷ்ணன்

**D) ஜெயகாந்தன்**

18."ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியன் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம். ஓர் எழுத்தாளன் ஆத்ம சுக்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" (1966) – இந்த கூற்று எதனுடன் தொடர்புடையது?

**A) பாரீசுக்குப்போ … புதினத்தின் முன்னுரை**

B) சுந்தர காண்டம் … புதினத்தின் முன்னுரை

C) உன்னைப் போல் ஒருவன் … புதினத்தின் முன்னுரை

D) இன்னும் ஒரு பெண்ணின் கதை … புதினத்தின் முன்னுரை

19. இன்னுமொரு முகம் (கவிதை) – ஜெயகாந்தன் சில கவிதைகளையும் திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அது. ________________ அவர்கள் பற்றிய ஜெயகாந்தன் கவிதை இது. 'எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் – ஏழை கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும் பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் – பழைய மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்'.

A) அண்ணா

B) கண்ணதாசன்

C) வாலி

**D) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

20. ஜெயகாந்தன் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில். கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை? (பேட்டி – திரு. கிருஸ்ணமணி, DEO 1966) நுணுக்கமா? அப்படித் தனியாக தான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை, என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே.

II. உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப் பெரிய சவால் எது? மகத்தான சாதனை – பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தது. மிகப் பெரிய சவாலும் அதுவே.

III. இந்த வயதில், தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும் போது எப்படி இருக்கிறது? காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) I, II, III அனைத்தும் சரி**

21. கீழ்க்கண்டவர்களுள், 'சிறுகதை மன்னன்' என்று அழைக்கப்படுபவர் யார்?

A) கல்கி

**B) ஜெயகாந்தன்**

C) அநுத்தமா

D) சி.சு.செல்லப்பா

22. ஜெயகாந்தன் அவர்களின் 'யுகசந்தி' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ள சிறுகதை தொகுப்பு எது?

**A) தர்க்கத்திற்கு அப்பால்**

B) சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்

C) சிந்தும் ஒளி

D) நாழிக்கிணறு

23. தான் வாழ்ந்த காலத்தில் சிக்கல்கள் பலவற்றை ஆராய, எடுத்துச்சொல்ல, தன் பார்வைக்கு உட்பட்ட தீர்ப்பைச் சொல்ல அவர் மேற்கொண்ட நடவடிக்கையே படைப்பு. அவருடைய படைப்புகள் உணர்ச்சி சார்ந்த எதிர்வினைகளாக இருக்கின்றன. இதுவே அவருக்குச் 'சிறுகதை மன்னன்' என்ற பட்டத்தைத் தேடித்தந்தது. இவர் குறும்புதினங்களையும் புதினங்களையும் கட்டுரைகளையும் கவிதைகளையும் படைத்துள்ளார்; தன் கதைகளைத் திரைப்படமாக இயக்கியிருக்கிறார்; தலைசிறந்த உரத்த சிந்தனைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார்; சாகித்திய அகாதெமி விருதையும், ஞானபீட விருதையும் பெற்ற இவருடைய கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன – இந்த கூற்று யாரைப்பற்றியது?

A) கல்கி

B) அநுத்தமா

**C) ஜெயகாந்தன்**

D) சி.சு.செல்லப்பா

24. பொற்காலமாக இருந்தாலும் இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும் தொலைந்ததே வாழ்வு என தலையில் கைவைத்து புலம்புவார் பூமியிலே தன் வாழ்வு தொலைக்காமல் தற்காத்து வைப்பதற்காய் தலையில் கைவைப்பாள் இவள். வாழ்வில் தலைக்கனம் பிடித்தவர் உண்டு. தலைக்கனமே வாழ்வாக ஆகிப்போனது இவளுக்கு – இந்தப் பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) மு. வரதராசனார்

B) துரை மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பெருஞ்சித்திரனார்

**C) முகம்மது ரஃபி என்ற இயற்பெயர் கொண்ட நாகூர் ரூமி**

D) தாயுமானவர்

25. அடுக்குமாடி அலுவலகம் எதுவாயினும் அடுத்தவர் கனவுக்காக அலுக்காமல் இவள் சுமக்கும் கற்களெல்லாம் அடுத்தவேளை உணவுக்காக செத்தாலும் சிறிதளவே சலனங்கள் ஏற்படுத்தும் சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது – இந்தப் பாடல் வரிகளின் ஆசிரியர் பிறந்த ஊர் எது?

**A) தஞ்சை மாவட்டம்**

B) விருதுநகர் மாவட்டம்

C) ஈரோடு மாவட்டம்

D) நெல்லை மாவட்டம்

26. சித்தாளு என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?

A) ந. மு. வேங்கடசாமி நாட்டார்

B) பெருஞ்சித்திரனார்

**C) முகம்மது ரஃபி என்ற இயற்பெயர் கொண்ட நாகூர் ரூமி.**

D) வாணிதாசன்

27. முகம்மது ரஃபி என்ற இயற்பெயர் கொண்ட நாகூர் ரூமி எண்பதுகளில் _____________________ இதழில் எழுதத் தொடங்கியவர். கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பலதளங்களில் இவர் தொடர்ந்து இயங்கி வருபவர். மீட்சி, சுபமங்களா, புதிய பார்வை, குங்குமம், கொல்லிப்பாவை, இலக்கிய வெளிவட்டம், குமுதம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன.

A) இந்தியா

**B) கணையாழி**

C) விகடன்

D) இவற்றில் ஏதுமில்லை

28. முகம்மது ரஃபி என்ற இயற்பெயர் கொண்ட நாகூர்ரூமி அவர்களின் கவிதை மற்றும் நாவல்களில் சரியானது எது?

I. நதியின் கால்கள், ஏழாவது சுவை (கவிதை)

II. சொல்லாத சொல் (கவிதை)

III. ஒரு கிராமத்து நதி (நாவல்)

IV. கப்பலுக்குப் போன மச்சான் (நாவல்)

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) I, II, IV மட்டும் சரி**

29. தேம்பாவணி நூலின் ஆசிரியர் யார்?

**A) வீரமாமுனிவர்**

B) ஜி.யு.போப்

C) கால்டுவெல்

D) சீகன்பால்கு

30. கிறித்துவிற்கு முன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை ________________ என்றும் குறிப்பிடுவர். இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி. வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் _________________ என்று பெயரிட்டுள்ளார்.

A) சிந்துவன், யேசன்

B) காளியப்பன், சூரன்

C) தேனப்பன், விஜயன்

**D) அருளப்பன், கருணையன்**

31. சொல்லும் பொருளும் சரியாகப் பொருந்தியது எது?

I. சேக்கை – படுக்கை

II. யாக்கை – உடல்

III. பிணித்து – கட்டி

IV. வாய்ந்த – பயனுள்ள

A) I, III மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

32. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்கென்று அம்பூஞ் சேக்கையைப் பரப்பி இங்கண் திருந்திய அறத்தை யாவும் யாக்கையைப் பிணித்தென்று ஆக இனிதிலுள் அடக்கி வாய்ந்த ஆக்கையை அடக்கிப் பூவோடு அழுங்கணீர் பொழிந்தான் மீதே – இந்த பாடல் வரிகளின் ஆசிரியர் பெயர் என்ன? மற்றும் இந்த பாடலோடு தொடர்புடைய பொருள் எது?

A) சீகன்பால்கு, இயற்கை கொண்ட பரிவு

**B) வீரமாமுனிவர், எலிசபெத் அம்மையார் அடக்கம், கருணையன் கண்ணீர்**

C) ஜி.யு.போப், கண்ணீர்ப் பந்தல்

D) கால்டுவெல், அமைதியின் சிகரம்

33. வாய்மணி யாகக் கூறும் வாய்மையே மழைநீ ராகித் தாய்மணி யாக மார்பில் தயங்கியுள் குளிர வாழ்ந்தேன் தூய்மணி யாகத் தூவும் துளியிலது இளங்கூழ் வாடிக் காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ – இந்த பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) தொன்னூல் விளக்கம்

B) சீறாப்புராணம்

C) மணிமேகலை

**D) தேம்பாவணி**

34. சொல்லும் பொருளும் சரியானது எது?

I. இளங்கூழ் – இளம்பயிர்

II. தயங்கி – அசைந்து

III. காய்ந்தேன் – வருந்தினேன்

A) I மட்டும் சரி

**B) I, II, III அனைத்தும் சரி**

C) II, III மட்டும் சரி

D) I, III மட்டும் சரி

35. சொல்லும் பொருளும் சரியானவற்றை தேர்ந்தெடுக்க.

I. கொம்பு – 1. வாழும் வழி

II. புழை – 2. துளை

III. கான் – 3. காடு

IV. தேம்ப – 4. வாட

V. அசும்பு – 5. நிலம்

VI. உய்முறை – 6. கிளை

A) I – 6; II – 5; III – 4; IV – 3; V – 2; VI – 1

B) I – 6; II – 5; III – 4; IV – 3; V – 2; VI – 1

**C) I – 6; II – 2; III – 3; IV – 4; V – 5; VI – 1**

D) I – 3; II – 5; III – 1; IV – 6; V – 2; VI – 4

36. சொல்லும் பொருளும் சரியானவற்றை தேர்ந்தெடுக்க.

I. ஓர்ந்து – 1. வாழும் வழி

II. படலை – 2. மணமலர்

III. உவமணி – 3. மலர்கள்

IV. துணர் – 4. விலக்கி

V. கடிந்து – 5. மாலை

VI. உய்முறை – 6. நினைத்து

A) I – 6; II – 5; III – 4; IV – 3; V – 2; VI – 1

**B) I – 6; II – 5; III – 2; IV – 3; V – 4; VI – 1**

C) I – 6; II – 2; III – 3; IV – 4; V – 5; VI – 1

D) I – 3; II – 5; III – 1; IV – 6; V – 2; VI – 4

37. விரிந்தன கொம்பில் கொய்த வீயென உள்ளம் வாட எரிந்தன நுதிநச்சு அம்புண்டு இரும்புழைப் புண்போல் நோகப் பிரிந்தன புள்ளின் கானில் பெரிதழுது இரங்கித் தேம்பச் சரிந்தன அசும்பில் செல்லும் தடவிலா தனித்தேன் அந்தோ! – இந்த பாடல்வரிகளுடன் தொடர்புடைய கூற்று எது?

A) இப்பெருங்காப்பியம் 6 காண்டங்களையும் 60 படலைங்களையும் உள்ளடக்கியது

B) இப்பெருங்காப்பியம் 12 காண்டங்களையும் 96 படலைங்களையும் உள்ளடக்கியது

**C) இப்பெருங்காப்பியம் 3 காண்டங்களையும் 36 படலைங்களையும் உள்ளடக்கியது**

D) இப்பெருங்காப்பியம் 30 காண்டங்களையும் 360 படலைங்களையும் உள்ளடக்கியது

38. உய்முறை அறியேன்; ஓர்ந்த உணர்வினொத்து உறுப்பும் இல்லா மெய்முறை அறியேன்; மெய்தான் விரும்பிய உணவு தேடச் செய்முறை அறியேன்; கானில் செல்வழி அறியேன்; தாய்தன் கைமுறை அறிந்தேன் தாயும் கடிந்தெனைத் தனித்துப் போனாள் – இந்த பாடல்வரிகளுடன் தொடர்புடைய கூற்று எது?

**A) இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலில் 3615 பாடல்களை உள்ளன**

B) இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலில் 6615 பாடல்களை உள்ளன

C) இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலில் 1615 பாடல்களை உள்ளன

D) இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலில் 2615 பாடல்களை உள்ளன

39. நவமணி வடக்க யில்போல் நல்லறப் படலைப் பூட்டும் தவமணி மார்பன் சொன்ன தன்னிசைக்கு இசைகள் பாடத் துவமணி மரங்கள் தோறும் துணர்அணிச் சுனைக ள் தோறும் உவமணி கானம்கொல் என்று ஒலித்து அழுவ போன்றே – இந்த பாடல்வரிகள் உள்ள நூலின் காலம்?

A) 15 ஆம் நூற்றாண்டு

B) 16 ஆம் நூற்றாண்டு

**C) 17 ஆம் நூற்றாண்டு**

D) 18 ஆம் நூற்றாண்டு

40. இலக்கணக் குறிப்பு – சரியானது எது?

I. காக்கென்று – 1. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

II. கணீர் – 2. வேற்றுமைத்தொகை

III. மெய்முறை – 3. கண்ணீர் என்பதன் இடைக்குறை

IV. கைமுறை – 4. காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்

A) I – 1; II – 4; III – 2; IV – 3

B) I – 2; II – 3; III – 1; IV – 4

**C) I – 4; II – 3; III – 2; IV – 1**

D) I – 1; II – 2; III – 3; IV – 4

41. காய்மணி, உய்முறை, செய்முறை – இலக்கணக் குறிப்பு தருக?

A) வேற்றுமைத்தொகை

B) உவமைத்தொகை

C) அன்மொழித்தொகை

**D) வினைத்தொகை**

42. பகுபத உறுப்பிலக்கணம் சரியானது எது?

I. அறியேன் – அறி + ய் + ஆ + ஏன்

II. அறி – பகுதி; ய் – சந்தி

III. ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது

IV. ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

A) I, II, III மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி.**

43. பகுபத உறுப்பிலக்கணம் சரியானது எது?

I. ஒலித்து – ஒலி + த் + த் + உ

II. ஒலி – பகுதி;

III. த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை

IV. உ – வினையெச்ச விகுதி

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

D) I, II, III மட்டும் சரி

44. இஸ்மத் சன்னியாசி என்பது எந்த மொழிச்சொல்? இதன் பொருள் என்ன?

A) பெர்சியன், உலகைத் துறந்தவன்

B) உருது, அழிவில்லாதவன்

C) அரபு, ஆற்றல் மிக்கவன்

**D) பாரசீகம், தூய துறவி**

45. வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட ________________ என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார். இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த மன்னன் இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார்.

A) இராணி மங்கம்மாள்

B) திப்பு சுல்தான்

**C) சந்தாசாகிப்**

D) ஹுமாயூன்

46. தேம்பாவணி பற்றிய கூற்றுகளுள் சரியானது எது?

I. தேம்பா + அணி எனப் பிரித்து வாடாதமாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்து தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது.

II. கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது.

III. இப்பெருங்காப்பியம் 3 காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கி, 3615 பாடல்களைக் கொண்டுள்ளது.

IV. 17 ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி. இக்காப்பியத்தை இயற்றியவர் வீரமாமுனிவர். இவரது இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி.

A) I, II மட்டும் சரி

B) I, IV மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

47. வீரமாமுனிவர் அவர்களின் நூல்களில் சரியானது எது?

I. தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, சிற்றிலக்கியங்கள்

II. ஆட்டனத்தி ஆதிமந்தி

III. உரைநடை நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள்

IV. பரமார்த்தக் குருகதைகள், தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்)

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

**C) I, III, IV மட்டும் சரி**

D) I, II, III, IV அனைத்தும் சரி

48. இயேசு காவியம் – நூலின் ஆசிரியர் யார்?

A) வீரமாமுனிவர்

**B) கண்ணதாசன்**

C) கால்டுவெல்

D) தாயுமானவர்

49. ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து அரசு பட அமர் உழக்கி (திருவாரூர் மாவட்டத்தின் ஆலங்கானம்) – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

winmeen.com

A) பட்டினப்பாலை

B) குறுந்தொகை

**C) மதுரைக்காஞ்சி**

D) நற்றிணை

50. ஒருவன் இருக்கிறான் கதை _________________ என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

A) சி. சு. செல்லப்பா சிறுகதைகள்

B) ந. காமராசன் நூல்கள்

**C) கு. அழகிரிசாமி சிறுகதைகள்**

D) ராஜம் கிருஷ்ணன் கதைகள்

51. கீழ்க்கண்டவர்களுள், கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர் யார்?

**A) கு. அழகிரிசாமி**

B) பூமணி

C) தர்மன்

D) காமராசன்

52. இவர், அரசுப்பணியை உதறிவிட்டு முழுதாக எழுத்துப்பணியை மேற்கொண்டவர்; மென்மையான நகைச்சுவையும் சோக இழையும் ததும்பக் கதைகளைப் படைப்பதில் பெயர் பெற்றவர்; கி.ரா.வுக்கு இவர் எழுதிய கடிதங்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை. படைப்பின் உயிரை முழுமையாக உணர்ந்திருந்த இவர் பல இதழ்களில் பணியாற்றியவர்; மலேசியாவில் இருந்தபோது அங்குள்ள படைப்பாளர்களுக்குப் படைப்பு தொடர்பான பயிற்சி அளித்தவர். இவர் பதிப்புப் பணி, நாடகம் எனப் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். தமிழ் இலக்கியத்தில் ஆர்வம்கொண்டு திறனாய்வு நூல்களையும் படைத்தவர் – இந்த கூற்று யாரைப்பற்றியது?

A) ராஜம் கிருஷ்னன்

B) சுஜாதா

C) கல்கி

**D) கு. அழகிரிசாமி**

53. இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது _________________ அணி எனப்படும்.

A) உருவக

B) பிறிது மொழிதல்

C) வஞ்சப் புகழ்ச்சி

**D) தற்குறிப்பேற்ற**

54. ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி _________________ அணி எனப்பட்டது.

**A) தீவக**

B) பிறிது மொழிதல்

C) வஞ்சப் புகழ்ச்சி

D) தற்குறிப்பேற்ற

55. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது _________________ எனப்படும்.

A) தீவக அணி

**B) நிரல்நிறை அணி**

C) வஞ்சப் புகழ்ச்சி அணி

D) தற்குறிப்பேற்ற அணி

56. எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது ________________ அணியாகும்.

A) தீவக அணி

B) நிரல்நிறை அணி.

**C) தன்மை அணி**

D) தற்குறிப்பேற்ற அணி

57. தன்மை அணி – கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர். இவ்வணி நான்கு வகைப்படும். பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி என்பனவாகும்.

II. (எ.கா.) மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக் கோன் கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில் உண்டளவே தோற்றான் உயிர். (சிலம்பு – வழக்குரை காதை வெண்பா)

III. பாடலின் பொருள் – உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான்.

IV. கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்.

A) I, III, IV மட்டும் சரி

B) I, II, IV மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

58. "எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ் சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்"– இந்தப் பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) தண்டியலங்காரம்**

B) தொல்காப்பியம்

C) திருக்குறள்

D) புறநானூறு

59. நிரல்நிறை அணி சரியான கூற்று எது?

I. நிரல் = வரிசை; நிறை = நிறுத்துதல். சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்.

II. (எ.கா.) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.

III. பாடலின் பொருள்: இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

IV. அணிப்பொருத்தம்: இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும்.

**A) I, II, III, IV அனைத்தும் சரி**

B) I, II, IV மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

D) I, III, IV மட்டும் சரி

60. தீவக அணி சரியான கூற்று எது?

I. தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

II. இது முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என்னும் மூன்று வகையாக வரும்.

III. (எ.கா.) சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர் ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்து திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும், மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து (சேந்தன–சிவந்தன; தெவ்–பகைமை; சிலை–வில்; மிசை–மேலே; புள்–பறவை;)

IV. பாடலின் பொருள்: அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன; அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள் சிவந்தன; குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன; வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகளும் சிவந்தன; குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

A) II, III, IV மட்டும் சரி

B) I, II, IV மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) I, III, IV மட்டும் சரி

61. அணிப் பொருத்தம்: வேந்தன் கண் சேந்தன தெவ்வேந்தர் தோள் சேந்தன குருதி பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன அம்பும் சேந்தன புள் குலம் வீழ்ந்து மிசைஅனைத்தும் சேந்தன – இவ்வாறாக முதலில் நிற்கும் 'சேந்தன' (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது. அதனால் இது ________________ ஆயிற்று.

**A) தீவக அணி**

B) நிரல்நிறை அணி

C) தன்மை அணி

D) தற்குறிப்பேற்ற அணி

62. தற்குறிப்பேற்ற அணி பற்றிய சரியான கூற்று எது?

I. இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

II. (எ.கா.) 'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங் கொடி 'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'

III. பாடலின் பொருள் – கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கை காட்டியது என்பது பொருள்.

IV. அணிப்பொருத்தம்: கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்ற போது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால் இளங்கோவடிகள், கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக்கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

A) II, III, IV மட்டும் சரி

B) I, II, IV மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) I, III, IV மட்டும் சரி

63. "இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்" – இவ்வடிகளில் கற்காலம் என்பது ________________?

A) தலை விதி

B) பழைய காலம்

C) ஏழ்மை

**D) தலையில் கல் சுமப்பது**

64. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது எது?

A) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்

**B) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**

C) அறிவியல் முன்னேற்றம்

D) வெளிநாட்டு முதலீடுகள்

65. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ________________ வேண்டினார்.

**A) கருணையன், எலிசபெத்துக்காக**

B) எலிசபெத், தமக்காக

C) கருணையன், பூக்களுக்காக

D) எலிசபெத், பூமிக்காக

66. வாய்மையே மழை நீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி யாது?

A) உவமை

B) தற்குறிப்பேற்றம்

**C) உருவகம்**

D) தீவகம்

67. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது ________________?

A) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

**B) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**

C) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

D) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

68. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியது எது?

I. Education is what remains after one has forgotten what one has learned in School – Albert Einstein

II. Tomorrow is often the busiest day of the week – Spanish Proverb

III. It is during our darkest moments that we must focus to see the light – Aristotle

IV. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts – Winston Churchill

A) II, III, IV மட்டும் சரி

B) I, II, IV மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) I, III, IV மட்டும் சரி

69. ________________ மன்னர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன், எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**A) சேர**

B) பாண்டிய

C) சோழ

D) பல்லவ

70. கலைச்சொல் அறிவோம் – சரியாகப் பொருந்தியது எது?

I. Humanism – 1. பண்பாட்டு எல்லை

II. Cultural Boundaries – 2. மனிதநேயம்

III. Cabinet – 3. பண்பாட்டு விழுமியங்கள்

IV. Cultural values – 4. அமைச்சரவை

A) I – 4; II – 3; III – 2; IV – 1

**B) I – 2; II – 1; III – 4; IV – 3**

C) I – 1; II – 2; III – 3; IV – 4

D) I – 3; II – 2; III – 1; IV – 4

71. நூல்கள் மற்றும் ஆசிரியர்கள் – சரியாகப் பொருந்தியது எது?

I. யானை சவாரி – 1. பாவண்ணன்

II. கல்மரம் – 2. திலகவதி

III. அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் – 3. ந. முருகேச பாண்டியன்

IV. அக்னி சிறகுகள் – 4. அப்துல் கலாம்

A) I – 4; II – 3; III – 2; IV – 1

B) I – 2; II – 1; III – 4; IV – 3

**C) I – 1; II – 2; III – 3; IV – 4**

D) I – 3; II – 2; III – 1; IV – 4

72. கருணையன் தன் தாயார் ___________ அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். அச்சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை இப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

A) சாவிதை

B) நித்யாமேரி

**C) எலிசபெத்**

D) இவற்றில் ஏதுமில்லை